விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 16 புதன்கிழமை (30.03.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 101

MADRAS CEMENTS LTD
ராம்கோ
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# புலிகளை விடுதலை செய்ய வேண்டாம்

# வேறு தரப்புகள் அறிவுரை தருகின்றன

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

**தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களின் விடுதலையை விரைவுபடுத்துமாறு நான் ஆலோசனை வழங்கிய போதிலும் வேறு தரப்பிலிருந்து அப்படிச் செய்யவேண்டாம் என அறிவுரை வழங்கப்படுவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

இலங்கையில் பணியாற்றுகின்ற சர்வதேச ஊடகங்களின் செய்தியாளர்களை நேற்று முன்தினம் அலரிமாளிகையில் சந்தித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தடுத்துவைக்கப்பட்டுள்ள புலிகளின் முன்னாள் உறுப்பினர்களை விடுதலை செய்வது தொடர்பான தீர்மானம் சட்டமா அதிபர் திணைக்களத்திடமே தங்கியுள்ளது. வழக்குகள் தொடரவேண்டிய அவசியம் இல்லை என சட்டமா அதிபர் கரு (20ஆம் பக்கம் பார்க்க)

## விருப்பு வாக்கு முறைக்கு முற்றுப்புள்ளி -ஜனாதிபதி

(கொழும்பு)

விருப்பு வாக்கு மோதல்கள் இனி ஏற்படாத வண்ணம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஆளும் கட்சி உள்ளூராட்சி சபை பிரதானிகள் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் நேற்று தமது பதவிப்பிரமாணங்களை மேற்கொண்ட தருணத்திலேயே அவர் இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

அலரி மாளி (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தராக பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் நியமனம்



(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்தின் புதிய துணை வேந்தராக பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் கடந்த 28ஆம் திகதி அமுலுக்கு வரும் வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமனம் வழங்கியுள்ளார்.

இதன் மூலம் யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் நியமனம் பெற்ற முதலாவது பெண்மணி என்ற பெருமையை பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் பெறுகிறார்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் (20ஆம் பக்கம் பார்க்க)

## நிபுணர்குழுவின் அறிக்கை கையளிப்பு எப்போது என்று முடிவு இல்லையாம்!

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறுதல் தொடர்பாக ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு தமது அறிக்கையை ஐ.நா. பொதுச் செயலாளரிடம் கையளிப்பதற்கான நாள் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என்று ஐ.நா.பொதுச் செயலாளரின் பேச்சாளர் கூறியுள்ளார்.

நேற்று நியூயோர்க்கில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த போதே ஐ.நா. பொதுச் செயலாளர் மார்டின் நெஸ்ர்க்கி இவ்வாறு கூறியுள்ளார்.

ஐ.நா. பொதுச் (20ஆம் பக்கம் பார்க்க)

## பகிடிவதையில் ஈடுபட்ட மாணவர்கள் கைது

### தலா 50 ஆயிரம் ரூபாய் பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

பகிடி வதையில் ஈடுபட்ட கோப்பாய் கல்வியியற் கல்லூரி மாணவர்கள் 15பேர் கோப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. இதில் கைதுசெய்யப்பட்ட மாணவர்களை யாழ்.நீதவான் நீதிமன்றில் பொலிஸார் நேற்று மாலை 4.15 மணியளவில் ஆஜர்ப்படுத்தினர்.

குறித்த முறைப்பாட்டை விசாரணை செய்த நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசா ஒவ்வொருவரையும் தலா 50ஆயிரம் ரூபாய் ஆட்பிணையில் விடுதலை செய்தார்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கோப்பாய் கல்வியியற் கல்லூரியில் படித்து வந்த வெளி மாவட்ட மாணவர்களை பகிடி வதைக்கு உட்படுத்தியதால் காயப்பட்டதாகக் கூறி 10 மாணவர்கள் (20ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு எல்லை வரைபடம் அமுலுக்கு

(டில்லி)

இலங்கை, இந்திய மீனவர்களின் பாதுகாப்பு, ஜீவனோபாயம் மற்றும் வளங்களின் ஸ்திரத்தன்மை ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கான பாதை வரைபடம் ஒன்றை அமுல்படுத்துவதற்கு இரு நாடுகளின் மீனவர்கள் தொடர்பான கூட்டுச்செயற்குழு இணக்கம் கண்டுள்ளது.

புதுடில்லியில் மார்ச் 28,29 ஆம் திகதிகளில் நடைபெற்ற இக் குழுவின் கூட்டத்தில் இந்த இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது.

இப் பேச்சுவார்த்தைகளில் இலங்கைத் தூதுக்குழுவுக்கு வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர் ரஞ்சித் உபயங்கொடவும் இந்தியத் தூதுக்குழுவுக்கு இந்திய வெளிவிவகார அமைச்சின் ரி.எஸ்.திருமூர்த்தியும் தலைமை தாங்கினர்.

இலங்கைத் (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.நகரில் நேற்று இரவு புடைவைக்கடை எரிந்து நாசம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரிலுள்ள புடைவைக்கடை ஒன்று திடீரென தீப்பற்றியதில் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான துணிவகைகள் எரிந்து சாம்பலாகியது.

நேற்று இரவு 7.30 மணியளவில் யாழ்ப்பாணம் முனீஸ்வரர் வீதியில் அமைந்துள்ள புடைவைக்கடை ஒன்றிலேயே இவ்வாறு தீப்பற்றிக் கொண்டது.

தீயை அணைப்பதற்கு இராணுவத்தினரும், பொலிஸாரும் நகர வர்த்தகர்களும் கடுமையாக போராடினர். இருந்தும் (20ஆம் பக்கம் பார்க்க)




நடுவு நிலை தவறாது உண்மைகளைத் தாங்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:-0729994777

(C-2290


# தந்தை செல்வாவின் பிறந்தநாள் நினைவு

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் பிறந்த நாள் நினைவுதினம் நாளை 31ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் செல்வா சதுக்கத்தில் இடம்பெறும். முன்னாள் பேராயர் எஸ்.ஜெபநேசன் அடிகளார் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் தந்தை செல்வாவின் நினைவு தூபிக்கு மலர் அஞ்சலி செலுத்தப்படும். (ந)


**Study & Work in UK and Canada**

*Intake Get Register Now*
*Collecting the application until March 31st 2011*
*start the academic on August 2011*
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
*Administration & Documentation*
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான விசா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)


# யாழ்ப்பாண மக்களை சந்திக்க சர்வமதக்குழு யாழ்.வருகிறது

(கொழும்பு)

தேசியகிறிஸ்தவ திருச்சபையினரின் ஏற்பாட்டில் சர்வ மதத்தலைவர்கள் அடங்கிய குழுவொன்று இன்று காலை யாழ்ப்பாணத்திற்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளது.

இவ் விஜயத்தில் கர்தினால் ரஞ்சித் மல்கம், கொஸ்தாவ தம்மலங்கார தேரர், சீவலி தேரர், பிரம்மஸ்ரீ இராமச்சந்திரகுருக்கள் பாபு சர்மா, கே.பால சந்திரசர்மா, மௌலவி ஆதம் பாவா, அன்ட்ரூ சமரதுங்க ஆகிய மத குருமாருடன் 21 பேர் வருகை தரவுள்ளனர்.

இதன்போது இவர்கள் யாழ்ப்பாண மக்களைச் சந்தித்து கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளனர்.

இக் கலந்துரையாடலில் யாழ். மாநகர சபை மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, இடம்பெயர் வாழ் முஸ்லிம் மக்கள், போரினால் பாதிக்கப்பட்ட விதவைகள், மனித உரிமைகள் அமைப்பினர் ஆகியோர் இடம்பெறவுள்ளனர்.

அத்துடன் நேற்றுக் காலை சர்வமதத் தலைவர்கள் அடங்கிய குழுவினர் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு சென்றுள்ளனர்.

சர்வமத சம்மேளனமும் கரித்தாஸ் நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்த அப்பகுதி வாழ் மக்களுக்கான கலந்துரையாடல் ஒன்று புனித பேதுருவானவர் ஆலயத்தில் இடம்பெற்றது.

இச் சந்திப்பில் அப்பகுதி வாழ் மக்களின் குறைகள் வினவப்பட்டதுடன் பலவிதமான பிரச்சினைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

இதன் போது மக்கள் தமது கருத்துக்களை தெரிவிக்கையில்,

தடுத்து வைக்கப்பட்ட இளைஞர், யுவதிகள் மிகவிரைவில் விடுவிக்கப்பட வேண்டுமெனவும், சில இடங்களில் தொழிலுக்கு செல்லும் போது தேசிய அடையாள அட்டையை இராணுவ முகாமில் ஒப்படைத்து விட்டு திரும்பி மீளப்பெறும் வேளையில், நேரதாமதமாவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதற்கு சர்வ மதத் தலைவர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் கூறினர். சிலர் தமது குடும்ப நிலைமையினை எழுத்து மூலமாகவும் சமர்ப்பித்தனர்.

வன்னிப் பிரதேசத்திற்கு அதிக சர்வமதத் தலைவர்கள் விஜயமொன்றை மேற்கொண்டது இதுவே முதல் தடவை என குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# நிர்வாணமாக நின்றவருக்கு அங்கொடையில் சிகிச்சை

## நீதிமன்றம் தீர்ப்பு

(சாவகச்சேரி)

கடந்த 2002ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி கொடிகாமம் சந்தியில் நிர்வாணமாக நின்றதாக பொலிசாரால் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் அன்றையதினம் ஆஜர்படுத்தப்பட்ட நபரொருவர் தொடர்பான வழக்கு நேற்றையதினம் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா, குறிப்பிட்ட நபரின் மனநிலை எதிர்கால நலன் கருதி அங்கொடை மனநோயாளர் வைத்திய பிரிவில் அனுமதித்து சிகிச்சையளிக்குமாறு உத்தரவிட்டார்.

இந் நபர் கடந்த 8 வருடங்களாக எதுவித குற்றமும் செய்யாத நிலையில் தெல்லிப்பழை மனநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதுடன் சிறைச்சாலை உத்தியோகத்தரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3,29)

# கொலைவழக்கு நிலுவையில் அமைச்சர் விமல் வீரவன்சவின் மைத்துனருக்குப் பதவியுயர்வு

(கொழும்பு)

ஜே.வி.பி.யின் முக்கியஸ்தர் ஒருவரைப் படுகொலை செய்த குற்றச்சாட்டுடன் தொடர்புடைய அமைச்சர் விமல் வீரவன்சவின் மைத்துனருக்கு துறைமுகத்தில் பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை தண்டனைக் கோவை சட்டங்களின் பிரகாரம் யாரேனும் ஒரு அரச ஊழியருக்கு எதிராக வழக்கொன்று நிலுவையில் இருக்கும் பட்சத்தில் அக்காலப் பகுதியில் அவருக்கு எந்தவொரு பதவியுயர்வும் வழங்கப்பட முடியாது என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதனை மீறி அமைச்சர் விமல் வீரவன்சவின் மைத்துனர் சாதாரண பாதுகாப்பு அதிகாரி தரத்திலிருந்து பாதுகாப்பு கண்காணிப்பாளர் தரம் வரை பலபடிகள் தாண்டி ஒரேயடியாக பதவியுயர்வு பெற்றிருக்கின்றார்.

கடந்த மாகாண சபைத் தேர்தல்களின் போது ஜே.வி.பியின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான நந்தன பாலகேயைப் படுகொலை செய்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் ஆனந்த குமார என்பவருக்கே மேற்கண்டவாறு துறைமுகத்தில் பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது. (ந-5)


**சேல்ஸ்மன் தேவை**

யாழ். நகரில் இயங்கும் எமது நிறுவனத்துக்கு புடவை விற்பனையில் அனுபவம் உள்ள 18-40 வயதுக்குட்பட்டோர் தேவை.
நேரில் வரவும்.
தகுந்த சம்பளம் கொடுக் கப்படும்.
சிவகணேசன் ரெக்ஸ்ரையில்
41, பெரியகடை யாழ்ப்பாணம்.
(4251)


# செங்குந்தவுக்கு மூன்றாம் இடம்

(யாழ்ப்பாணம்)

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் பாடசாலைகளின் செயற்திறனை மதிப்பீடுசெய்து விருது வழங்கும் நோக்குடன் 2009ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட தொடர் மதிப்பீடுகளின் அடிப்படையில், வடக்கு மாகாணத்தில் யா/ செங்குந்த இந்துக்கல்லூரி Category B இன் கீழ் மாகாண மட்டத்தில் 3ஆம் இடத்தை பெற்று விருதையும் பெறுள்ளது. (ந)


**Hatton National Bank**

Hatton National Bank PLC (PQ82)

**ஆளணி நியமனம், பயிலுநர் உதவியாளர்**

**(Tranainee Banking Assistant)**

**03.04.2011 அன்று 23 வயதிற்குட்பட்ட ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.**

**கல்வித் தகைமை:**

1. க.பொ.த. சாதாரணதரம்
ஆங்கிலம் அல்லது கணிதம் அதிதிறமைச் சித்தி (A)
மேற்கூறிய இரு பாடங்களுடன் ஒரேதரத்தில் 5 திறமைச் சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும்.(B அல்லது C)
2. க.பொ.த. உயர்தரம்
ஒரேதடவையில் 3 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
குறைந்தபட்சத் திறமை C, 2 S

மேற்கூறிய அடிப்படைத் தகுதியுள்ள 03.04.2011 அன்று 27 வயதிற்குட்பட்ட பட்டப்படிப்பினை முடிவு செய்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.
விண்ணப்பங்கள் யாவும் 03.04.2011க்கு முன்னதாக www.hnb.net இணையம் ஊடாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இணையத்தின் ஊடான விண்ணப்பங்கள் மட்டும் கவனத்தில் கொள்ளப்படும்.
(4249)



# பதவி வெற்றிடம்

1. **Course Counselors** Female
should be qualified in G.C.E (A/L) having good command in English and computer literacy.
2. **Lecturers** Male/Female (Full or part time)
Computer Hardware or Graphics or Programming or accounting and experience is an added qualification.
3. **Instructors** Male/female
Office application or Graphics or Programming or web designing or animation or accounting and previous experience is an added qualification.

தற்பொழுது வெற்றிடம் உள்ள எமது பின்வரும் கிளைகளில் பணியாற்ற விரும்புவோர் விண்ணப்பிக்கவும்,
**யாழ்ப்பாணம், திருநெல்வேலி, மானிப்பாய், நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி, தண்ணீரூற்று மற்றும் வவுனியா**

**Apply before the 10th of April 2011**

கடித உறையின் இடதுபக்க மேன்மூலையில் விண்ணப்பிக்கும் பதவி, பணியாற்ற விரும்பும் இடம் என்பவற்றை தெளிவாகக் குறிப்பிடவும்.

**TECHNO WORLD**
**Studies (Pvt) Ltd**

அனுப்பவேண்டிய முகவரி
**The Human Resource Manager**
**TECHNO WORLD Studies (Pvt) Ltd**
**No.344, Kasturiyar Rd.**
**Jaffna.**
(C-2827)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானை அடக்குமா இந்தியா?

## அரையிறுதியில் இன்று பலப்பரீட்சை

மொகாலியில் இன்று நடக்கும் உலகக்கிண்ண தொடரின் பரபரப்பான அரையிறுதியில் பரம எதிரிகளான இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன. இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி இறுதிப்போட்டிக்கு முன்னேற இந்தியா, பாகிஸ்தான் வீரர்கள் காத்திருக்கின்றனர்

இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் மண்ணில் பத்தாவது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது. இன்று மொகாலியில் நடக்கும் அரையிறுதி போட்டியில் (பகலிரவு) இந்திய அணி பாகிஸ்தானுடன் பலப்பரீட்சை மேற்கொள்கின்றது.

**பலமான துடுப்பாட்டம்**

இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசை பலமாக காட்சியளிக்கிறது. பங்களாதேஷ் அணிக்கு எதிராக சதம் கடந்த சேவாக் (342 ஓட்டங்கள்) அதன்பின் பெரியளவில் சோபிக்கவில்லை. எனவே இவர் இன்று தனது அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி ரன் மழை பொழியலாம். சுப்பர் போர்மில் உள்ள நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் (379 ஓட்டங்கள்) நூறாவது சதம் கடந்து சாதிக்கலாம். மூன்றாவது வீரராக களமிறங்கும் காம்பீர் (269 ஓட்டங்கள்) தனது பொறுப்பான ஆட்டத்தை தொடரலாம்.

இதுவரை நான்கு முறை ஆட்ட நாயகன் விருது வென்றுள்ள இவர் இன்று சொந்த ஊரில் முழுத் திறமையை வெளிப்படுத்தி அணியின் வெற்றிக்கு வித்திடலாம். கிடைத்த வாய்ப்பை சுரேஷ் ரெய்னா சரியாகப் பயன்படுத்திக்கொண்டதால் இன்று யூசுப் பதான் களமிறங்குவது சந்தேகம். விராத் ஹோலி, அணித்தலைவர் தோனி துடுப்பாட்டத்தில் கூடுதல் கவனம் செலுத்தும் பட்சத்தில் இமாலய இலக்கைப் பதிவு செய்யலாம்.

**சகீர் மிரட்டல்**

பந்துவீச்சைப் பொறுத்தவரை வேகத்தில் சகீர்கான் மிரட்டிவருகிறார். இதுவரை 17 விக்கெட்டுக்கள் வீழ்த்தி உள்ள இவர் இன்றும் விக்கெட் வேட்டை நடத்தலாம்.

வேகத்திற்கு கைகொடுக்கும் மொகாலி மைதானத்தில் முனாப் பட்டேல் ஸ்ரீசாந்த் ஆஷிஸ் நெகரா உள்ளிட்டோரும் சாதிக்கலாம்.





**யுவராஜ் நம்பிக்கை**

நடுத்தர வரிசையில் யுவராஜ் சிங் (341 ஓட்டங்கள்) அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார்

**அஷ்வின் எதிர்பார்ப்பு**

சுழலில் அனுபவ ஹர்பஜன் சிங் (6 விக்கெட்) இருப்பது பலம். இவருடன் இளம் சுழற்பந்து வீச்சாளர் அஷ்வின் (4 விக்கெட்) துல்லியமாக பந்துவீசி எதிரணியின் ஓட்டங்கள் வேட்டையை தடுக்கிறார். ஆனால் மொகாலி மைதானத்தில் சுழல் எடுபடாது என்பதால் ஒரேஒரு சுழற்பந்து வீச்சாளருடன் இந்திய அணி களமிறங்கலாம்.

பகுதிநேர சுழலில் சகலதுறை வீரர் யுவராஜ் சிங் (11 விக்கெட்) விக்கெட் வேட்டை நடத்தி வருவது கூடுதல் பலம் சேர்த்துள்ளது.

**நடுத்தர வரிசை பலம்**

லீக் சுற்றில் பாகிஸ்தான் அணியின் ஆரம்ப வீரர்கள் சொல்லிக் கொள்ளும்படி விளையாடவில்லை. ஆனால் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான காலிறுதியில் கம்ரன் அக்மல், முகமெட் ஹபீஸ் ஜோடி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி தேடித்தந்தது. எனவே இன்றும் இவர்கள் அசத்தலாம். நடுத்தர வரிசை அனுபவ மிஸ்பா (192 ஓட்டங்கள்), யுனிஸ்கான் (172 ஓட்டங்கள்) இருப்பது பலம் இதுவரை 211 ஓட்டங்கள் எடுத்துள்ள உமர் அக்மல் தனது ரன்வேட்டையைத் தொடரலாம்.

அப்ரிடி (65 ஓட்டங்கள்) அப்துல் ரசாக் (101 ஓட்டங்கள்) உள்ளிட்ட சகலதுறை வீரர்கள் துடுப்பாட்டத்தில் பெரியளவில் சாதிக்கவில்லை. இந்தியாவுக்கு எதிராக இவர்கள் எழுச்சி பெறும் பட்சத்தில் அசத்தல் வெற்றி பெறலாம்.

**பலமான பந்துவீச்சு**

இம்முறை பாகிஸ்தான் அணியின் மிகப்பெரிய பலம் பந்துவீச்சு.



சுழலில் அணித்தலைவர் அப்ரிடி (21 விக்கெட்) விக்கெட் மழை பொழிகிறார். நான்கு முறை, நான்கு அல்லது அதற்கு மேல் விக்கெட் வீழ்த்தியுள்ள இவர் இந்தியாவுக்கு எதிராக இன்று அசத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இவருக்கு முகமெட் ஹபீஸ், அப்துர் றீமன், சயீத் அஜ்மல் உள்ளிட்ட இளம் சுழற்பந்துவீச்சாளர்கள் கைகொடுக்க வேண்டும்.

வேகப்பந்து வீச்சில் உமர் குல் (14 விக்கெட்) நம்பிக்கையளிக்கிறார். மொகாலி மைதானம் வேகப்பந்து வீச்சுக்கு கைகொடுக்கும் என்பதால் சோயப் அக்தருக்கு வாய்ப்பு அளிக்கப் படலாம். வாகாப் ரியாஸ், அப்துல் ரஷாக் உள்ளிட்ட வேகப் பந்து வீச்சாளர்கள் விக்கெட் வேட்டை நடத்தும் பட்சத்தில் இந்திய அணிக்கு சிக்கலாகிவிடும்.

பலமான துடுப்பாட்ட வரிசை கொண்ட இந்திய அணி வலுவான பந்துவீச்சு பலத்துடன் உள்ள பாகிஸ்தானுடன் மோத இருப்பதால் அனல் பறக்கும் ஆட்டத்தை எதிர்பார்க்கலாம்.

**ஐந்தாவது முறை**

உலகக்கிண்ண அரங்கில் இந்தியா-பாகிஸ்தான் அணிகள் ஐந்தாவது முறையாக மோதவுள்ளன. முன்னதாக மோதிய நான்கு (1992, 96, 99, 2003) போட்டிகளில் இந்திய அணி வெற்றி பெற்று ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

**பாக் ஆதிக்கம்**

சர்வதேச ஒருநாள் போட்டி அரங்கில் இந்தியா-பாகிஸ்தான் அணிகள் 119 முறை மோதியுள்ளன. இதில் பாகிஸ்தான் 69, இந்தியா 46 போட்டிகளில் வெற்றி கண்டன. நான்கு போட்டிகளுக்கு முடிபு இல்லை.

**இம்மைதானத்தில் இதுவரை...**

இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் இன்று நடக்கும் அரையிறுதிப் போட்டி மொகாலியில் உள்ள பஞ்சாப் கிரிக்கெட் சங்க மைதானத்தில் நடக்கிறது. இங்கு இவ்விரு அணிகள் இரண்டு (1999, 2007) போட்டிகளில் மோதியுள்ளன. இரண்டிலும் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்று ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஓர் நற்செய்தி!
MCS இன் ஒரு மில்லியன் ரூபா பரிசை
வெற்றிகொள்ள உங்களுக்கு அரிய சந்தர்ப்பம்
தினமும் 5 பேருக்கு
50ஆயிரம் ரூபா வீதம் 100 பேருக்கு
ஒரு மில்லியன் வெற்றிகொள்ளும் வாய்ப்பு
வலம்புரியில் கேட்கப்படும்
உலகக்கிண்ண கேள்விகளுக்கு
சரியான பதிலை அனுப்பி உங்கள் உயர்கல்வி வாய்ப்பை
பெற்றுக்கொள்ளுங்கள்
கூப்பனை வெல்பவர் அல்லது அவரால் வழங்கப்படும் ஒருவர் பின்வரும் கற்கை
நெறிகளுக்கு இப் பரிசுக் கூப்பனை பயன்படுத்த முடியும்
1. கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப பட்டக் கற்கை நெறி
2. சீமா (லண்டன்) CIMA_UK
3. மைக்கிரோசொப்ற் நிறுவன கணினிப் பொறியியலாளர் கற்கை நெறி
4. அடோப் நிறுவனத்தின் மல்ரிமீடியா கற்கை நெறி

இன்றைய கேள்வி ?
பத்தாவது உலகக்கிண்ணத் தொடரில் ஒரே போட்டியில் அதிக ஓட்டங்கள் குவித்த அணிகள் எவை?
..........
சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 03.04.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு M.C.S வழங்கும் பரிசுக் கூப்பன்.
பெயர்:- ..........
முகவரி:- ..........
..........
தொ.பே:- ..........
தே.அ.அ.இல:- ..........
அனுப்ப வேண்டிய முகவரி
'உலகக் கிண்ணம்'
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகிரங்க ஏலவிற்பனை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்ட உரிமை கோரப்படாத சான்றுப் பொருட்களை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி காலை 10 மணிக்கு பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பதிவாளர் வி.சிவராஜசிங்கம் அறிவித்துள்ளார்.

ஏல விற்பனைக்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்னராக பொதுமக்கள் பொருட்களைப் பார்வையிடலாம் என்றும் ஏலத்தில் பெறப்படும் பொருட்களுக்குரிய ஏலப்பெறுமதியைப் பணமாகச் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்று அன்றைய தினமே பொருட்களை நீதிமன்ற வளாகத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-3-29)

## வருடாந்த மஹோற்சவம்

(பொலிகண்டி)

வல்வெட்டித்துறை வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 4ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இதில் எதிர்வரும் 2ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு காத்தவராய சுவாமி ஊர்வலம் நடைபெறவுள்ளதுடன் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மஹோற்சவ கிரியைகள் ஆரம்பமாகவுள்ளன.

எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு அம்பாள் ஆலயத்திலிருந்து வேட்டைத்திருவிழாவிற்காக வல்வெட்டித்துறை நெடியகாடு விநாயகர் ஆலயத்திற்கு எழுந்தருளவுள்ளார். எதிர்வரும் 14ஆம் திகதி வியாழக்கிழமை பகல் வசந்தோற்சவமும் எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை இரவு சப்பறத் திருவிழாவும் இடம்பெறவுள்ளதுடன் எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணிக்கு அபிஷேகத்துடன் கிரியைகள் ஆரம்பமாகி 9.15 மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணித்து வீதியுலா வரவுள்ளார். மறுநாள் திங்கட்கிழமை அதிகாலை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

தினமும் காலை 6 மணிக்கு நெற்கொழு வைரவர் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ அழகு ஜெகதீஸ்வர தேசிகரினால் *என் மன வானில் உலாவரும் இதிகாச புராண நாயக, நாயகிகள்* எனும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும் எனவும் ஆலய தர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-3-48)

## ஆன்மீக சொற்பொழிவு

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப.10.30 மணியளவில் *சிந்தனை செய்* என்னும் விடயம் பற்றி செஞ்சொற்செல்வர் இரா. செல்வவடிவேல் ஆன்மீக சொற்பொழிவாற்றவுள்ளார். (ஸ்ரீ-3-35)

# முத்திரையிடப்படாத நிறுத்தலளவைகளை பயன்படுத்தும் வியாபாரிகள்

## பொதுமக்கள் விசனம்

மணற்காடு, பொற்பதி, குடத்தனை, அம்பன் ஆகிய பகுதிகளில் இயங்கிவரும் சில்லறைக் கடைகளில் உரிய தரப்பினரால் முத்திரை இடப்படாத தராசு, படிகள் மற்றும் அளவைக் கொள்கலன்கள் (லீற்றர் கான்) என்பனவற்றை வியாபாரத்தில் ஈடுபடுத்தி வருவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு வீதிவீதியாகச் சென்று விற்பனையில் ஈடுபடும் மீன் வியாபாரிகள் மற்றும் மரக்கறி வியாபாரிகள் தராசின் படிகளுக்குப் பதிலாக 250கிராம் நிறையுடைய சைக்கிள் அச்சைப் பயன்படுத்துகின்றனர்.

எனவே, இவ்வாறான நடவடிக்கைகளைக் கருத்திற்கொண்டு உரிய தரப்பினர் நடவடிக்கையினை மேற்கொண்டு, மக்கள் கொடுக்கும் பணத்திற்கேற்ப சரியான நிறையில் பொருட்களைப் பெற்றுக்கொள்ள ஆவன செய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-64)

# மோட்டார் சைக்கிள்-சைக்கிள் விபத்தில் முதியவர் படுகாயம்

மோட்டார் சைக்கிள் துவிச்சக்கர வண்டியுடன் மோதிய விபத்தில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்து சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் நேற்றுக் காலை 10 மணியளவில் மந்துவிலில் நடைபெற்றது.

மந்துவில் கிழக்கிலிருந்து சாவகச்சேரி நகர் நோக்கி வந்துகொண்டிருந்த சைக்கிளும் எதிரே வந்த மோட்டார் சைக்கிளும் மோதியதாலேயே விபத்து இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சின்னவன் நாகமுத்து (வயது 81) என்ற முதியவரே படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்றுவருகிறார். (ஸ்ரீ-3-29)

# விபத்தில் படுகாயமடைந்த இளைஞன் சிகிச்சை பலனின்றி மரணம்

கடந்த மார்ச் மாதம் 15ஆம் திகதி சாவகச்சேரியில் நடைபெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த இளைஞன் உயிரிழந்துள்ளார்.

இதில் திருநெல்வேலி கலாசாலை வீதியைச் சேர்ந்த இரத்தினம் கிருபானந் (வயது 39) என்ற இளைஞனே சிகிச்சை பலனின்றி உயிரிழந்தவராவார்.

நேரிற் சென்று மரண விசாரணையை நடாத்திய சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டு மறுவிசாரணையை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 20ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ஸ்ரீ-3-29)

# தமக்கு தொழில் பாதிப்புக்கான நிவாரணம் வழங்குமாறு வடமராட்சி மீனவர்கள் கோரிக்கை

வடமராட்சி மீனவர்கள தமக்கு தொழில் பாதிப்புக்கான நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 3 மாத காலமாக இந்திய மீனவர்களின் அத்துமீறி மீன்பிடிக்கும் நடவடிக்கைகளால் தமக்குப் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்வதால் தொழில்வளத்தை இழந்திருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே தமது வாழ்வாதாரம் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனைக் கருத்திற்கொண்டு உரிய தரப்பினர் தமக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-10)

## அங்குரார்ப்பண கூட்டம்

(மருதங்கேணி)

அகில இலங்கை கலை இலக்கிய சங்கத்தின் கிளை அங்குரார்ப்பண கூட்டம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு க. இராசரத்தினம் தலைமையில் அம்பாறை மாவட்டத்திலுள்ள தம்பிலுவில் திருநாவுக்கரசு நாய னார் குருகுல ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3-35)

## பொதுக்கூட்டம்

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க ஆண்டுப் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

எனவே பெற்றோர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## மாவட்ட கண்காணிப்பு குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களிற்கும் அரச சார்பற்ற நிறுவனங்களிற்குமான இம்மாதத்திற்குரிய மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக்கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு சம்பந்தப்பட்டவர் தவறாது சமுகமளிக்குமாறு யாழ். பிராந்திய சுகா தார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலா நிதி ஆ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3)

## கலந்துரையாடல்

வடமராட்சி வலயத்திலுள்ள சகல அதிபர்களுக்கும் மாவட்ட நீதிபதிக்கும் இடையிலான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை பி.ப 2 மணிக்கு யா/வட மத்திய மகளிர் கல்லூரிக்கு முன்பாகவுள்ள பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலுக்கு அனைத்து அதிபர்களையும் தவறாது சமுகம் தருமாறு வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராஜா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

## ஸ்ரீமத் சார்ஜன் சுவாமிகளின் குருபூசை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ சிவகுருநாத குருபீட வேதாந்த மடத்தில் நாளை வியாழக்கிழமை ஸ்ரீமத் சார்ஜன் சுவாமிகளின் குருபூசை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 10.30 மணிக்கு திருமுறை ஓதல் இடம்பெற்று பின் அபிஷேக ஆராதனைகள் இடம்பெறவுள்ளன. (ஸ்ரீ-2)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் வடக்கு கணேசா சனசமூக நிலைய முன்பள்ளி சிறார்களின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி சனிக்கிழமை யாழ். உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலை விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு சமாதான நீதவான் ச.ஏகாம்பரநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் விருந்தினர்களாக ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் கோப்பாய் பிரதேச பொறுப்பாளர் இ.ஐங்கரன், கோண்டாவில் கட்டளையிடும் அதிகாரி கப்டன் ஆர்.எம்.பி. ரட்னாயக்கா, குப்பிளான் உப தபால் அதிபர் திருமதி.வசந்தகுமாரி தவேந்திரநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-2)










சுனாமியால் பாதிக்கப்பட்ட யா/குடத்தனை கரையூர் றோமன் கத்தோலிக்க பாடசாலை சர்வதேச றோட்டறிக் கழகத்தினால் 5 கோடி ரூபாய் செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு நேற்றைய தினம் திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதனையும் சர்வதேச றோட்டறிக் கழக ஆளுநர் றோட்டறியன் ரேக்ளின் ஜின்ஸ்மித் நாடா வெட்டித் திறந்துவைப்பதனையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: கரவெட்டி, அல்வாய் செய்தியாளர்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலாபத்தில் பஸ் விபத்து; ஒருவர் பலி; ஐவர் காயம்

(கொ்ழும்பு)

சிலாபம் பங்கதெனியாவில் நேற்று அதிகாலை இடம்பெற்ற பஸ் விபத்தில் பஸ்ஸின் உதவிச் சாரதி பலியானதுடன் ஐவர் காயமடைந்துள்ளதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த பஸ் ஒன்றே நேற்று அதிகாலை ஒருமணியளவில் சிலாபம் பங்கதெனிய பகுதியிலுள்ள லுணு ஓயா பாலத்தின் மீது மோதி விபத்திற்குள்ளானது. இந்த விபத்தின் போது பஸ்ஸின் உதவிச் சாரதி பாலத்தினுள் வீழ்ந்து பலியான நிலையில் அவரது சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்தில் காயமடைந்தவர்கள் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்விபத்து தொடர்பில் சிலாபம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

# தவறிப் போனவன் கதை நாவல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தெணியான் எழுதிய "தவறிப் போனவன் கதை" நாவல் வெளியீட்டு அரங்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அல்வாய் கலையகத்தில் யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி தலைமையில் நடைபெறும்.

நூலின் நயப்புரையினை யா/விக்கினேஸ்வராக்கல்லூரி ஆசிரியை திருமதி எஸ். தனேஸ்வரி, யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் பா.தனபாலன் , யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் இ. இராஜேஸ்கண்ணன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

இந்நூலின் முதற்பிரதியை முன்னாள் வங்கி முகாமையாளர் க.சின்னராஜன் பெற்றுக்கொள்வார்.எனவே ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (ஸ்ரீ-2)

# UNIVERSITY OF JAFFNA
## BID NOTICE

The Chairman, University Procurement Committee, University of Jaffna will receive sealed Bids from the qualified contractors for the following works .

| Work/ Service Details | Security/ Refundable deposit (Rs) | Non-refundable deposit (Rs) | Approximate direct cost of the work (Rs in million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|
| Repairs/ Improvements/ Internal painting Main Building Faculty of Medicine, University of Jaffna. | 125,000.00 | 500.00 | 12.5 | M 5/C6 (Buildings) |
| Improvements to Pharmacy Facilities and Others for Department of Siddha Medicine, University of Jaffna. | 25,000.00 | 500.00 | 2.3 | M 7/C8 (Buildings) |

Bid forms may be obtained from the Deputy Registrar/ Capital Works & Planning Unit, University of Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the above Bid fee at the Shroff's Counter, University of Jaffna until 11.04.2011.

Perfected Bid Should be sealed and marked with the job and the name of the work/ Service on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Registrar, University of Jaffna P.O Box 57, Thirunelvely, Jaffna or deposited in the tender box kept at Registrar's Office, University of Jaffna.

Bids will be accepted till 2.00 p.m. on 25.04.2011 and open immediately thereafter.

Bidders or their accredited representatives could be present at the time of opening of Bids.

Bid forms maybe inspected by the Bidders free of charge at the Capital Works & Planning Unit of this University during office hours, if neccessary.

P.O Box 57,
Thirunelvely, Jaffna.
29.03.2011

Registrar,
University of Jaffna.

(C-2825)

# கெரவலப்பிட்டிய மின்நிலையத்திற்கு எரிபொருள் விநியோகம் இடைநிறுத்தம்

## பெற்றோலிய அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையத்துக்கு கடன் மீளச் செலுத்தப்படும் முறைக்கு ஏற்றவாறு எரிபொருள் விநியோகிக்கப்படும் என்று பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கெரவலப்பிட்டிய மின் நிலையத்திற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சலுகை விலையில் எரியூட்டல் எண்ணெய் வழங்குவதை நிறுத்தியுள்ளது.

இதனால் கடந்த 10 நாட்களில் மாத்திரம் 100 மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சு கூறியது.

கெரவலப்பிட்டிய யுகதனவ் மின்நிலையத்தில் திறைசேரி, ஊழியர் சேமலாப நிதி, லெகோ மற்றும் வெஸ்ட் கோஸ் நிறுவனம் ஆகியன பங்காளிகளாக உள்ளன. இந்த நிலையில் கெரவலப்பிட்டிய மின் நிலையத்திற்கு 4.5 மில்லியன் ரூபா வரை எரிபொருள் பெற திறைசேரியும் அமைச்சரவையும் அனுமதி வழங்கியுள்ளது.

ஆனால் மேற்படி மின் நிலையம் 2 ஆயிரத்து 300 மில்லியன்கள் மட்டுமே செலுத்த வேண்டிய நிலையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள் வழங்குவதை நிறுத்தியுள்ளதாக மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனால் கடந்த 10 நாட்களாக கெரவலப்பட்டிய மின்நிலைய உற்பத்தி தடைப்பட்டுள்ளதோடு, தனியார் துறையிடமிருந்து கூடுதல் விலைக்கு மின்சாரம் கொள்வனவு செய்யும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சு கூறியுள்ளது.

இதனால் கெரவலப்பிட்டிய மின்நிலையம் செலுத்த வேண்டிய கடனை மீளச் செலுத்துவது தொடர்பில் தலையீடு செய்யுமாறு மின்சாரத் திணைக்களத்திற்கு அமைச்சர் பணித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சத்ய சாயி பாபா புட்டபர்த்தி மருத்துவமனையில் அனுமதி

(அனந்தபூர்)

சத்ய சாயி பாபா நிமோனியா காய்ச்சல் காரணமாக புட்டபர்த்தியில் உள்ள சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சாயி பாபா குணமடைந்து வருவதாகவும் கவலைப்பட ஏதுமில்லை என்றும் பிரசாந்தி நிலையத்தினர் தெரிவித்தனர்.

இதனிடையே சாயி பாபாவுக்கு உடல் நலக்குறைவு என்று தகவல் பரவியதால் புட்டபர்த்தியில் கடைகள் அனைத்தும் அடைக்கப்பட்டன. ஆயிரக்கணக்கானோர் மருத்துவமனை முன் திரண்டனர். பாபாவின் உடல் நிலைசீராக இருப்பதாகவும் விரைவில் அவர் மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பு வார் என்றும் மருத்துவர்கள் தெரிவித்தனர். (ஸ்ரீ-2)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

# எது மகிழ்ச்சி?

''அவருக்கு என்ன கொடுத்து வைச்சமனுசன்'' என்று ஒரு வரை சுட்டிக்காட்டி சொன்னார் நண்பர் .

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?'' என்று கேட்டேன். ''சொந்தமாக கார் வைத்திருக்கிறார், அழகான பங்களா கட்டியிருக்கிறார் சந்தோசத்துக்கு என்ன குறைச்சல்?'' என்றார்.

அவர் நினைப்பதுபோலத்தான் நாம் எல்லோரும் நினைக்கின்றோம். ஆனால், பெரியவர்களெல்லாம் அப்படி நினைக்கவில்லை. ஓர் அழகான வீட்டில் இருக்கின்றோம் என்றால், இது நமக்கு ஆனந்தத்தை கொடுக்கும். ஒரு அழகான காரில் போகிறோம் என்றால், அது நம்மை பரவசப்படுத்தும். அதனால் நம்முடைய உண்மையான மகிழ்ச்சிக்கு வீடும் காரும் தான் காரணமென நினைக்கின்றோம்.

ஆனால், உண்மை அப்படி அல்ல.

இந்த வீடும் காரும் நம்முடைய மகிழ்ச்சிக்கு ஒரு தூண்டுகோள்! அவளவுதான்.

இந்த பிறபொருட்கள் இல்லாமலேயே எல்லையற்ற ஆனந்தத்தில் நாம் மூழ்க முடியும். அதைப் புரிந்து கொள்ளமல் வீடு – கார் –நிலம் –புகழ் – பதவி இப்படி உலக பொருட்களை சேகரிப்பதிலேயே நம்முடைய சக்தியை வீணாக்கின்றோம்!.

நமக்குள்ளே ஒரு விழிப்பு ஏற்படும் போது நாம் சேகரித்த பொருட்கள் எல்லாம் நமக்கு சுவையாகவே இருக்கும். அதை எல்லாம் பாதுகாப்பதிலேயே நமக்கு நேரம் சரியாக இருக்கும்.

இவற்றுக்கெல்லாம் என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள். உலகத்தில் எவையெல்லாம் நமக்கு ஆனந்தத்தை கொடுக்கிறதோ அவை எல்லாம் நமக்கு உடைமையாக்கிக் கொள்ள நினைக்கின்றோம்.

அனுபவசாலிகள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? ''எந்தப் பொருள் மேலும் பற்று வைக்கக் கூடாது. ஆனால் அவையெல்லாம் உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள். அவையெல்லாம் உங்களுடைய சௌகரியத்துக்காக ஏற்பட்டவை... அவ்வளவுதான்!'' என்கிறார்கள்.

இச் சந்தர்ப்பத்தில் இன்னொரு விடயத்தை புரிந்து கொள்ளவேண்டும் .

இந்தமாதிரி அறிவுரைகளை மட்டும் கேட்பதனால் எந்தவித பிரயோசனமும் ஏற்படப் போவதில்லை. இவற்றையெல்லாம் நாம் அனுபவத்திற்கு கொண்டுவர வேண்டும். அப்பொழுதுதான். அது நமக்கு உபயோகப்படும்.

அனுபவமற்ற அறிவு எதற்கும் உபயோகப்படாது. இவையெல்லாம் பெரியவர்கள் கூறும் கருத்து. ''மரணம் வாழ்விற்கு எதிரி இல்லை என்கிறார்கள்'' அதற்காக மரணத்தை கண்டு பயப்படாமல் இருக்க முடியுமா? அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றரல்,

மரணம் என்பது வாழ்வுக்கு எதிரியில்லை. உண்மை வாழ்வில்தான் மரணம் அடங்கியிருக்கிறது. மரணம் தான் வாழ்வுக்கும் – ஆதார வாழ்வின் கவர்ச்சிக்கும்– ஆனந்தத்திற்கும் – ஆவலுக்கும் மரணம்தான் ஆதாரம். கொஞ்சம் ஆழமாகச் சிந்தியுங்கள் புரியும் என்கிறார்கள்.

அதை நினைத்தாலே பயமாக இருக்கிறது. பிறகு எப்படி சிந்திக்க முடியும்? சரி அதையெல்லாம் விடுங்க இப்போது நம்முடைய கதைக்கு வருவோம்.

ஒரு சாலையில் திடீரென ஒரு விபத்து! கார் ஒரு ஆளை மோதிவிட்டது. அடிபட்டவன் கீழே விழுந்து கிடக்கிறான். ஒரு அம்மா ஓடிப்போய் அடிபட்டவனுக்கு உதவிசெய்ய கீழே குனிந்தார்.

அதற்குள் இன்னொரு ஆள் ஓடிவந்து அந்த அம்மாவை விலகி நிற்கச் சொல்லிவிட்டு அந்த ஆளுக்கு முதலுதவி சிகிச்சை செய்ய ஆரம்பித்தான்.

அந்த அம்மா அவனைப் பார்த்து "இதோ பாரப்பா உன்னுடைய முதலுதவி சிகிச்சை எல்லாம் முடிந்து டாக்டரிடம் போகலாம் என்ற கட்டத்தில் என்னிடம் சொல்'' என்றார். "ஏன்?'' என்று கேட்டான் அவன். "நான் தான் டாக்டர்'' என்றார் அந்த அம்மா!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# உலக மலேரியா தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கான சித்திரப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உலக மலேரியா தினம் மற்றும் மலேரியா ஒழிப்புத்திட்டத்திற்கு 100 வருடங்கள் பூர்த்தியானதை முன்னிட்டு கல்வி அமைச்சுடன் இணைந்து பாடசாலை மாணவர்களுக்கான சித்திரப் போட்டியொன்றை நடத்துவதற்கு மலேரியா ஒழிப்புத் திட்டம் தீர்மானித்துள்ளது.

இப்போட்டியில் கனிஷ்ட பிரிவில் தரம் 6 தொடக்கம் தரம் 8 வரையான மாணவர்களும் சிரேஷ்ட பிரிவில் தரம் 9 தொடக்கம் தரம் 13 வரையுள்ள மாணவர்களும் பங்குபற்ற முடியும்.

சித்திரம் 18"X 14" அளவுடையதாக வரைதல் வேண்டும். சித்திரத்தைச் சுற்றி ஓரம் வைத்தல், மவுண்ட் செய்தல் தேவையில்லை.

வர்ணக்கலவையாக நீர்ச் .சாயம், எண்ணெய்ச்சாயம், பெஸ்டல் அல்லது கையில் படியாத ஏதாவதொரு வர்ணம் என்பவற்றை பயன்படுத்த முடியும்.

சித்திரங்கள் மலேரியாவற்ற இலங்கை எனும் தலைப்பில் அமைதல் வேண்டும்.

✷ மலேரியாவை இல்லாதொழிப்போம்

✷ மருந்து தடவிய நுளம்பு வலையினையிட்டு தூங்குவோம்.

✷ உங்களுக்கு காய்ச்சல் , தலை வலி, உடம்புவலி இருக்கிறதா? இது மலேரியாவாகவும் இருக்கலாம். தாமதிக்காது இரத்தப் பரிசோதனையை செய்து கொள்ளுங்கள்.

✷ 2014 ஆம் வருடங்களில் இலங்கையிலிருந்து மலேரியாவை இல்லாதொழிப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றிணை வோம். மலேரியா நுளம்புகள் பரவுகின்ற இடங்களை அழிப்போம்.

✷ நீங்கள் மலேரியா நோய் பரவியுள்ள நாட்டுக்கு செல்வதாயின் மலேரியாவை தடுப்பதற்கான சிகிச்சையை பெற்றுக் கொள்ளுங்கள்.

✷ சரியான முறையில் தொடர்ச்சியாக சிகிச்சையை பெற்றுக் கொள்வதன் மூலம் மலேரியாவை பூரணமாகக் கட்டுப் படுத்த முடியும்.

ஆகிய கருத்துக்களை வெளிப் படுத்துமாறு படைப்புக்களை சமர்ப்பிக்கலாம்.

இப்போட்டியில் வெற்றியீட்டி தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெறுபவருக்கு 20 ஆயிரம் ரூபாவும் இரண்டாமிடத்தைப் பெறுப வருக்கு 15 ஆயிரம் ரூபாவும் மூன்றாமிடத்தைப் பெறுபவருக்கு 10 ஆயிரம் ரூபாவும் 10 ஆறுதல் பரிசில்களுக்கு 5 ஆயிரம் ரூபாவும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மாகாண மட்டத்தில் முதலாம் இரண்டாமிடம் மற்றும் மூன்றாமிடங்களைப் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

போட்டியாளர்கள் ஒரு படைப்பை மாத்திரமே சமர்ப்பிக்க முடியும்.

அச்சித்திரத்தின் பின்பகுதியில்பெயர், பாடசாலை, தரம், மாகாணம் என்பவற்றை சரியான முறையில் குறிப்பிட்டு பாடசாலை மாணவரின் படைப்பு என்பதை அதிபரால் உறுதிப்படுத்தி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதிக்கு முன் பாடசாலை சுகாதார மற்றும் போசனைக்கிளை, கல்வியமைச்சு, இசுறுபாய, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

கடித உறையின் மேல் மூலையில் மலேரியா ஒழிப்புத் திட்டம்– சித்திரப் போட்டி எனக்குறிப்பிடல் வேண்டும். மேலதிக விபரங்களை மலேரியாஒழிப்புத் தலைமையகம் (0112588408) எனும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

(ஸ்ரீ-3)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 35-40 | 50 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 65 | 70 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 60 | 100 | 100 | 90 |
| தக்காளி | 70 | 160 | 120 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 50-55 | 50 | 60 | 50 |
| கோவா | 70 | 60 | 70 | 70 |
| கரட் | 120 | 160 | 160 | 180 |
| பூசணி | 40 | 50 | 60 | 70 |
| புடோல் | 30 | 50 | 70 | 60 |
| வாழைக்காய் | 40 | 40 | 70 | 50 |
| சின்ன வெங்காயம் | 70 | 80 | 90 | 100 |
| பெரிய வெங்காயம் | 60 | 60 | 70 | 70 |
| பாகற்காய் | 100 | 60 | 80 | 60 |
| வெண்டிக்காய் | 50-60 | 70 | 70 | 70 |
| கருணைக் கிழங்கு | - | 80 | 100 | 100 |
| பயற்றங்காய் | 40-60 | 100 | 80 | 110 |
| லீக்ஸ் | - | 120 | 140 | 120 |
| பீற்றூட் | - | 50 | 80 | 60 |
| கறிமிளகாய் | 120 | 120 | 140 | 130 |
| முருங்கைக்காய் | 350-400 | 500 | 500 | 500 |
| போஞ்சி | 160 | 100 | 140 | 100 |
| கத்தரிதம்புள்ள | - | 20 | 40 | 40 |
| கீரை – 1 பிடி | 5-15 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 40-50 | 40 | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 70 | 50 |

## இராசி பலன்

*30.03.2011*
*(பங்குனி 16,புதன்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.11 மணிக்கு*
*ஏகாதசி பிற்பகல் 1.18 மணிவரை*
*ஆயிலியம் முழுவதும்*
*இராகுகாலம் 12.13-1.43 மணிவரை*
*சுப நேரம் 4.43-6.13 மணிவரை*
*ஏகாதசி விரதம்*

**மேடம்** யோகமான நாள், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம், வீட்டத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தொழில் மேன்மையுண்டு.

**இடபம்** தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், சொத்துக்கள் தொடர்பில் ஆதாயமுண்டு, அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்குவர், நண்பர்கள் மூலம் நற்செய்திகள் கிடைக்கும்.

**மிதுனம்** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், உடல் நலனில் கூடிய அக்கறை காட்ட வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.

**கடகம்** சென்ற இடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும், எதிர்பாராத வகையில் பழைய நண்பர்களைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரும்.

**சிங்கம்** பெண்களால் பெருமை சேர வேண்டிய நாள், தொழில் சம்பந்தமாக நல்ல முடிவெடுப்பீர்கள், மறைமுகமான எதிர்ப்புகள் குறையும், உற்சாகமான நாள்.

**கன்னி** மன நிறைவு கூடும், நல்ல செய்திகள் கிடைத்து மகிழ்வீர்கள், வருமானம் திருப்தி தரும், பூர்வபுண்ணிய கருமங்களில் ஈடுபடுவீர்கள்.

**துலாம்** வாகன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், சுபசெலவுகள் செய்து மகிழ்வீர்கள், தொழில் நன்மையுண்டு.

**விருச்சிகம்** பயணங்களால் பலன் கிடைக்கும், ஆடை ஆபரண சேர்க்கையுண்டு, உறவினர் வழியில் உதவிகள் கிடைக்கலாம், போசனசுக முண்டு.

**தனுசு** நாவன்மையால் நல்ல பெயரெடுக்கும் நாள், சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கலாம்.


**மகரம்** பொதுநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பெருமை மிக்கவர்களின் சந்திப்பால் நன்மையுண்டு, புகழ் கூடும்.

**கும்பம்** வெளியூர் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்ய வேண்டிவரலாம், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**மீனம்** தொழில் முன்னேற்றமுண்டு, நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறலாம், விலையுயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரலாம்.

வளவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு உழவு இயந்திரம் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் உழவு இயந்திரத்திற்குரிய சாவியினை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பயனாளி ஒருவருக்கு வழங்குவதனையும் வழங்கப்பட்ட ஒரு தொகுதி உழவு இயந்திரங்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: என்.குமார்)

# இடம்பெயர்ந்து நிர்க்கதிக்குள்ளான குடும்பங்களுக்கு தனது நிலங்களை வழங்கிய மன்னார் ஆயர்



(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் இடம்பெயர்ந்த 52 தமிழ் கத்தோலிக்க குடும்பங்களுக்கு மன்னார் மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் தனது நிலங்களை வழங்கியுள்ளார்.

இந்த 52 குடும்பங்களும் மன்னார் முள்ளிக்குளம் என்ற இடத்தில் வாழ்ந்து வந்தனர். இலங்கை கடற்படையினர் தங்களது பாதுகாப்பு காரணங்களுக்காக அந்தப் பிரதேசத்தை கையகப்படுத்தி உள்ளனர்.

இதன்காரணமாக இந்த 52 குடும்பங்களும் தமது வீடுவாசல்களையும் நிலங்களையும் இழந்து அநாதரவாகியிருந்தனர்.

முள்ளிக்குளத்தில் 287 குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. இவர்களுடைய நிலத்தை பாதுகாப்புக் காரணங்களுக்காக எடுத்துக் கொண்ட கடற்படையினர் இவர்களுக்கு சிலாவத்துறையிலிருந்து எட்டு மைல் தொலைவில் அடர்ந்த காட்டின் மத்தியில் நிலத்தை வழங்கியுள்ளனர்.

அக்காடுகள் குடியிருப்புக்கு ஏற்றவாறு துப்பரவுகூடச் செய்யப்பட்டிருக்கவில்லை. தமது இடத்தில் கடற்படையினர் குடிகொண்டதால் அவர்களுக்கருகில் வாழ முடியாத காரணத்தால் 125 குடும்பங்கள் அதனை ஏற்று அங்கு சென்றுள்ளன.

மீன்பிடித்தொழிலைச் செய்துவந்த அந்தக் குடும்பங்கள் தற்போது அந்தத் தொழிலைக் கூடச் செய்யமுடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அரசாங்கத்திடமிருந்தோ அல்லது அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்தோ எவ்வித உதவிகளும் இவர்களுக்குக் கிடைக்கப் பெறவில்லை.

இப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த 52 குடும்பங்கள் ஆயர் இராயப்பு ஜோசப்பிடம் தமது பிரச்சினைகளைச் சமர்ப்பித்ததன் விளைவாக ஆயர் தனக்குச் சொந்தமாக மன்னார் மேற்கில் தரவன்கோட்டையில் இருந்த நிலத்தை அவர்களுக்குப் பங்கிட்டு வழங்கியுள்ளார்.

முள்ளிக்குளம் ஒரு கத்தோலிக்கக் கிராமமாகும். மன்னாரில் இருந்து 80 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கிறது. 300 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றை உடைய ஒரு கிராமம் அது. அங்கு குடியிருந்த மக்கள் மீன்பிடியிலும் விவசாயத்திலும் ஈடுபட்டு வந்தனர். முதன் முதலில் கடந்த 1991 இல் இவர்கள் இடம்பெயர நேரிட்டது. எனினும் 2007 இல் மோதல் உக்கிரமடைந்த போது முற்று முழுதாக அவர்கள் இடம்பெயர நேரிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

## க.பொ.த. [சா/தர] பரீட்சைப் பெறுபேறுகள்

### யா/கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்

**ஆங்கில மொழி மூலம்**

எஸ்.தவரஞ்ஜன் (7ஏ,2பி), எஸ்.டினேஸ்குமார் (6ஏ,பி,2சி), ரி.கஜீவன் (4ஏ,3பி,2சி), ஏ.யமுனா(3ஏ,பி,4சி,எஸ்), கே.சிவநிரஞ்ஜனா (3ஏ,2பி,சி,3எஸ்).

**தமிழ்மொழி மூலம்**

ரி.நிஷாந் (4ஏ,3பி,2எஸ்), என். பத்மமேனன் (4ஏ,3சி,எஸ்), ஏ.கஜீஜன் (3ஏ,2பி,சி, எஸ்), ஆர்.சுவிதா (3ஏ,பி,2சி,2எஸ்), வி.கோபிகா (3ஏ,பி,2சி,2எஸ்), எம்.பிரசாந்தன் (3ஏ,2சி, 2எஸ்).

### யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்

இ.வினோஜன் (6ஏ,2பி,எஸ்), வி.தமிழரசன் (5ஏ,2பி,சி.எஸ்), இ.பிறின்சன் (4ஏ,பி,2சி, 2எஸ்), கு.கௌரிபாலன் (4ஏ,3பி,சி), ச.சிந்துஜா (4ஏ,5சி), தெ.துளசிகா (4ஏ,3பி,எஸ்), கு.நவதீபா (3ஏ,5சி,எஸ்), வ.நிரோஜா (3ஏ,2பி,2சி, எஸ்), தி.நிசாந்தன் (3ஏ,4பி,சி,எஸ்).

(ஸ்ரீ-3-246)

## இலவச தையல் பயிற்சி வகுப்பு

(பூநகரி)

கிராமிய மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தால் பூநகரி ஆலங்கேணியில் யுவதிகளுக்கான இலவச தையல் பயிற்சி வகுப்பு கடந்த வாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இப்பயிற்சி நெறியில் 25க்கு மேற்பட்ட யுவதிகள் நேர்முகத் தேர்வின்மூலம் தெரிவுசெய்யப்பட்டு பயிற்சியினைப்பெற்று வருகிறார்கள். ஆறுமாத காலம் கொண்ட இப் பயிற்சியில் பங்குபற்றும் நாட்களுக்கு நூறு ரூபா வீதம் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. (ஸ்ரீ-3-84)

## மெய்வல்லுநர் போட்டி

(பூநகரி)

பூநகரி பரமன்கிறாய் அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் முதல்வர் ப.ஆனந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக 661 ஆம் பிரிவு படைத்தளபதி கேணல் டய மால் ஜெயசூரியாவும் விசேட விருந்தினராக பூநகரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.தருமரத்தினம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-3-84)

## அணுக்கதிர்வீச்சுத் தாக்கத்திலிருந்து பாதுகாக்க வெங்காயம், சாணம் உதவும்

### இந்திய பேராசிரியர் தெரிவிப்பு

அணுக்கதிர்வீச்சுத் தாக்கத்திலிருந்து தப்பிக்கொள்ள வெங்காயம், சாணம் என்பன உதவும் என இந்தியாவின் பௌதீக திணைக்களத்திலுள்ள இணைப் பேராசிரியரான என். கே.உத்தம் தெரிவித்துள்ளார்.

அணுக்கதிர்கள் வெளியேற்றப்படும் போது காமா கதிர்களே மிகவும் தீங்கு விளைவிப்பதாகவும் பாரம்பரியமாக மேற்கொள்ளப்படும் நடைமுறைகள் சிலவற்றின் மூலம் காமா கதிர்களின் தாக்கத்தைக் குறைக்க முடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சட்டைப்பைகளில் வெங்காயத்தை வைத்திருத்தல், வீட்டுச்சுவர்களின் வெளிப்புறத்தே மாட்டுச் சாணத்தை மெழுகுதல் என்பன போன்ற பாரம்பரிய முறைகள் மூலம் இந்த காமா கதிர்களின் பாதிப்பைத் தடுக்க முடியுமென அவர் கூறியுள்ளார்.

வீட்டுச் சுவர்களில் மாட்டுச் சாணத்தால் மெழுகினால் அவை காமா கதிர்களை உறிஞ்சிவிடும் என்றும் உண்மையிலேயே மாட்டுச் சாணமானது அல்பா, பீற்றா, காமா ஆகிய மூன்று கதிர்களையும் உறிஞ்சிவிடும் தன்மை கொண்டது. இவற்றில் அல்பா கதிர்கள் ஆடைகளின் படைகளுக்குள் ஊடுருவ முடியாதவை.

அவற்றைத் தொடர்ந்து பீற்றாக் கதிர்கள் தாக்குகின்றன. அவற்றாலும் ஆடைகளை ஊடுருவ முடியாது. ஆனால், காமா கதிர்கள் உடலின் இழையத்தின் ஊடாக ஊடுருபவையாகும். இவை மிகவும் தீங்கானவை என்று அவர் கூறியுள்ளார்.

வீட்டுச் சுவர்களின் மீது மாட்டுச் சாணத்தால் தடிப்பமாக மெழுகினால் அவை காமா கதிர்களை உறிஞ்சிக்கொள்ளும். அதன்மூலம் மக்களுக்கு பாதுகாப்பு கிடைக்கும் என்று உத்தம் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)


இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 1987 06 27

ஆண்டவன் அடியில் 2009 03 30



அமரர் மகாதேவன் சசிகரன் -சசி-

அன்பு அண்ணாவே சொல்லிவிடு ஒரு வார்த்தை
சிறகடித்த பறவைகளாய் நாம் இருந்தோம்
மகிழ்வுச்சிறகு ஒடிந்ததால் மாத்தளன் கடல் மண்ணில் உன்னைப்பிரிந்தோம்
இடி போல் உன் செய்தி கேட்ட நாள் முதல் இன்றுவரை
ஈரவிழிகள் இன்னும் காயவில்லை
இதயத்தில் வேதனையும் தாளவில்லை
ஓயாத கடல் அலை போல் ஓயவில்லை உன்நினைவு
அழகான மனையிருந்தும் மகிழ்வான இடமிருந்தும் பாசமான உறவிருந்தும்
காலமெல்லாம் எங்களுடன் காத்திருப்பாய் என்றிருந்தோம்
பாதி வழியில் எம்மை தவிக்கவிட்டு அவசரமாய் சென்றதேனோ
உன் தங்கை மூவரும் பாலைவனத்தில் பட்ட மரமாய் தவிக்கின்றோம்
உன் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கின்றோம்...

TP.0779616680 -குடும்பத்தினர்-

(ஸ்ரீ-2790)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசநோய் சமூக அணுகுமுறை

21

## காசநோய்க்கான விழிப்புணர்வு

04.எல்லா நலன் நல்குபவர்களையும் ஈடுபடுத்தல்

1.பொதுசன-பொதுசனத் தொடர்புகள்.

2.பொதுசன-தனியார் அணுகுமுறை

3.சர்வதேச தரத்திலான காசநோய்ப் பராமரிப்பு

05.மக்களைக் காசநோய் தொடர்பாக வலுவூட்டல்

1. கருத்துருவாக்கம், தொடர்பாடல், சமூக ஈடுபாடு/பங்களிப்பு சமூகமயமாதல்.

2.காசநோயாளியின் நலனில் சமூகத்தின் பங்களிப்பு

3.காசநோயாளரின் நலன் பேணலில் நோயாளரின் உரிமைகளைப் பேணல்.

06.காசநோய் தொடர்பாக ஆய்வுகளை செய்தலும் ,ஊக்குவித்தலும்.

1.நிகழ்ச்சித் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட நடைமுறை ஆய்வுகள்.

2.புதிய நோயறிமுறைகளை உருவாக்குவதற்கானதும், மருந்துகளுக்கும் தடுப்பு மருந்திற்குமான ஆய்வுகள்.


18.காசநோய் தொடர்பான பொதுவான ஐயங்களும் அதற்கான விளக்கங்களும்

**காசநோய் என்றால் என்ன?**

✦ காசநோய் மைக்றோபற்றீரியம் ரியூபக்குளோசிஸ் எனப்படும் ஒரு வகை பக்றிரியாவினால் ஏற்படுகிறது.

இது காற்றினால் பரவக்கூடிய தொற்று நோய்

உலகில் 1/3 பகுதியினர் காசநோய்த் தொற்றலுக்கு உள்ளாகியுள்ளனர்.




**காசநோய் எவ்வாறு உருவாகுகின்றது?**

✦ ஒருவரின் உடலில் காசநோய்க் கிருமிகள் செல்லும்போது குருதியில் உள்ள தின் குழியங்கள், நிணநீர்க் குழியங்கள் என்பவற்றின் செயற்பாட்டினால் சிறைப்பிடிக்கப்பட்டு செயலற்ற நிலைக்கு மாற்றப்படும்.

✦ ஒருவரின் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி குறையும் போது சிறைப்பிடிக்கப்பட்ட கிருமிகள் சிறையினின்று விடுபட்டு நோயினை ஏற்படுத்துகின்றன.

✦ காசநோய் பொதுவாக நுரையீரலைத் தாக்குகின்றது.

✦ பின்னர் குருதிமூலம் உடலின் ஏனைய பகுதிகளைச் சென்றடைகின்றது.

அவையாவன:

மூளை மென்சவ்வு, சிறுநீரகம், பலோப்பியன் குழாய்,விதை,என்பு,மூட்டு, நுரையீரல் சுற்றுச்சவ்வு இருதயம், நிணநீர் மூலம் நிணநீர் முடிச்சினைச் சென்றடையும்.

**காசநோய் எவ்வாறு பரவும்?**

காசநோயினால் பாதிக்கப்பட்ட ஒருவர்

✦ இருமும் போது

✦ தும்மும்போது

✦ கதைக்கும்போது

✦ எச்சில், சளியினைத் துப்பும் போது

காசநோய்க் கிருமிகள் காற்றினை அடைகின்றன. காசநோய்க் கிருமிகள் உள்ள காற்றினை ஒருவர் சுவாசிக்கும் போது அது அவரின் நுரையீரலை அடைகின்றது.

**காசநோய் யாருக்கு வரும்?**

எவருக்கும் ஏற்படலாம். எனினும் கூடுதலான ஆபத்தை எதிர்பார்க்கக் கூடியவர்கள்:

காசநோயாளியுடன் நெருங்கிய தொடர்புடையவர் உதாரணம்:குடும்ப உறுப்பினர்.

✦ காசநோயாளியுடன் ஒன்றாக வசிப்பவர் அல்லது வேலை செய்பவர்.

✦ போசக்கு குறைபாடு உடையவர்.

✦ வறுமை காரணமாக நெருங்கி வாழ்பவர்கள்,தகுந்த வீட்டு வசதி இல்லாதவர்கள் ,இடம்பெயர்ந்தோர்

✦ காற்றோட்டம்,சூரியஒளி குறைந்த இடங்களில் வாழ்பவர்கள்.

✦ புற்றுநோய்,எச்.ஐ.வீ.சலரோகம் போன்ற நோய்கள் உள்ளவர்கள்.

✦ மதுபானம் ,போதைப்பொருட்கள் பாவிப்பவர்கள்.

✦ புகைபிடிப்பவர்கள்

✦ சுகாதாரத் தொழிலாளர்களாகப் பணி புரிபவர்கள்.

**ஏனைய அறிகுறிகள்**

✦ நிணநீர் கணுக்கள் வீங்குதல் (பொதுவாக கழுத்துப் பகுதி

✦ இருமும் போது நெஞ்சில் வலி

(தொடரும்)



Dr,சி.யமுனானந்தா, MBBS,DTCD
மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி,
மார்புநோய் சிகிச்சை நிலையம்,
பண்ணை,யாழ்ப்பாணம்.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## ஆரோக்கிய வாழ்வில் யாழ்ப்பாணத்து கீரைகள்

**மருத்துவப் பயன்கள்**


**அரைக்கீரை**

நாள்தோறும் நம் உணவில் இக்கீரையை சேர்த்துண்ண உடல் உறுதிபெறும். உடல் அழகு மெருகேறும். இக்கீரையை உணவில் சேர்த்துக் கொள்வதால் தலைமுடி கறுப்பாக வளரும். அரைக்கீரை விதைகளுடன் நல்லெண்ணெய் விட்டு காய்ச்சி வடித்து எடுத்து போத்தலில் சேகரித்து வைத்துக் கொண்டு தடவி வர தலைமுடி கறுப்பாகவும் செழிப்பாகவும் வளரும். கண்ணுக்கும் குளிர்ச்சியை உண்டாக்கும்.


இதனுடன் வெங்காயம், சுக்கு, பூண்டு, மிளகு, பெருங்காயம் சேர்த்து கடைந்து சாப்பிட வாய்வு, வாத நோய்கள், குளிர்காய்ச்சல், உடல் வலி நீங்கும். இக்கீரை உடலை வளர்க்கும்.

இதில் முளைக் கீரையை விட அதிகளவு இரும்புச் சத்து காணப்படும். 100 கிராம் கீரையில் 38.5 கிராம் இரும்புச் சத்து காணப்படும்.


சித்த மருத்துவ நோக்கில் அரைக்கீரை வாதநோய் வராமல் தடுப்பதற்கும் உடலை ஆரோக்கியமாக வைத்திருக்கவும் முக்கிய இடம் வசிக்கின்றது.



அரைக்கீரை



மிளகு தக்காளி



பொன்னாங்காணி

**பொன்னாங்காணி**

இதில் 2 வகைகள் உண்டு. நாட்டுப் பொன்னாங்காணி, சீமைப் பொன்னாங்காணி. இதில் நாட்டுப் பொன்னாங்காணியே பச்சை நிறமாகவும், இலைகள் சிறியதாயுமிருக்கும். சீமைப் பொன்னாங்காணி சிவப்பு நிறமுடையதாய் இலைகள் தடித்தும் நீண்டதாகவும் இருக்கும்.

நாட்டு பொன்னாங்காணியே சிறந்தது. இக்கீரையில் பொன்சத்து உண்டு. இதைக் கிரமப்படி பாகஞ்செய்து தினந்தோறும் உண்டு வருபவர்களது உடல் பொன் போன்று பிரகாசிக்கும் என்பது சித்தர்களின் அருள்வாக்கு.

பொன்+ஆம்+காண்+நீ= பொன்னாங்காணி. அதாவது இதை உண்டால் உடல் பொன்னாகக் [illegible] என்பது பொருள்.

பொன்னாங்காணி கீரையை துவரம் பருப்புடன் சிறிது நெய் சேர்த்து சமைத்து உண்டு வரலாம்.

100 கிராம் கீரையை தனியாக உபயோகிக்கலாம். சிறிது தயிர், தேங்காய் சேர்த்தால் போதுமானது.

இதன் இலைகளை நெய்யிலிட்டு வதக்கி உண்ண குளிர்ச்சி தரும். கண்பார்வை மங்கல் தீரும். வாய்துர்நாற்றம் நீங்கும். மூலச்சூடு, உடல்சூடு நீங்கி உடல் அழகு மிகும். முடி வளர்ச்சிக்கு உதவும். சுத்தமான பச்சை இலைகளை அரைத்து காலையில் வெறும் வயிற்றில் ஒரு எலுமிச்சம் காயளவு 40 நாட்கள் சாப்பிட்டு வர கண் குறைபாடுகள் நீங்கும். இதன் இலைகளுடன் தேங்காய் , வெங்காயம் சேர்த்து [illegible]யில் வதக்கி உண்டு வர விந்து விருத்தியடையும்.

**மிளகு தக்காளி**

தினந்தோறும் இக்கீரையை சமைத்துண்ண உடலிற்கு வலிமை உண்டாக்கும். இதன் இலைகளுடன் துவரம் பருப்பு அல்லது பாசிப்பருப்பு சேர்த்து அத்துடன் வெங்காயமும் சேர்த்து கடைந்து நெய் சேர்த்து சோற்றில் பிசைந்து உண்ண வாய்ப்புண், குடல் புண் முதலியன குணமாகும். குடல் புண்ணிற்கு சிறந்த கீரையாகும்.

மிளகு தக்காளி இலைகளை தண்ணீரில் தூய்மையாக்கி ஓரிரு இலைகளை வாயில் போட்டு மென்று குதப்பி சாற்றை விழுங்கினால் வாய்ப்புண், நாக்கில் உண்டாகும் கொப்பளம் முதலியன தீரும். மிளகு தக்காளி காய்களை சேகரித்து நீரில் தூய்மையாக்கி மோரில் ஊற வைத்து ஒரு வார காலம் பகல் நேரங்களில் வெயிலில் உலர வைத்து வற்றல் தயாரித்து சேமித்து வைத்துக் கொண்டு, நெய்யில் பொரித்து உண்ண மலம் நன்றாக வெளியேறும். நாவில் ஏற்படும் சுவையின்மை, வாந்தி தீரும்.

மிளகு தக்காளியை வற்றல் குழம்பு செய்து இரவு நேரங்களில் உண்டு வர உடல் வலி தீரும்.

(தொடரும்)

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கின்னஸ் சாதனை நோக்கி .... !
# உலக நாணயத்தாள்கள் சேகரிப்பு

**யாழ்ப்பாணத்தில் பல பாடசாலைகளிலும் 'உலக நாணயத் தாள்கள்' கண்காட்சியை நடத்திவரும் பேராசிரியர் சந்தியாகு செல்வகுருஸ் அந்தோனிப்பிள்ளை 247 நாடுகளின் நாணயத் தாள்களைச் சேகரித்து வைத்துள்ளார், இன்னும் ஏழு நாடுகளின் நாணயத் தாள்களைச் சேகரித்துக் கொண்டதும் கின்னஸ் சாதனையை நிலைநாட்டுவார்.**

**பேராசிரியர் சந்தியாகு செல்வகுருஸ் அந்தோனிப்பிள்ளை அவர்களுடனான நேர்காணல் இங்கு தரப்படுகிறது. (ஆ-ர்)**

**கேள்வி :- உங்களுடைய வாழ்க்கை வரலாறுபற்றிக் கூறமுடியுமா?**

பதில் :- பதுளையில் உள்ள பசறைப் பிரதேசத்தில் சாதாரண கூலித் தொழிலாளியின் மகனாக 1950.09.17 இல் பிறந்தேன். பண்டாரவளை சென்மேரிஸ், பண்டாரவளை சென் ஜோசப், குருத்தலாறு சென்தோமஸ் ஆகிய கல்லூரிகளில்



CEYLON TEN CENTS - 1965
இலங்கையின் பத்து சதம் - 1965

கல்வி கற்றேன். பின்னர் இந்தியாசென்று அங்கு பிரத்தியேகக் கல்லூரிகளில் கற்றுத் திறமைச் சித்தியைப்பெற்றேன். தமிழகத்தில் அரசியல்துறைப் பேராசிரியராகப் பணியாற்றினேன். விடாமுயற்சியும் கடின உழைப்பும் என்னைப் .பேராசிரியர் என்ற உயர்பதவிக்கு இட்டுச் சென்றன. இப்பொழுது நான் மட்டக்களப்பு ஆரயம்பதியில் வசித்து வருகின்றேன்.

**கேள்வி :- நாணயத்தாள் சேகரிக்கும் ஆர்வம் உங்களுக்கு எவ்வாறு ஏற்பட்டது?**

பதில் :- எமது பிரதேசத்தில் மரண நிகழ்வின் போது பிரேதங்களை வீதியில் ஊர்வலமாகச் சுமந்து செல்வார்கள். அவ்வாறு செல்லும்போது அரிசியுடன் நாணயங்களைக் கலந்து வீதியில் வீசிச்செல்வது வழக்கம். பன்னிரண்டு வயதுச் சிறுவனாக இருக்கும் போது பண்டாரவளையில் நடைபெற்ற இந்தியப் பிரமுகர் ஒருவரது மரண ஊர்வலத்தில் கலந்து



CEYLON FIVE CENTS - 1978
இலங்கையின் ஐந்து சதம் - 1978


கொண்டேன். அவ்வேளை வீசப்பட்ட நாணயங்களைப் பொறுக்கிச் சேகரிதேன். அச்சமயம் அருகில் நின்ற முதியவர் "மரணஊர்வலத்தில் வீசப்படும் நாணயங்களை எடுத்தால் பிசாசு பிடிக்கும்" என்று என்னிடம் கூறினார். ஆனாலும் நான் அதனைப் பொருட்படுத்தவில்லை. பொறுக்கி எடுத்த நாணயங்களை வீட்டில் ஒருவருக்கும் தெரியாமல் ஒரு செம்பினுள் மறைத்து வைத்தேன். ஒரு நாள் எனது பாட்டியார் மறைத்து வைத்த செம்பை எடுத்துவிட்டார். "எப்படி இந்த நாணயங்கள் கிடைத்தன" என்று என்னிடம் கேட்டார். நாணயத்தைப் பெற்றுக் கொண்டவிதத்தை உள்ளபடி கூறினேன். அவ்வேளை இதனைக் கேட்ட எனது பாட்டனார் தன்னிடமிருந்த இந்திய நாணயங்களைக் கொடுத்து நாயணச் சேகரிப்பை முதன் முதலில் ஊக்கப்படுத்தினார்.

**கேள்வி :- 247 நாடுகளுக்குரிய நாணயங்களைச் சேகரித்து வைத்துள்ளீர்கள் அவற்ற எவ்வாறு பெற்றுக்கொண்டீர்கள்?**

பதில் :- சிறுவனாக இருக்கும் போது என்னால் சேகரிக்கப்பட்ட நாணயங்களை வீட்டுக்கு வரும் உறவினர்களுக்கும் விருந்தினருக்கும் காட்டுவேன். அவர்கள் என்னைப் பாராட்டி மேலும் தம்மிடம் உள்ள நாணயங்களைக் கொடுத்தார்கள். அவர்களது பாராட்டும் ஊக்குவிப்புமே என்னை மேலும் மேலும் நாணயங்களைச் சேகரிக்கத் தூண்டின. பின்பு தொழில் நிமித்தமாக வெளிநாடுகளுக்குச் சென்றபோது அந்நாடுகளின் நாணயத் தாள்களையும் சேகரித்துக் கொண்டேன். உலகலாவியரீதியில் நண்பர்களின் தொடர்புகளை விரிவுபடுத்தினேன். அவர்கள் மூலமும் நாணயங் களைப் பெற்றேன் வேறு சிலர் அன்பளிப்பாக நாணயங்களைக் கொடுத்து உதவினார்கள். பணம் கொடுத்தும் பல நாணயங்களை வாங்கிச் சேகரித்தேன்.

**கேள்வி :- நாணயத்தாள் தயாரிப்புக்கள் ஆரம்பகாலத்தில் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டன?**

பதில் :- உலகில் ஆரம்பத்தில் நாணயங்கள் மிருகத்தோல், ஓலை, புகையிலை, துணி முதலியபொருள்களினால் தயாரிக்கப்பட்டன. மண்டையோடு, யானைத்தந்தம், எலும்புகள் முதலியவற்றினாலும் நாணயங்கள் தயாரிக்கப்பட்டன. பின்னர் செப்பு, வெள்ளி, அலுமினியம் முதலிய உலோகங்கள் நாணயத் தயாரிப்புக்குரிய மூலப் பொருட்கள் ஆயின.



QUEEN VICTORIA FIVE CENTS -1892
விக்டோரியா மகாராணி,
ஐந்து சதம் - 1892

**கேள்வி :- உலகில் சொந்த நாணயங்கள் இல்லாத நாடுகளும் உள்ளனவா?**

பதில் :- ஆம் உள்ளன. உலகில் 256 நாடுகள் உள்ளன. அவற்றுள் பாலஸ்தீனம், ஸ்க்கீயூஸ் என்னும் ஆபிரிக்கத் தீவிலும் சொந்த நாணயங்கள் புழக்கத்தில் இல்லை. பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் நாணயங்களும் ஸ்க்கீயூஸ்ஸில் அமெரிக்க டொலரும் பயன் பாட்டில் உள்ளன.

**கேள்வி :- இலங்கையில் நாணயத் தாள்ப் பயன்பாடு ஆரம்பகாலங்களில் எவ்வாறு இருந்தது?**

பதில் :- இலங்கையில் போர்த்துக்கேயர் ஆட்சிநிலவியபோது போர்த்துக்கேய நாணயங்கள் அறிமுகப்படுத்தப்




QUEEN VICTORIA TEN CENTS - 1892
விக்டோரியா மகாராணி,
பத்து சதம் - 1892

பட்டன. அதன் பின்னர் ஒல்லாந்தரின் வரையறுக்கப்பட்ட நிறுவனம் V.O.C நாணயங்களை இலங்கையில் அறிமுகப் படுத்தியது. ஆங்கிலேயர் ஆட்சியின் போது 1870இல் ரூபா, சதம் என்ற பெயரோடு நாணயங்கள் அறிமுகப் படுத்தப்பட்டன.

**கேள்வி :- இலங்கைக்குரிய பழைய நாணயங்கள் எத்தனையாம் ஆண்டு காலத்திலிருந்து உங்களிடம் உள்ளன?**

பதில் :- இலங்கையில் முதன்முதலாக



ரூபா, சதம் என்ற பெயரோடு 1870 இலிருந்து வெளிவந்த நாணயங்களும் 1944 இலிருந்து முதன்முதலாக நாணயத்தாள்கள் அறிமுகமானதிலிருந்து இன்று வரை பயன்படுத்தப்பட்ட, பயன்படுத்தப்படுகின்ற அனைத்து நாணயத்தாள்களும் என்னிடம் உள்ளன.

**கேள்வி :- உலக நாணயத்தாள் கண்காட்சியை எங்கு முதன் முதலாக நடாத்தியுள்ளீர்கள்?**

பதில் :- காத்தான்குடி மக்கள் வங்கி முகாமையாளர் அழகுராசாஜயா என்னிடமுள்ள நாணயத்தாள்களைப் பார்க்க நேர்ந்தபோது அவற்றை மாணவ சமூகத்திற்கு காட்டினால் அவர்களிடம் சேமிப்புப்பற்றிய விழிப்புணர்வும் அதுபற்றிய அறிவும் ஏற்படும் என்றார். அவரது விருப்பத்திற்கேற்ப காத்தான்குடி கலாசாரமண்டபத்தில் 2008ஆம் ஆண்டு உலக நாணயத்தாள்கள் கண்காட்சியை நிகழ்த்தினேன். கண்காட்சி நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களினதும் புத்திஜீவிகளினதும் ஆர்வத்தினை இனம் கண்டுகொண்டேன். அதனால் பொத்துவில் தொடக்கம் யாழ்ப்பாணம்



GEORGE VI KING & TEN CENTS - 1951
6வது ஜோர்ஜ் மன்னன்,
பத்து சதம் - 1951


வரை உலக நாணயத்தாள்கள் கண்காட்சியை நடத்தி வருகின்றேன். இது எனக்கு மனநிறைவைத்தருவதாக அமைகின்றது.

இலங்கையில் எல்லா மாவட்டங்களிலுமுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் உலக நாணயத்தாள்கள் கண்காட்சியை நடத்தவுள்ளேன்.

நிறைவில் உலகநாணயத்தாள்கள் காட்சியகம் ஒன்றினை இலங்கையில் அமைக்க வேண்டும் என்பதே எனது பேராவல்.

**கேள்வி :- உலகநாணயத்தாள்கள் கண்காட்சியை பாடசாலைகளில் நடத்துவதன் மூலம் நீங்கள் பெற்ற அநுபவம் எத்தகையது?**

பதில் :- உலகநாணயத்தாள்கள் கண்காட்சியினைப் பாடசாலைகளில் நிகழ்த்தியதன் மூலம் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் உறவினைப் பெற்றுள்



GEORGE-V KING & EMPEROR, FIVE CENTS - 1926
5வது - ஜோர்ஜ் மன்னன்,
ஐந்து சதம் - 1926

ளேன். மாணவர்களின்திறமையை இனம் காண முடிந்தது.

அண்மையில் 263 ஆவது உலக நாணயத்தாள்கள் கண்காட்சியினை யா/மகாஜனாக் கல்லூரியில் நடத்தி போது அங்கு உயதரப்பிரிவில் கல்விகற்கும் சௌந்தராஜன் ஸ்ரீஹர்வுன் என்னும் மாணவன் தான்சேகரித்து வைத்திருந்த 68 நாடுகளுக்குரிய நாணயத் தாள்களையும் 152 நாடுகளின் முத்திரைகளையும் என்னிடம் காட்டினார். அது என்னை வியப்பில் ஆழ்த்தியது. அவர் எதிர்காலத்தில் திறமைமிக்க சேகரிப்பாளராகத் திகழ்வார்.

**கேள்வி :- உலகநாணயத்தாள்கள் கண்காட்சியினை பாடசாலை மட்டத்தில் நடாத்தும்போது ஏற்படுகின்ற செலவினங்களை எவ்வாறு சீர் செய்கின்றீர்கள்?**

பதில் :- பாடசாலை மட்டத்தில் கண்காட்சியினை நிகழ்த்தும் போது மாணவர்களிடமிருந்து பெறப்படுகின்ற சிறுதொகைப்பணத்தின் மூலம் செல



EDWARD-VII KING & EMPEROR, FIVE CENTS - 1920
VII - எட்வேட் மன்னன்
ஐந்து சதம் - 1920

வினங்கள் சீர்செய்யப்படுகின்றன. இலங்கையில் உள்ள அனைத்துப்பாடசாலைகளிலும் இலவசமாக கண்காட்சியினை நடத்துவதற்கு செல்வந்த தனியார் நிறுவனங்கள் அனுசரனை வழங்கினால் மாணவர்களுக்குப் பயனுள்ளதாக அமையும் என நம்புகிறேன்.

**கேள்வி :- உலக நாணயத்தாள்கள் சேகரிப்பில் கின்னஸ் சாதனையை நிலைநாட்ட நீங்கள் முயற்சி செய்துள்ளீர்களா?**

பதில் :- 144 நாடுகளுக்குரிய நாணயத் தாள்கள் சேகரிப்பாளர் ஒருவர் கின்னஸில் இடம்பெற்றுள்ளார். என்னிடம் 247 நாடுகளுக்குரிய நாணயத்தாள்கள் உள்ளன. இன்னும் 7 நாடுகளுக்குரிய நாணயத்தாள்களைப் பெறவேணடியுள்ளது. அவற்றைப் பெற்றுக்கொண்டு மிக விரைவில் கின்னஸ் சாதனையை நிலை நாட்ட உள்ளேன்.

**கேள்வி :- நாணயத்தாள்கள் சேகரிப்புத் தவிர வேறு எத்துறையில் ஈடுபட்டு வருகிறீர்கள்?**



EDWARD-VII KING & EMPEROR, TEN CENTS - 1908
VII - எட்வேட் மன்னன்
பத்து சதம் - 1908

பதில் :- உலக நாடுகளின் முத்திரைகளைச் சேகரித்து வருகிறேன் அரும் பொருட்களை சேகரிப்பதிலும் ஆர்வம் காட்டியுள்ளேன்.

**கேள்வி :- நிறைவாக மாணவ சமூகத்திற்கு என்ன கூறவிரும்புகிறீர்கள்?**

**செவ்வி கண்டவர், பா.பாலமுரளி**

பதில் :- எந்த ஒரு மாணவனும் தன்னால் எதுவும் முடியாது, இயலாது என்று இருக்காமல், ஏதாவது ஒரு துறையில் ஆர்வம் கொள்ளவேண்டும் சாதனையாளராக வேண்டும் 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கம் - வெள்ளி பாத்திரத்தில் சாப்பிடும் யோகம் யாருக்கு?

தனஸ்தானாதிபதியான கிரகம், சுக்கிர பகவான் மற்றும் சந்திரபகவான் ஆகிய இவர்களுடன் சேர்ந்து கேந்திரம் ஏறிய ஜாதக அமைப்பு உடையவர் வெள்ளியால் செய்த சகல பாத்திரங்களையும் உணவருந்த பயன்படுத்துவர் மேலும் குரு-கேது சம்பந்தம் ஏற்பட்ட அந்த ஜாதகர் பயன்படுத்தும் பூஜைப் பொருட்களும் வெள்ளியால் செய்ததாக அமைந்திருக்கும்.

புதன் பகவானுடன் சேர்ந்த குரு கேந்திரத்தில் இருந்து நீச்சம் அல்லது பாவ சம்பந்தம் பெறாமல் அமைந்த ஜாதகர் தங்கத்தினாலான பாத்திரத்தில் உணவருந்துவார்.

தனாதிபதி பூரண பலம்பெற்று நவாம்சத்தில் ஆட்சி பெற்று இருந்தாலும் அத்தகைய ஜாதகர் உணவருந்தும் பாத்திரங்கள் தங்கத்தால் செய்ததாக இருக்கும்.


## ஜோதிடக் களம்

# அறுசுவை உணவுகள் யாருக்கு கிடைக்கும்?

தனஸ்தானமாகிய இரண்டாம் இடத்தில் சுபக்கிரகம் இருந்தும் இரண்டாம் பாவாதிபதி சுபக்கிரகத்துடன் கூடி இருக்க அல்லது பார்க்கப்பட்ட அந்த ஜாதகர் நெய், பால், இனிப்பு போன்ற உணவுப் பொருட்களை சேர்த்து உணவருந்துவார்.

தனாதிபதி பூரண பலம் பெற்று குரு, சுக்ரனுடன் பார்க்கப்பட பலருடன் கூடி ருசிமிக்க உணவினை உண்பார். நல்ல ஜீரண சக்தியுடன் விளங்குவார்கள்.

தனாதிபதி ஆட்சி பெற்றோ அல்லது உச்சம் பெற்றோ அல்லது திரிகோணத்திலோ இருந்து பூரணபலம் பெற குருவும் பலம் பெற்று சுபகிரகத்தால் பார்க்கப்பட்டால் அறுசுவை உணவுகளை உண்ணக் கூடியவராக விளங்குவார்.



தனஸ்தானாதிபதியான இரண் டாம் பாவாதிபதி ஜென்மலக்கினாதிபதியால் பார்க்கப்பட்டால் அந்தந்தக் காலத்தில் கிடைக்கும் அற்புத உணவு களை உண்டு சுகமாக சீவிப்பார்.

# நவீன உலோக பாத்திரங்களில் உணவருந்துபவர்கள் யார்?

இரண்டுக்கு உடையவர் தனஸ்தானர்திபதி கேந்திரம் ஏறி நட்பு அல்லது சுப கிரகத்தால் பார்க்கப்பட்டால் நவீனமான உலோகத்தால் செய்த பாத்திரங்களில் உணவருந்துவர்.

சுக்கிரபகவான் மற்றும் குரு, புதன் பூரண பலம் அடைந்து சுபகிரக பார்வை பெற வித்தியாசமான உணவுப் பாத்திரங்களில் உணவருந்துவர்.

தனாதிபதி லக்னாதிபதியுடன் கூடி ஆறில் வீற்றிருந்து அசுப கிரக பார்வை பெற்றால் விலைகுறைந்த பாத்திரத்தில் உணவருந்துவார்.சுப கிரகப் பார்வை பெற்றால் புதிய உலோகங்களில் செய்யப்பட்ட பாத்திரங்களில் உணவருந்துவர்.

தனாதிபதி அஷ்டமாதிபதியுடன் கூடி பாவகிரக பார்வை பெற்றால் இரும்பால் செய்த தட்டில் உணவருந்துவார்.

தனாதிபதி பூரண பலம் பெற்று சுபகிரக சேர்க்கை பார்வைபெற வெண்கலத்தால் செய்த பாத்திரங்களில் உணவு தயாரித்து உண்பார்.

# அன்னதானம் செய்யும் யோகம் யாருக்கு?

தனாதிபதி குரு, புதன் இவர்களுடன் சேர்ந்து அல்லது அவர்களால் பார்க்கப்பெற்றாலோ அல்லது பூரண பலம் பெற்றாலோ அன்னதானம் செய்யும் அன்னதாதாவாக விளங்குவார்.

தனஸ்தானத்தில் குரு- சுக்ரன் இவர்கள் இருந்து தனஸ்தானாதிபதி புதன் பகவானால் பார்க்கப்பெற்று பூரணபலம் பெற அத்தகைய ஜாதக அமைப்பு கொண்டவர் ஆயிரக் கணக்கானவர்களுக்கு அன்னதானம் செய்வர்ர்.

தனாதிபதி கீர்த்தி ஸ்தானமாகிய மூன்றாம் இடத்திலோ, கேந்திர ஸ்தானத்திலோ அல்லது 6 ,10, 13 ஆம் இடங்களிலோ வீற்றிருந்து பலம்பெற்று சுபக்கிரகத்தால் பார்க்கப்பட்டால் வெகுஜனங்களுக்கு அன்னதானம் செய்வார்.

தனாதிபதி உச்சம்பெற்று மேலும் சுபக்கிரகங்களுடன் கூடியிருந்து சுபக்கிரகத்தால் பார்க்கப்பெற்று நவாம்சத்தில் பலம் அடைய ருசியான அன்னத்தை பலருக்கு தானம் செய்வார்.

# காகில்ஸ் நிறுவனத்தின் 50 இலட்சம் ரூபா துப்பாக்கி முனையில் கொள்ளையிடப்பட்டது

(கொழும்பு)

கொழும்பு கெஸ்பேவ பிரதேசத்தி லுள்ள காகில்ஸ் புட்சிட்டி நிறுவனத்திற்கு சொந்தமான பணத்தை எடுத்துச் செல்ல பாதுகாப்பு அதிகாரிகளுடன் சென்ற வான் ஒன்றின் மீது இரண்டு மோட்டார் சைக்கிள்களில் சென்ற ஆயுத தாரிகள் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுவிட்டு வானில் இருந்த 50 இலட்சம் ரூபா பணம் மற்றும் ரிப்டர் ரக துப்பாக்கி என்பவற்றை கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளதாக கெஸ் பேவ பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மதியம் இடம்பெற்றுள்ள கொள்ளையர்களின் துப்பாக்கிச் சூட்டில் பாதுகாப்பு அதிகாரியும் சாரதியும் படுகாயமடைந்துள்ளனர். இவர்கள்களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபின்னர் அவர்களில் ஒருவர் அங்கிருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

காகில்ஸ் நிறுவனத்தின் கிளைகளில் பணத்தை சேகரித்து கொண்டு கெஸ்பேவ கிளையில் பணத்தை சேகரிக்க சென்ற போது குறுக்கு வீதி ஒன்றின் வழியாக மோட்டார் சைக்கிளில் சென்ற கொள்ளை யர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் செய்துள் ளனர். இதன்பின்னர் வானில் இருந்து பணத்தை எடுத்துக் கொண்டு அவர்கள் பிலியந்தல பிரதேசத்தை நோக்கி தப்பிச் சென்றுள்ளனர்.

கொள்ளையர்கள் ரி 56 ரக துப்பாக்கியை பயன்படுத்தியே தாக்குதல் நடத்தியுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். இச் சம்பவம் குறித்து கெஸ்பேவ பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது(ஸ்ரீ-2)

# உள்நாட்டு ஏற்றுமதியாளர்களுக்கு 1600மில். ஊக்குவிப்பு கொடுப்பனவு

ஏற்றுமதியாளர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவாக அரசாங்கம் இதுவரை 1600 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளதுடன் இறுதிக்கட்ட கொடுப்பனவாக 493 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

உலக பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சளைக்காமல் செயற்பட்ட உள்நாட்டு ஏற்றுமதியாளர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு ஒன்றினை வழங்கும் திட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவால் ஆரம்பிக்கப்பட்டது.

அதன்படி உள்நாட்டு ஏற்றுமதியாளர்களுக்கு ஏற்கனவே 1107 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் இறுதிக்கட்டமாக 76 ஏற்றுமதியாளர்களுக்கு 493 மில்லியன் ரூபாவை வழங்கும் நடவடிக்கை அண்மையில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனால் மேற்கொள்ளப்பட்டது.

அரசாங்கம் பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டியேற்பட்ட பின்னணியின் கீழ் நாட்டின் ஏற்றுமதி வருமானத்தை முறையாக பேணி வருவதற்கு இந்த ஏற்றுமதியாளர்கள் தமது முயற்சிகளை தொடர்ந்தும் மேற்கொண்டமை காரணமாக அமைந்தது. அதனால் ஜனாதிபதி இந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவினைப் பெற்றுக் கொடுக்கத் தீர்மானித்துள்ளார். (ஸ்ரீ-2)

# உலகக்கிண்ண ரிக்கெற் விற்பனை செய்யும் போலி இணையத்தளங்கள்

## எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்து

இவ்வருட உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகளுக்கான ரிக்கெட்டுகளை சில போலி இணையத்தளங்கள் விற்பனை செய்வதாக கூறிக்கொள்வது குறித்து இணையத்தள பாவனையாளர்களை இலங்கை கணனி அவசரகால பதிலளிப்பு அணியின் இணைய பாதுகாப்புக்கான தேசிய நிலையம் எச்சரித்துள்ளது.

இவ்வாறான இணையத்தளங்கள் தொடர் பாக ஏற்கனவே இரு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அந்நிலையத்தின் சிரேஷ்ட தகவல் பொறியியலாளர் ரோஹன பள்ளியகுரு தெரிவித்துள்ளார். வெளிநாடுகளிலிருந்து இந்த இணையத்தளங்கள் செயற்படுத்தப்படுவதாகவும் அவர் கூறினார்.

இணையத்தள பாவனையாளர்கள் தமது கடன் அட்டை இலக்கம் உட்பட தனிப்பட்ட விபரங்களை இத்தகைய இணையத்தளங்களுக்கு வழங்குவதை தவிர்த்துக் கொள்ளுமாறு அவர் கோரியுள்ளார். (ஸ்ரீ-2)

# சிறப்புச் சொற்பொழிவு

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வு தொடர்பில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணி பூசை முடிவுற்றதும் *மகாபாரதம்* [illegible] தர் பொன். சுகந்தன் [illegible] ளார். (ஸ்ரீ-3-35)

# பல்கலைக்கழகங்களில் குண்டர் குழுக்களின் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை

## உயர்கல்வியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் குண்டர் குழுக்களின் செயற்பாடுகளை முற்றாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தாம் பல்கலைக்கழகத்தின் மாணவத் தலைவராக இருந்தபோது பகிடிவதையை முற்றாக நிறுத்துவதற்கு உதவியதாக தெரிவித்த அமைச்சர் 1973 ஆம், 74 ஆம் ஆண்டுகளின் பதிவுகளைப் பார்த்தால் இந்த விடயத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். எனவும் கூறியுள்ளார்.

அரசியல் கட்சிகளுக்கு நிதி திரட்டுவதற்காக பல்கலைக்கழக மாணவர்களை வீதியில் ஈடுபடுத்தும் நடவடிக்கை அநாவசியமானது எனவும் இத்தகைய நடவடிக்கைகளை முற்றாக ஒழிப்பதே தமது நோக்கம் என்றும் உயர்கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை குண்டர்களை பயன்படுத்தி மாணவர்களை ஒடுக்கும் முயற்சியில் உயர்கல்வி அமைச்சர் ஈடுபட்டுள்ளதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது.

பல்வேறு சந்தர்ப்பங்களில் மாணவர் செயற்பாட்டாளர்களுக்கு எதிராக உயர்கல்வி அமைச்சர் குண்டர் குழுக்களை பயன்படுத்தியதாக அதன் ஏற்பாட்டாளர் சஞ்சீவ் பண்டார கூறியுள்ளார்.

மாணவர்கள் செயற்பாடுகளை ஒடுக்கும் வகையில் முன்னெடுக்கப்படும் இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக சபரகமுவ பல்கலைக்கழகம் உள்ளிட்ட அனைத்துப் பல்கலைக்கழகங்களினதும் மாணவர்களை ஒன்றிணைந்து பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுத்து வைக்கப்பட்ட புலிச்சந்தேக நபர்கள் தொடர்பில் எதுவும் தெரியாது

## அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு



(கொழும்பு)

விடுதலைப் புலிச் சந்தேக நபர்கள் எதுவித குற்றச்சாட்டும் இன்றி நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாது என்று தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சரான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் விபரங்களை வழங்கினால் அரசாங்கம் அவர்களை விடுவிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பூசா முகாமில் அவ்வாறு குற்றச்சாட்டு எதுமின்றி தடுத்து வைக்கப்பட்டவர்கள் பற்றிய விபரத்தை வழங்கினால் பொலிஸாருடன் தொடர்பு கொண்டு அவர்களை விடுவிக்க ஏற்பாடு செய்ய முடியும் என்றும் அவர் அலரிமாளிகையில் சர்வதேச ஊடகவியலாளர்களைச் சந்தித்து பின்னர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசாங்கத்தின் தடுப்புக்காவலில் உள்ளவர்கள் பற்றிய விபரங்களை அரசாங்க அமைச்சர் மற்றவர்களிடம் கேட்பதை விட சிறந்த நகைச்சுவை வேறெதுவுமில்லை என்று மனித உரிமைப் பணியாளர்கள் வாசுதேவ நாணயக்காரவின் இக்கூற்றுக்குப் பதிலளித்துள்ளனர்.

இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்ரமபாகு கருணாரட்ன இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில்,

தம்மிடம் அவ்வாறு குற்றச்சாட்டு எதுவுமின்றி தடுத்து வைக்கப்பட்டவர்களின் பட்டியல் உண்டென்றும் தேவையானால் அதனைப் பார்வையிடலாம் என்றும் தெரிவித்துள்ளார். பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தந்த தகவல்களின் அடிப்படையிலேயே அப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இந்திய மருந்து நிறுவனங்களுக்கான கேள்விப் பத்திரங்கள் இடைநிறுத்தம்

## அமைச்சர் மைத்திரிபால நடவடிக்கை



(கொழும்பு)

இந்திய மருந்து நிறுவனங்களின் கேள்விப் பத்திரங்களை இடைநிறுத்த அமைச்சர் மைத்திரி பால சிறிசேன நடவடிக்கை எடுத்துள்ளார்.

பல தரப்பட்ட காரணங்களுக்காக இவ்வாறான பத்து இந்திய கம்பனிகளின் கேள்விப் பத்திரங்களை இரத்துச்செய்வதற்கு சுகாதார அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஒழுங்கு முறைப்படி மருந்து வகைகளை வழங்காமை, தேவையான நேரத்திற்கு தேவையான அளவில் பெற்றுத் தராமை , தரம் குறைந்த மருந்து வகைகளை வழங்கியமை போன்ற குற்றச்சாட்டுக்கள் காரணமாக கேள்விப்பத்திரங்களை இடைநிறுத்தியதாக அமைச்சர் குறித்த கம்பனிகளுக்கு அறிவித்துள்ளார். நாட்டிலே ஒருசில அத்தியாவசிய மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமை தொடர்பாக கவனம் செலுத்தி அவற்றிற்குத் தேவையான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்வதாகவும் அமைச்சர் மேலும் கூறினார்.

நாட்டிற்குத் தேவையான அத்தியாவசிய மருந்து வகைகள் தொடர்பாக கவனம் செலுத்தும் போது அவற்றின் விலைகள் பற்றி கவனத்திற்கொள்ளாது தரம் மாத்திரம் கவனத்திற்கொள்ளப்படுவதாகவும் மருந்து வகைகளை கொள்வனவு செய்யும் போது அதனை ஓரிரு நாடுகளுக்கு மாத்திரம் வரையறுக்கப்படுவதில்லை எனவும் கூறினார்.

நிதி அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடி புதிய கம்பனிகளிடமிருந்து விரைவில் தேவையான மருந்து வகைகளை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் வலியுறுத்தினார். (ஸ்ரீ-2)

# அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த உதயகுமார் சுரேஸ்கண்ணா என்பவரது 09030 39771 எனும் இலக்கமுடைய விசேட அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் அலுவலக நேரத்தில் நேரில் சமூகம்தந்து பெற்றுக் கொள்ளலாம். (ஸ்ரீ-2)

# பஹ்ரைனிலுள்ள இலங்கையர்களை கண்டுபிடிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பம்

(கொழும்பு)

பஹ்ரைனில் உள்ள இலங்கையர்களை கண்டுபிடிக்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பஹ்ரைனில் இலங்கைக்கான தூதுவராலயம் இல்லாத நிலையில் அங்குள்ள இலங்கையர்களின் எண்ணிக்கையையோ அல்லது அவர்களின் இருப்பிடங்களையோ கண்டறிய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அங்கு தூதுவராக செயற்பட்டு வருபவரின் கூற்றுப்படி பஹ்ரைனில் பணியாற்றும் குறிப்பிட்ட தொகையினர் தொடர்பான விபரங்களையே தம்வசம் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இலங்கை அதிகாரிகளுடன் இணைந்து பஹ்ரைனில் பணியாற்றுபவர்களின் குறிப்பாக வீட்டுப்பணிப்பெண்கள் தொடர்பான விபரங்கள் சேகரிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை பஹ்ரைனில் 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் பணியாற்றலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சிரியாவில் தற்போது இடம்பெற்று வரும் வன்செயல்களின் இலங்கையர்கள் எவராவது பாதிப்படைந்தார்களா என்பது குறித்து எந்த விதமான தகவல்களும் இதுவரை தமக்கு கிடைக்கவில்லையென வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.


அமைச்சின் பொது ஆணைக்குழுவின் இயக்குநர் நாயகம் சரத் திசாநாயக்க கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையர்கள் எவரும் காயப்பட்டதாக தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை என தெரிவித்தார்.

இதேவேளை சிரியாவின் பல நகரங்களில் தொடர்ந்து பாதுகாப்பு படைத் தரப்பினருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

பல தசாப்தகாலமாக அமுலில் உள்ள அவசர காலச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பது உட்பட பல கோரிக்கைகளை முன் வைத்து ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# மரண அறிவித்தல்



## சரவணமுத்து செல்லத்துரை

அல்லைப்பிட்டி 1ஆம் வட்டாரத்தினை பிறப்பிடமாகவும், இல. 72/50, பணிக்கர் வளவு, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து செல்லத்துரை அவர்கள் நேற்று (29.03.2011) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், சிவமணியின் அன்புக்கணவரும், கலைவாணி (ஜேர்மனி), கலாமோகன் (சுவிஸ்), கலையரசி (லண்டன்), கலைமதி (அஞ்சல் பயிற்சிக் கல்லூரி, யாழ்ப்பாணம்), கலைராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தந்தையும், விமலநாதன், செல்வகுமாரி, நாகரூபன், கணேசகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரசாந்தி - திருநாவலன், சிந்துஜன், விதுஜன், பவித்திரா, அனுருத்திரன், அபிரதன், நர்த்தனன், அனுமிதா, மிதுரன் ஆகியோரின் அன்புப் பேரனும், திருமதி சிவயோகலட்சுமி-மார்க்கண்டு (கனடா) வின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2011) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 72/50, பணிக்கர் ஒழுங்கை, திருநெல்வேலி. தொ.பே: 021 222 6589

தகவல்:- குடும்பத்தினர்.

(4245)

# சுனாமிக்கான முன்னெச்சரிக்கை மற்றும் ஒத்திகை நிகழ்வு

(கிளிநொச்சி)

சுனாமிக்கான பாசாங்கு எச்சரிக்கையும் ஒத்திகை நிகழ்வும் நாளை வியாழக்கிழமை பி.ப 3 மணிக்கு பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைந்துள்ள இரணைமாத நகர் கிராம சேவையாளர் பிரிவில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் மாவட்ட இணைப்பாளர் க. வைரமுத்து தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் ஒத்திகை நிகழ்வு சம்பந்தமாக பொது மக்கள் அமைதியாக இருக்குமாறும் இது ஒரு ஒத்திகை செயற்பாடாகையால் எவரும் குழப்பமடையவோ வதந்திகளை நம்பவோ தேவையில்லையெனவும் பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

இரணைமாத நகர் கிராம மக்களில் வீட்டுக்கொருவர் இவ் ஒத்திகை நிகழ்விற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3)

# செயற்குழு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் செயற்குழு கூட்டம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இல 43, 3 ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள கட்சிப் பணிமனையில் நடைபெறுமென நிர்வாகச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் ஆனந்தமாக இல்லை?


**மாயையின் கட்டுக்குள்**

வாழ்வின் யதார்த்தத்தோடு உங்களால் ஒத்துப்போக முடியாததால் வாழ்வைப்பற்றி மாயையான, வேடிக்கையான கருத்துக்களை உங்களுக்குள் உருவாக்கியிருக்கிறீர்கள். வாழ்வை நீங்கள் கொஞ்சங்கூட புரிந்து கொள்ளாததால், உயிர் குறித்த உணர்வு என்பது உங்களிடம் கொஞ்சங்கூட இல்லை. உங்களிடம் இருப்பது 'எல்லாம் 'அகங்கார உணர்வு' மட்டுந்தான்.

உங்களுக்கு இருக்கும் ஒரே பிரச்சனை என்ன தெரியுமா? நீங்கள் விரும்பியபடி உங்கள் வாழ்க்கை நடக்கவில்லை என்பதுதான். உங்கள் துயரத்திற்கு இதுதானே காரணம்.

வாழ்வைப்பற்றிய தெளிவே இல்லாமல் நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும்போது நீங்கள் நினைப்பது போலவே எல்லாமே நடக்கத் தொடங்கினால், உங்களால் இங்கு வாழ்க்கை நடத்த முடியும் என்று நினைக்கிறீர்களா? அவரவர் விரும்பியது போலவே இங்கு எல்லாம் நடக்க ஆரம்பித்தால் என்ன ஆகும் என்று உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? ஒரு நொடியில் இந்த உலகமே அழிந்து போய்விடும். நல்லவேளையாக நீங்கள் விரும்பியபடி எல்லாமே நடந்து விடவில்லை.

எல்லாம் நீங்கள் நினைத்தது போலவே நடந்தால் பின் நான் எங்கே போவது? மற்றவர்கள் எல்லாம் எங்கே போவார்கள்? அப்புறம் நம் ஒவ்வொருவருக்கும் தனித்தனி மனித உலகங்கள் தேவைப்படும். இதைத்தான் நீங்கள் தேடிக்கொண்டிருக்கிறீர்கள். குடும்பமாக ஒரே வீட்டில் ஒன்றாக வாழ்ந்தால் கூட நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுக்கென்று கற்பனையாக சிருஷ்டித்துக் கொண்டிருக்கும் தனி உலகில்தான் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறீர்கள். யதார்த்தத்தை கையாள முடியாததால் மாயையைத் தேர்ந்தெடுத்து விட்டீர்கள். அதனை சிறிது வழிநடத்தலாம் அவ்வளவு தான்... ஆனால் கட்டுப்படுத்த முடியாது.




நீங்கள் விழிப்புணர்வோடு சிந்திக்கும் போது சிந்தனை உங்கள் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும். அதனால் விழிப்புணர்வோடு சிந்திக்கும்போது நீங்கள் தொலைந்து போக மாட்டீர்கள். யதார்த்தத்தில் நிலை பெற்று விடுவீர்கள். ஆனால் மாயையில் சிக்கினால் தொலைந்து போக வேண்டியதுதான்.

**நம்பகமற்ற வெளிச்சூழல்**

நடப்பது எதுவாக இருந்தாலும் அதைநீங்கள் எப்படி எடுத்துக் கொள்கிறீர்கள் என்பதே மிகவும் முக்கியம். உதாரணமாக ஹோலி பண்டிகையன்று எல்லோரும் ஆனந்தமாக ஒருவர் மீது ஒருவர் வண்ணப் பொடிகளைத்தூவி கொண்டாடுவார்கள். நீங்களும் அன்று குதூகலமாக இருக்கலாம்; ஆனால் அன்று நீங்கள் ஒரு நேர்காணலுக்குச் செல்ல வேண்டும். என்றால் என்னவாகும்... யாராவது உங்கள் மீது வண்ணம் தூவினால் எவ்வளவு எரிச்சல் அடைவீர்கள்? ஆக உங்களைச் சுற்றி எது நடந்து கொண்டிருக்கிறது என்பது முக்கியமல்ல, நீங்கள் எவ்விதமாக உணர்கிறீர்கள் என்பதே மிகவும் முக்கியம். ஆக நீங்கள் ஆனந்தமாக இருப்பதற்கு வெளிச் சூழ்நிலையைச் சார்ந்து இருக்கிறீர்கள் என்றால் ஒன்றை நீங்கள் நிச்சயம் புரிந்து கொள்ள வேண்டும்... வெளிச் சூழ்நிலை என்பது நூறு சதவிகிதம் நீங்கள் விரும்பியபடியே இருக்காது. ஒரு குறிப்பிட்ட அளவிற் குத்தான் நீங்கள் நினைத்தது போலவே அமையும்.

வெளிச்சூழலின் உண்மையான இயல்பை உணராத முட்டாள்கள் தான் அதனோடு தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். இதுதான் அவர்களின் பிரச்சினை! இந்த உலகத்தில் ஒருவர்கூட நீங்கள் விரும்பியபடியே நூறுசதவீதம் நடக்க மாட்டார். உங்கள் கணவன், மனைவி, பெற்றோர், குழந்தைகள், நண்பர்கள்... இப்படி யாராலுமே முடியாது. உங்கள் வீட்டு நாய்கூட நீங்கள் நினைத்தபடியே எப்போதும் நடக்காது. நீங்கள் ஒன்று நினைத்தால் அது வேறு எதையாவது செய்து கொண்டிருக்கும்.



## ஆன்மீகம் 09

யதார்த்தம் இப்படி இருக்க நீங்கள் ஒருவராவது உங்கள் விருப்பப்படி நடக்க வேண்டுமல்லவா? நீங்கள் நினைத்தபடியே நீங்கள் நடக்கும் போது துக்கமாகவா இருப்பீர்கள்? ஆனந்தமாகத்தானே இருக்க முடியும். இதற்கு உங்களுக்கு வேறு யாரும் புத்திமதி சொல்லவோ உபதேசம் செய்யவோ தேவையில்லை. அல்லது ஆனந்தமாக இருங்கள் என்று கீதையில் சொல்லவேண்டுமா? ஆனந்தம் என்பது உங்கள் இயல்பு. ஆனந்தமாக இருக்க நீங்கள் ஆசைப்படத் தேவையில்லை. இது ஏதோ வாழ்வில் அடையவேண்டிய ஒன்று அல்ல. உங்கள் இயல்பிற்கு நீங்கள் திரும்பினாலே உங்களால் ஆனந்தமாக மட்டும்தான் இருக்க முடியும்.

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# இலங்கையில் தமிழியல் ஆய்வு: பண்பாடு

**09**



The House Warming Ceremony of the Jaffna tamil(1981) சமூகத்தைச் சமூகவியல் அடிப்படையிலே ஆராய்ந்து வெளியிட்ட ஆர்.எஸ்.பேரின்பநாயகத்தின் The Karmic theater: Self Society and Astrology in Jaffna (1982) என்னும் நூல் பெரிதும் குறிப்

> "கொழும்பில் நடைபெற்ற சர்வ தேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

பிட வேண்டிய ஒன்று. கிழக் கிலங்கை சமூக நடைமுறை பற்றியதாக டெனிஸ் பி.மக்கில்வ்ரேயின் "House hold in Akkaraippttu: Dowry and Domestic Organization among the Matrilineal Tamils and Moors of Sri Lanka" என்னும்கட்டுரை அமைகிறது.

தமிழர் பண்பாட்டை ஜப்பானியரது பண்பாட்டுடன் ஒப்பிட்டு சில ஆய்வுகள் வெளிவந்துள்ளன. தமிழர் பொங்கல் விழாப்போன்றொரு கொண்டாட்டம் பண்டைய ஜப்பானி யர்களால் மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பாக "ponkal Festival inJapan" என்றொரு கட்டுரையை சுசுமுஓனோ எழுதியுள்ளார். இதனுடைய தமிழ்வடிவம் "ஜப்பானிலும் தைப்பொங்கல்" (மொழி பெயர்ப்பு அ.சண்முகதாஸ் (1986) என வெளியாகியது. அ.சண்முகதாசும் மனோன்மணி சண்முகதாசும் இரு பண்பாடுகளுக்கு இடையே உள்ள ஒற்றுமைகள் சிலவற்றை மொழிச்சான்று காட்டி ஆராய்வதாக "Cultural Similarities between Japanese and Tamil: A Vies through their words"(1986) என்னும் கட்டுரை அமைகிறது. சுசுமு ஓனோ "The Three-level universe in Japanese and Tamil Culture japanese and Tamil New Years Celebrations" என்னும் கட்டுரைகளில் பண்பாட்டொற்றுமை பற்றி எழுது மிடத்து இலங்கைத் தமிழர் பண்பாட்டுக் கூறுகளையும் சான்று காட்டுகிறார். இவ்விரு கட்டுரைகளும் சுசுமுஓனோ, அ.சண்முகதாஸ், மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் சேர்ந்து வெளியிட்ட "World view and Rituals among Jappanese and Tamil"(1985) என்னும் நூலிலே இடம் பெற்றுள்ளன. அந்நூலில் குறிப்பிட்டுள்ள சில கருத்துக் களை விமர்சித்து சு.சுசீந்திரராசா "Japanese - Tamil Cultural Relation ship:A Critical Analysis of Ohno's Proposition"(1986) என்னும் கட்டுரையை எழுதியுள்ளார்.

**2.3 பாரம்பரிய மருத்துவம்**

தமிழ் மருத்துவம் பற்றிச் சில ஆக்கங்கள் வெளியாகியுள்ளன. எஸ்.பவானி "சித்தமருத்துவம்" (1986) என்னும் கட்டுரை எழுதியுள்ளார். "தமிழரின் பாரம்பரிய மருத்துவம்" என்னும் தலைப்பில் பால.சிவகடாட்சம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சோ.செல்வநாயகம் நினைவுப் பேருரையினை 1991 இல் நிகழ்த்தினார் டாக்டர் சே.சண்முகராஜா "ஈழத்து மருத்துவ நூல்கள்" (1993) என்றொரு அருமையான ஆய்வு நூலினை வெளியிட்டார். "மூல நோய்களும் முறையான சிகிச்சைகளும்" (1994) என்னும் நூலை டாக்டர் இ.மங்களாம்பிகை அம்மாள் எழுதியுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சித்த மருத்துவ மாணவர் மன்ற வெளியீடாகிய சித்த மருத்துவம் (1993) இதழில் "முக்கிய நோய் நிலைகளில் உணவின் பங்கு" என்று டாக்டர் த.வஞ்ஜூலேந்திரனும், "மதுமோகத்தில் நாவல் விதை மாத்திரையின் செயல்திறன் பற்றிய ஆய்வு" என்று டாக்டர் திருமதி ம.ஸ்ரீகாந்தனும் கட்டுரைகள் எழுதியுள்ளனர்.

"மருந்து "(1995) என்னும் சித்த மருத்துவ ஆண்டிதழில் சித்தமருத்தியல் பற்றிய பல தகவல்களை ஆசிரியர் டாக்டர் க.பாலசுப்பிரமணியம் தருகிறார். கே.சி.இராமநாதன் "சோதிட வைத்திய சாஸ்திரம்"(1994) என்னும் கட்டுரையை எழுதியுள்ளார். தமிழிலக்கியத்திலே பாரம்பரிய மருத்துவக் கருத்துக்களை இணங் கண்டு அவற்றை

**பேராசிரியர் அ.சண்முகதாஸ்**

விளக்குவதாக இ.பாலசுந் தரத்தின் "இலக்கியத்தில் மருத்துவம், ஏலாதி, திரிகடுகம், சிறுபஞ்சமூலம்" (1988) என்னும் கட்டுரை அமைகின்றது. கிழக்கிலங்கையிலே சித்தாயுள்வேத மருத்துவ நம்பிக்கைகள், நடைமுறைகள் எப்படி அவர்களுடைய சமூகவாழ்வுடன் இணைந்துள்ளன என்பதை மிக விரிவான முறையிலே "Sexule Power and Fertiliy in Sri Lanka Batticaloa Tamils and Moors" (1982) என்னும் கட்டுரையிலே மக்கில்வ்ரே ஆராய்கிறார்.

*(முற்றும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






தேசிய சேமிப்பு வங்கியின் 39 ஆவது ஆண்டு விழா அண்மையில் காரைநகர் தேசிய சேமிப்பு வங்கிக் கிளையில் காரைநகர் கிளை முகாமையாளர் அ. கெங்காதரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வாடிக்கையாளர் ஒருவர் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் முகாமையாளர் அ.கெங்காதரன், உதவி முகாமையாளர் எஸ்.அஞ்சலன் ஆகியோர் நிற்பதையும் வாடிக்கையாளர் ஒருவருக்கு முகாமையாளர் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-காரைநகர் செய்தியாளர்)

## விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட குருநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதற்கமைய நாளை வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரை யூபிலி பிரசவ விடுதிக்கு முன்னால் வைத்து வழங்கப்படவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்கு மேற்குறித்த ஊசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# கொழும்பு-யாழ். வழித்தடத்தில் சேவையிலீடுபடும் 78 தனியார் பஸ் இயக்குநர்களுக்கு அனுமதிப்பத்திரம்

(கொழும்பு)

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் சேவையில் ஈடுபடும் 78 தனியார் பேருந்து இயக்குநர்களுக்கு போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம வழித்தடத்திற்கான அனுமதிப் பத்திரங்களை வழங்கியுள்ளதாக அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கேள்விப்பத்திரம் கோரப்பட்ட பின்னர் இந்த அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டதாகவும் அனுமதிப்பத்திரத்திற்கான குறைந்தபட்ச விலையாக 11 இலட்சம் ரூபாய் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் அப்பேச்சாளர் தெரிவித்தார்.

கொழும்பு-யாழ்.பேருந்து வழித்தடம் அதிகமாக நாடப்படும் பேருந்து வழித்தடங்களில் ஒன்றாகும். அவ்வழித்தடத்திற்கான பேருந்து அனுமதி தொடர்பாக அதிக சர்ச்சைகளும் குற்றச்சாட்டுகளும் இருந்தன.

அதனால் இந்தவழித்தடத்திற்கான அனுமதிப் பத்திரம் வழங்குதல் வெளிப்படையானதாகவும் குற்றச்சாட்டுகளைத் தவிர்க்கும் வகையிலும் இருக்கவேண்டுமென அமைச்சர் விரும்பியதாக அவர் தெரிவித்தார்.

இவ்வீதியில் பேருந்துகளை இயக்குவதற்கு வடக்கு மற்றும் தெற்கைச் சேர்ந்த வர்த்தகர்களிடையே கடும்போட்டி நிலவுகிறது. சில அரசியல்வாதிகளும் இதில் பங்குபற்றுகின்றனர். அதனால்தான் அமைச்சர் இப்பிரச்சினையை மிக வெளிப்படையான வகையில் தீர்வுகாண்பதற்கு விரும்பினார் எனவும் அப்பேச்சாளர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# சமூக வலைத்தளங்களை சிறார்கள் பார்வையிடுவதை கட்டுப்படுத்த கோரிக்கை

வீடுகளில் சமூக வலைத்தளங்களை சிறார்கள் பார்வையிடுவதைக் கட்டுப்படுத்துவதற்கு பெற்றோர்களை ஊக்குவிக்குமாறு தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்களால் கோரப்பட்டுள்ளதாக தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

ஓர் இணையத்தளத்தைச் சிறார்கள் பார்வையிடுவதைத் தடுப்பது வினைத்திறனானதாகமாட்டாது. ஏனெனில் சிறார்கள் தடை செய்யப்பட்ட அந்த இணையத்தளத்தை பார்வையிடுவதற்கு வேறு வழிகளைக் கண்டறியக்கூடும் என தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட்ட கூறியுள்ளார்.

சமூக வலைத்தளங்களை சிறார்கள் பார்வையிடுவதை தடுப்பதில் நாம் செய்யக் கூடியது அதிகமில்லை. எனவே தமது பிள்ளைகள் விரும்பத்தகாத இணையத்தளங்கள் பார்வையிடுவதை பொருத்தமான கணனி மென்பொருட்களை பயன்படுத்தி கட்டுப்படுத்துமாறு பெற்றோர்களிடம் நாம் இணைய சேவை வழங்குநர்கள் மூலம் கோருகிறோம்.

சமூக வலைத்தளங்களை சிறார்கள் பயன்படுத்துவது தொடர்பாக பெற்றோர்த பொலிஸ், சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை உட்பட பல தரப்பினரிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. ஏற்கனவே நாம் ஆயிரத்திற்கும் அதிகமான இணையத்தளங்களை நீதிமன்ற உத்தரவின்பேரில் தடை செய்துள்ளோம் என அவர் கூறினார். (ஸ்ரீ-2)

## கலந்துரையாடல்

வடமராட்சி வலய பாடசாலைகளில் பௌதீக விபரத்திரட்டினைச் சேகரிப்பதற்கான கலந்துரையாடல் நடாத்தப்படவுள்ளது.

இதில் பருத்தித்துறை கோட்டத்திற்கான கலந்துரையாடல் இன்று புதன்கிழமையும் கரவெட்டி கோட்டத்திற்கான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமையும் மருதங்கேணி கோட்டத்திற்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் 8.30 மணிக்கு யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கு வருகைதரும் அதிபர்கள், சிரேஷ்ட ஆசிரியர் ஒருவரையும் அழைத்துவருமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

# ஐ.தே.க.செயற்குழு கூட்டம் ஒத்திவைப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரை தெரிவு செய்வதற் காக நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டம் நியமனங்கள் எதுவுமின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

மொனராகலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டாரவின் பெயரை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாரிக்கார் முன்மொழிந்ததாகவும் அதை சந்திர கங்காந்த வழிமொழிந்ததாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் கூறின.

எனினும் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதால் நியமனம் எதுவும் நடைபெறவில்லை. (ஸ்ரீ-2)



யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தில் ஆயுள் காப்புறுதி வைத்திருந்த சுப்பிரமணியம் பொன்சேகரா என்பவருக்கான மரண இழப்பீட்டு கொடுப்பனவை அவரது மனைவி பொ.ரஞ்சினியிடம் யாழ்.மாவட்ட பிராந்திய முகாமையாளர் ந.சுகுணன் வழங்குவதனையும் அருகில் விற்பனை முகாமையாளர் அன்ரன் மற்றும் உத்தியோகத்தர்கள் நிற்பதனையும் படத்தில் காணலாம்.

2011.03 30

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 0240 - ஹேலியின் வால்வெள்ளி பற்றிய முதலாவது பதிவு.

★ 1492 - ஸ்பெயினில் இருந்து அனைத்து யூதர்களும் ரோமன் கத்தோலிக்கராக மாற வேண்டும் அல்லது அனைவரும் வெளியேற்றப்படுவார்கள் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

★ 1814 - நெப்போலியனுக்கு எதிரான போரில் கூட்டுப்படைகள் பாரிஸ் நகரை அடைந்தனர்.

★ 1822 - ஐக்கிய அமெரிக்காவில் புளோரிடா உருவாக்கப்பட்டது.

★ 1842 - அறுவைசிகிச்சைகளில் முதன் முதலாக மயக்க மருந்து குரோஃபோர்ட் லோங் என்பவரினால் பயன்படுத்தப்பட்டது.

★ 1851 - ஐக்கிய இராச்சியத்தில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

★ 1858 - அழிப்பானுடன் கூடிய எழுதுகோலுக்கான காப்புரிமம் ஹைமன் லிப்மன் என்பவரினால் பெறப்பட்டது.

★ 1867 - அலாஸ்கா 7.2 மில்லியன் அமெரிக்க டொலருக்கு, 2 சதம்/ஏக்கர் (4.19/கிமீ²) ரஷ்யாவின் மன்னன் இரண்டாம் அலெக்சாண்டர் II இடமிருந்து ஐக்கிய அமெரிக்காவின் அரசுச் செயலாளர் வில்லியம் செவார்ட் கொள்வனவு செய்தார்.

★ 1945 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் படைகள் ஆஸ்திரியாவினுள் நுழைந்து வியன்னா நகரைக் கைப்பற்றின.

★ 1949 - ஐஸ்லாந்து நேட்டோ அமைப்பில் இணைந்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து ரெய்க்ஜாவிக் நகரில் கலவரம் இடம் பெற்றது.

★ 1965 - வியட்நாம் போர்: சாய்கோன் நகரில் அமெரிக்கத் தூதராலயத்திற்கு முன்னால் தானுந்துக் குண்டொன்று வெடித்ததில் 22 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1981 - ஜனாதிபதி றொனால்ட் றேகன் வோஷிங்டனில் வைத்து ஜோன் ஹிங்கிளி என்பவனால் மார்பில் சுடப் பட்டார்.

### பிறப்புகள்

★ 1709 - ஆனந்தரங்கம் பிள்ளை, தமிழில் நாட்குறிப்பு எழுதியவர் (இ. 1761)

### இறப்புகள்

★ 1949 - பிரீட்ரிக் பேர்ஜியஸ், நோபல் பரிசு பெற்ற ஜேர்மானியர் (பி. 1884)

★ 1965 - பிலிப் ஹென்ச், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி. 1896)

★ 2005 - ஓ.வி.விஜயன், இந்திய, மலையாள எழுத்தாளர், ஓவியர் (பி. 1930)

**1831 - யாழ்ப்பாணம், மானிப்பாயில் அமெரிக்க மிஷன் கட்டடங்கள் தீப்பிடித்து அழிந்தன.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் வேலணைப் பிரதேச செயலகப் பிரிவின் மகளிர் அபிவிருத்தி நிலையக் கண்காட்சி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தலைமையுரையை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ந.செல்வச்சந்திரன் ஆற்றுவதையும் விருந்தினர்கள் அருகில் அமர்ந்திருப்பதையும் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ரி.மீரா கண்காட்சியினைப் பார்வையிடுவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். *(படங்கள்:-என்.குமார்)*

# வடக்கிலுள்ள வர்த்தகர்கள் தெற்கில் முதலீடுகளை மேற்கொள்ள நடவடிக்கை

## சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் தெரிவிப்பு

வடபகுதியிலுள்ள வர்த்தகர்கள் தெற்கில் தமது முதலீடுகளை மேற்கொள்ள உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். மாவட்ட சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ஜி.கொலம்ப ஆரச்சி தெரிவித்துள்ளார்.

இளைஞர் அலுவல்கள், திறன்கள் மற்றும் அபிவிருத்தி அமைச்சின் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் நேற்று யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் வர்த்தகம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடல் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடபகுதியைப் பொறுத்த மட்டில் யுத்தத்தின் பின் கைத்தொழில் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளதை அறியக் கூடியதாகவுள்ளது.

வடபகுதியிலிருந்து தென்பகுதிக்குச் சென்று முதலீடுகளை மேற்கொள்வது என்பது உடனடியாக சாத்தியப்படாத விடயம். அதைப் படிப் படியாகவே மேற்கொள்ள வேண்டும். சிறுசிறு முதலீடுகள் மூலம் உற்பத்திகளை மேற்கொ ண்டு அவற்றின் ஊடாக சந்தை வாய்ப்பை அதிகரிக்க வேண்டும்.

தொழிற்றுறைகளை ஆரம்பிக்கும் போது சட்டப்பிரச்சினைகள் ஏற்படும். அவை அனைத்தையும் ஒரேயடியாகத் தீர்த்துவிட முடியாது.

வடக்கு, தெற்கு ஆகிய பகுதிகளில் உள்ள தொழிற்றுறைகளை இணைத்து செயற்பட வைக்கவேண்டும். இதன்மூலம் உற்பத்திகளை அதிகரிக்க முடியும்.

அதேவேளை இங்குள்ள உற்பத்திப் பொருட்களை தெற்குக்கு எடுத்துச்சென்று சந்தைப் படுத்துவதற்குத் தரமான உற்பத்திகளை மேற்கொள்ள வேண்டும்.

தரமான உற்பத்திகளை மேற்கொள்ள தேவைப்படும் தொழில்நுட்ப உதவிகளை வழங்க நாம் ஒத்துழைப்பு வழங்குகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

# பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

(அல்வாய்)

தாழையடி றோமன் கத்தோலிக்க பாடசாலையின் பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம் இன்று புதன்கிழமை 12 மணிக்கு பாடசாலை அதிபர் நா. கண்ணதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு சகல பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-3-19)

# பார்வதி அம்மாளின் அஸ்தி நாளை கன்னியாகுமரி கடலில் கரைப்பு

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரின் தாயார் பார்வதி அம்மாளின் அஸ்தியை கன்னியாகுமாரி கடலில் கரைக்கும் நிகழ்ச்சி நாளை நடைபெறவுள்ளது.

இதில் ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ, பழ.நெடுமாறன் உள்ளிட்டோர் கலந்து கொள்ள உள்ளனர். இது குறித்து வைகோ வெளியிட்ட அறிக்கை வருமாறு, வல்வெட்டித்துறையில் இருந்து கொண்டுவரப்பட்டுள்ள பார்வதி அம்மாளின் அஸ்தியை மூன்று கடல்கள் சங்கமிக்கும் குமரி முனையில் கடல் அலைகளில் தூவி நீர்க்கடன் ஆற்றும் நிகழ்ச்சி அன்னையார் மறைந்த 40 ஆம் நாளாகிய நாளை வியாழக்கிழமை மாலை 4 மணி அளவில் நடைபெறவுள்ளது. நானும் பழ. நெடுமாறனும் தமிழ் உணர்வாளர்களும் பங்கேற்க இருக்கின்றோம்.

ம.தி.மு.க. அவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி, பொருளாளர் டாக்டர் மாசிலாமணி, துணைப் பொதுச் செயலாளர்கள், நாசரேத் துரை, மல்லை சத்யா, துரைபால கிருஷ்ணன் ஆட்சி மன்றக் குழு செயலாளர் - நாடாளுமன்றஉறுப்பினர்அ.கணேசமூர்த்திகொள்கை விளக்க அணிச் செயலாளர் நாஞ்சில் சம்பத் ஆகியோரும்கலந்து கொள்கின்றனர் என தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# பஹ்ரைனில் இலங்கைக்கான விசேட அலுவலகம் திறப்பு

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேராவின் ஆலோசனையின் பிரகாரம் பஹ்ரைனில் விசேட அலுவலகமொன்றைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் இலங்கைத் தூதரகமொன்று இல்லாதிருந்த பஹ்ரைனில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் அங்கீகாரத்துடன் இந்த விசேட அலுவலகம் திறக்கப்படவுள்ளது. இலங்கைக்குக் கிடைக்கும் தொழில் வெற்றிடங்களை உறுதி செய்தல் மற்றும் இலங்கை தொழில்புரிவோருக்கான நலன்புரி வசதிகள் வினைத்திறனாக மேற்கொள்ளல் போன்ற பணிகள் இப்புதிய அலுவலகத்தினூடாக மேற்கொள்ளப்படும். இதுவரையில் இப்பணிகள் குவைத் தூதரகத்தினூடாகவே மேற்கொள்ளப்பட்டு வந்தன.

பஹ்ரைனில் சுமார் 7 ஆயிரத்திற்கும் அதிகமான இலங்கையர்கள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து தொழில் புரிந்து வருகின்றனர்.

எதிர்வரும் மூன்று வார காலப் பகுதியினுள் புதிய அலுவலகத்தை திறப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவிக்கின்றது. (ஸ்ரீ-2)

# ஆசிரியர் கல்வி பாடநெறிக்கு விண்ணப்பங்கள் கோரல்

தேசிய கல்வி நிறுவகத்தினூடாக பிராந்திய நிலைகளில் வார இறுதி நாட்களில் நடாத்தப்படும் "ஆசிரியர் கல்வி பாடநெறி" யை தொடர்வதற்காக தகைமையுடைய ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

மேற்படி ஆசிரியர் கல்விப் பாடநெறிக்கு பின்வருவோர் விண்ணப்பிக்க முடியும்.

✦ கல்விச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவின் அல்லது மாகாண கல்வி செயலாளர் கையொப்பமிட்ட முறையான நியமனக் கடிதத்தோடு தற்போது அரசாங்க பாடசாலைகளில் பணிபுரியும் ப்யிற்றப்படாத ஆசிரியர்கள் அல்லது ஆசிரிய உதவியாளர்கள்,

✦ கல்வி அமைச்சின் தனியார் பாடசாலைக்கான பணிப்பாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட தனியார் பாடசாலைகளின் பெயர்ப்பட்டியலில் உள்ளடக்கப்பட்ட பாடசாலைகளில் மாகாண கல்விப் பணிப்பாளரின் அங்கீ காரத்துடன் நியமனக் கடிதம் பெற்று பணியா ற்றும் பயிற்றப்படாத ஆசிரியர்கள்

✦ கல்வி அமைச்சின் பிரிவெனா கல்விப் பகுதியில் பதிவு செய்துள்ள பிரிவெனாக்களில் மாகாண கல்வி பணிப்பாளர் அங்கீகாரத்துடனான நியமனக் கடிதங் கொண்ட பயிற்றப்படாத பிரிவென ஆசிரியர்கள்

✦ 2010 ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்த [illegible] வார இறுதி பயிற்சிக்கு விண்ணப்பித்து இதுவரை பயிற்சி நெறி ஆரம்பிக்கப் படாத அரச , தனியார் மற்றும் பிரிவெனா பாடசாலை ஆசிரியர்களும் மீள விண்ணப்பிப்பதற்கு தகைமையுடையவர்கள் ஆவர்.

எனவே பட்டதாரியல்லாத பயிற்றப்படாத ஆசிரியர்கள் அனைவரும் இச்சந்தர்ப்ப த்தை பயன்படுத்தி பயிற்சியை பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்க வேண்டும்.

எனவே தகைமையுடைய விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவத்தோடு நியமனக் கடிதத்தின் பிரதியை இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும். அத்தோடு ஆசிரியர் கல்வி பாடநெறியைத் தொடரும் மொழி மூலத்திலேயே விண்ணப்பத்தை சமர்ப்பிக் க வேண்டும்.

தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்திற்கான கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் வார இறுதி ஆசிரியர் கல்வி பாட நெறி, மொழி மூலம், பாடநெறி த பாடசாலையின் வலயம் என்பனவற்றைக் குறிப்பிட்டு , பணிப்பாளர், ஆசிரியர் கல்வி நிர்வாகம், கல்வி அமைச்சு, இசுறுபாய, பத்தரமுல்லை என்னும் முகவரிக்கு எதிர்வரும் ஏப்ரல் 8 ஆம் திகதி க்கு முன்னர் அனுப்பிவைக்கப்படவேண்டும்.

இப்பாட நெறி தொடர்பான மேலதிக விபரங்களை 2011.03.25 ஆம் திகதிய வர்த்தமானிப் பத்திரிகையிலோ வலம்புரிக் காரியாலயத்திலோ பார்வையிட முடியும். (ஸ்ரீ-4)

# தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பான பேச்சுவார்த்தை இன்று

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பிலான பேச்சுவார்த்தைகள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன. பெருந்தோட்டத்துறையில் தொழில் புரிவோரின் சம்பளம் தொடர்பான கூட்டு ஒப்பந்தம் நாளையுடன் முடிவடையும் நிலையில் இந்தப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகவுள் ளமை குறிப்பிடத்தக்கது.

முதலாளிமார் சம்மேளனத்துடன் நடைபெறவுள்ள இந்தப் பேச்சுவார்த்தையில் சம்பள உயர்வு தொடர்பிலான கோரிக்கைகள் முன்வைக்கப்படவுள்ளதாக தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

கடந்த முறை நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை அடுத்து பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 285 ரூபா அடிப்படை சம்பளம் மற்றும் 120 ரூபா கொடுப்பனவு அடங்கலாக 405 ரூபா நாள் சம்பளத்தை வழங்குவதற்கு முதலாளிமார் சம்மேளனம் இணக்கம் தெரிவித்திருந்தது.

எவ்வாறாயினும் கடந்த பேச்சுவார்த்தைகளின் போது 240 ரூபாவாக இருந்த ஒரு கிலோ கிராம் தேயிலையின் விலை தற்போது 440 ரூபா வரை உயர்ந்துள்ளதாக தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

மேலும் பொருட்களின் விலைகளும் சுமார் 60 வீதத்தால் உயர்ந்துள்ள நிலையில் தொழிலாளர்களுக்கு அதிக சம்பளத்தை பெற்றுக் கொடுப்பதற்கான யோசனைகள் முன்வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இந்த கூட்டு உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்பட்ட போது நிலவிய குறைபாடுகளை நீக்குவது தொடர்பிலும் இந்தப் பேச்சுவார்த்தைகளில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பிலான கூட்டு ஒப்பந்தத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், பெருந்தோட்ட தொழிற்சங்க [illegible] முதலாளிமார் சம்மேளனம் [illegible] (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார் சாவியை கிரேன் மூலம் மீட்ட ஹோட்டல் உரிமையாளர்


(மெல்போர்ன்)
நியூசிலாந்தில் ஹோட்டல் உரிமையாளர் ஒருவர் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட தனது வீட்டிலிருந்த கார் சாவியை கிரேன் மூலம் மீட்ட செயல் விமர்சனத்துக்குள்ளானது.

நியூசிலாந்தில் கடந்த மாதம் 22 ஆம் திகதி ஏற்பட்ட பூகம்பத்தில் கிறிஸ்ட்சர்ச் நகரம் வெகுவாக பாதிப்படைந்தது. இதனால் 5 வாரங்களாக மக்கள் அபாய வலையைப் பகுதியில் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

இந்நிலையில் வெளியூர் சென்றிருந்த ஜான் பட்டர்ஃபீல்டு என்ற ஹோட்டல் உரிமையாளர் அபாய வலையைப் பகுதியில் 13 ஆவது மாடியில் இருந்த தனது வீட்டிலிருந்து, தனது மற்றும் மனைவியின் கார் சாவி, ஏனைய பொருட்களை கிரேன் மூலம் எடுத்துள்ளார்.

தி ஸ்டார் என்ற தினசரிக்கு பேட்டியளித்த பட்டர்ஃபீல்டு கிரேன் பயன்படுத்த தான் முறையாக அனுமதி பெற்றிருப்பதாக தெரிவித்தார்.

ஆனாலும் அவரின் இச்செயல் மக்களிடையே கடும் விமர்சனத்துக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)



அமெரிக்கா, மிடில் டவுனில் உள்ள அணுஉலைகளில் 1979 லிருந்து மின்சாரம் தயாரிக்கப்படுகின்றது.

# பாக். பெண்ணுக்கு அடித்தது யோகம்

(இஸ்லாமாபாத்)
பாகிஸ்தானில் பழைய கோட்டு வாங்கிய பெண்மணிக்கு அதிர்ஷ்டவசமாக அதிலிருந்து தங்கப்பற்கள் கிடைத்துள்ளன.

பாகிஸ்தானின் வடக்குப் பகுதியான கில்ஜிட்டை சேர்ந்த இர்ஃபான் கன்வல் என்ற அந்தப் பெண்மணி பழைய துணிகளை வாங்கி விற்பவர். அப்படி அவர் வாங்கிய பழைய கோட்டு ஒன்றை ஆராய்ந்த போது அதிலிருந்து 3 தங்கப்பற்கள் கிடைத்துள்ளன.

அப்பற்களை ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயிற்கு விற்ற அவர், இத்தொகை மூலம் தனது நீண்ட நாள் கனவான சொந்த வீடு கட்டப்போவதாகவும் கூறினார். (ஸ்ரீ-2)

# ஜப்பானில் கதிர்வீச்சு அளவு ஒரு இலட்சம் மடங்கு மட்டுமே

## ஜப்பான் அரசு தெரிவிப்பு

(புகுஷிமா)
ஜப்பானின் புகுஷிமா நகரில் உள்ள அணு மின்சார உற்பத்தி நிலையத்தின் 2 ஆவது எண் அணு உலையிலிருந்து கசிந்த கதிரியக்க அளவு ஒரு கோடி மடங்கு என்று சரியாக கணக்கிடாமல் அறிவித்து அனைவரையும் பீதிக்கு உள்ளாக்கலாமா என்று அதை நிர்வகிக்கும் டோக்கியோ எலக்ட்ரிக் பவர் கம்பனி(டெப்கோ) என்ற நிறுவனத்தை ஜப்பானிய அரசு கண்டித்துள்ளது.

ஜப்பானில் கடந்த 11 ஆம் திகதி இடம் பெற்ற மிகப் பெரிய நிலநடுக்கம், ஆழிப் பேரலை ஆகியவற்றுக்குப் பின்னர் அணு உலைகள் ஒன்றன் பின் ஒன்றாக சூடேறி வெடித்ததில் அணுக்கதிர்வீச்சு ஏற்பட்டு வருகிறது. அவற்றைக் குளிரவைக்க ஜப்பானிய அரசு தன்னாலியன்ற அனைத்தையும் செய்து வருகிறது.

ஆனால், அதன் முயற்சிக்கு முட்டுக்கட்டையாக அடுக்கடுக்கான தடைகள் தொடர்ந்து ஏற்படுகின்றன. இந்த நிலையில் கடல் நீரில் கரைந்த அணுக்கதிர்களால் ஏற்பட்ட கதிர்வீச்சை அளந்த தொழிலாளி ஒருவர் ஆலைப் பகுதியில் நிலவிய கடுமையான அணுக்கதிர் வீச்சு காரணமாக அவசர அவசரமாக ஒரு முறை மட்டுமே கதிர்வீச்சு அளவுமானியைப் பார்த்து விட்டு ஒரு கோடி மடங்குக்கு கதிர்வீச்சு ஏற்பட்டிருப்பதாக அறிவித்தார்.

இதனால் உலகம் எங்கும் அதிர்ச்சியும் கவலையும் ஏற்பட்டது. ஜப்பானில் இது மிகப் பெரிய பீதியை ஏற்படுத்தியது. இதனால் சர்வதேச அணுவிசை ஏஜென்சியே செய்வதறியாது திகைத்தது. இந்த நிலையில் கதிர்வீச்சை மற்றொரு முறை அளவிட ஜப்பானிய அரசு நடவடிக்கை எடுத்தது. அப்போது தான் ஒரு இலட்சம் மடங்கு மட்டுமே கதிர்வீச்சு உயர்ந்திருப்பது தெரிந்தது. இதுவும் மனித குலத்துக்கு ஆபத்துதான். என்றாலும் ஒரு கோடி மடங்கு அளவுக்கு இல்லை. அத்துடன் பசுபிக் கடலோரத்தில் வாழும் நாடுகள் சற்றே நிம்மதி பெருமூச்சு விடலாம்.

இந்தக் கதிர்வீச்சும் கடலில் கரைந்து நீர்த்துப் போகும் என்றாலும் பாதிக்கப்பட்ட கடலோரத்தில் மீன்பிடிக்கும் வேலை சுமார் ஒரு மாதத்துக்கு தடைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாலும் மீன்கள், நத்தைகள் போன்றவற்றால் மற்றவர்களுக்கு பாதிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறைவு என்று தெரிவிக்கப்படுகிறது. இதனால் சற்றே நிம்மதி ஏற்பட்டிருக்கிறது. (ஸ்ரீ-2)




# அமெரிக்க உளவாளிகளை குறிவைக்கும் தலிபான்கள்

தலிபான்கள் குறித்து அமெரிக்க இராணுவத்துக்கு உளவு சொல்பவர்களைக் கண்டுபிடிக்க தலிபான்கள் புதிய படையையே ஏற்படுத்திவிட்டனர். லஷ்கர் -இ-பொராசான் என்ற அந்த அமைப்பில் இப்போது 300 க்கும் மேற்பட்டோர் இருக்கின்றனர். கடந்த ஓராண்டாக இந்தப் படை இருந்தாலும் சமீப காலத்தில்தான் இது தொழில் முறையுடன் நேர்த்தியாக நிர்வகிக்கப்படுகின்றது.

உளவாளிகள் உளவு பார்க்கும் புதிய உத்திகளை இந்த அமைப்பு கடைப்பிடிக்கிறது. தலிபான்கள் அவர்களுடைய ஆதரவாளர்கள் கூட்டம் போட்டாலோ, வாகனங்களில் சென்றாலோ டுலோன் என்று அழைக்கப்படும் ஆள் இல்லாத பொம்மை விமானங்கள் பறந்து வந்து குறி தவறாமல் குண்டு வீசி விட்டுசெல்கின்றன. இதில் ஏராளமானோர் உயிரிழக்கின்றனர்.

இந்தத் தாக்குதலுக்கு உள்ளூரில் யாரோ உளவு சொல்வதால்தான் இப்படி தலிபான்களை தாக்கி அழிக்க முடிகிறது என்று உணர்ந்து கொண்ட தலிபான்கள் தங்களுக்கிடையே உலவும் அந்த துரோகிகளை அடையாளம் காணும் பணியை தொடங்கியது.

அப்போது தான் கார், ஜீப் போன்ற வாகனங்களை பழுதுபார்க்கும் மோட்டார் மெக்கானிக்குகள் சிலர் அமெரிக்காவின் சி.ஐ.ஏ விடம் பெரும் தொகையை வாங்கிக் கொண்டு தலிபான்களின் வாகனங்களில் அடையாளத் தகட்டை பொருத்தி விடுவார்களாம். அதில் கிடைக்கும் சிக்னலைக் கொண்டு டுரோன் எனப்படும் ஆளில்லாத பொம்மை விமானம் மூலம் குண்டு வீசி தகர்த்து விடுவார்களாம்.

லஷ்கர்-இ-கொராசான் அமைப்புக்கு ஹக்கானி குழு உதவி செய்கிறது. இந்த விபரத்தை எக்ஸ்பிரஸ் டிரிப்யூன் என்ற பத்திரிகை திங்கட்கிழமை பிரசுரிக்கிறது. தத்தா கேல், மிர்ரம் ஷா, மீர்அலி ஆகிய பகுதிகளில் தலிபான்களின் உளவாளிகள் செயற்படுகின்றனர். வடக்கு வசிரிஸ்தானில் இப்போது இவர்களுடைய பார்வையிலிருந்து யாருமே தப்ப முடியவில்லை.

தெற்கு வசிரிஸ்தானில் இவர்களுடைய ஆதிக்கம் தான். எனவே, பாகிஸ்தான் இராணுவத்திற்கும் இவர்களுக்கும் இடையே மறைமுகமாக நல்ல புரிந்துணர்வு ஏற்பட்டிருந்தால் அவர்கள் இவர்களுடைய நடவடிக்கைகளைத் தீவிரமாகத் தடுப்பதில்லை.

அமெரிக்க இராணுவத்திற்காக மட்டும் அல்ல அமெரிக்காவின் சி.ஐ.ஏ.வுக்காகும் உளவு பார்க்கும் எந்த ஆளையும் உயிரோடு விட்டுவைக்கக்கூடாது என்ற முனைப்பில் தலிபான்கள் செயற்படுகின்றனர். அமெரிக்க இராணுவத்துக்கோ சி.ஐ.ஏ.க்கோ தகவல் தருகிறார் என்ற சந்தேகம் எவர் மீது ஏற்பட்டாலும் அவரைக் கண்காணிக்கின்றனர்.

ஆதாரங்கள் கிடைத்தால் அழைத்துச் சென்று அடித்து விசாரிக்கின்றனர். உண்மையை ஒப்புக்கொண்டால் அவர்களை அங்கேயே கொன்றுவிட்டு அடுத்த ஆளைத் தேடிச் செல்கின்றனர். (ஸ்ரீ)



இங்கிலாந்து, ஸ்டாக் போர்டில் உள்ள பிஸ்கட் தயாரிப்பு நிலையத்தில் அதன் தரசோதனையாளர் பிஸ்கட்டின் தரத்தை ஆராய்வதை படத்தில் காணலாம்.

# ஏமனில் வெடிமருந்து தொழிற்சாலைக்குள் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 70 பேர் பலி

(டுபாய்)
ஏமன் நாட்டின் தென்பகுதியில் ஜார் நகரில் ஒரு வெடிமருந்து தொழிற்சாலை உள்ளது. அங்கு கலாஷ்னிகோவ் துப்பாக்கிகளுக்கான குண்டுகள் தயாரிக்கப்பட்டு வந்தன. அந்தத் தொழிற்சாலைக்குள் 30 தீவிரவாதிகள் ஆயுதங்களுடன் புகுந்தனர். அவர்கள் நடத்திய தாக்குதலில் வெடிமருந்து கிடங்குகள் வெடித்ததில் தொழிலாளர்கள் 70 பேர் பலியானார்கள். 100 பேர் காயம் அடைந்தனர்.

இந்தத் தாக்குதலை அல்கொய்தா தீவிரவாதிகள் நடத்தி இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. ஏமன் நாட்டில் ஜனாதிபதி அலி அப்துல்லா சலே பதவி விலகக் கோரி மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இப் போராட்டத்தைத் தொடர்ந்து அதிகார மாற்றத்துக்கான பேச்சுவார்த்தை நடந்து வந்தது.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து பேச்சுவார்த்தை பாதிக்கப்பட்டது. ஆண்டு இறுதியில் தேர்தல் நடத்தப்பட இருக்கிறது. அதுவரை பதவி விலக மாட்டேன் என்று சலே அறிவித்து இருக்கிறார். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண முகாமை உதவியாளர் சேவையின் III ஆம் வகுப்பிற்கு 295 பேர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவையின் III ஆம் வகுப்பில் ஆட்சேர்ப்பு செய்வதற்காக தெரிவு செய்யப்பட்டோரின் பெயர்ப்பட்டியல் வடமாகாண பிரதிப் பிரதம செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் வைபவம் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் எதிர்வரும் 4 ஆம் திகதி முற்பகல் 10 மணி முதல் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் தெரிவு செய்யப்பட்ட நியமனதாரிகள் தங்களுக்குரிய நியமனக் கடிதத்தைப் பெற்று வழங்கப்பட்ட சேவை நிலையத்தில் கடமையைப்பொறுப்பேற்குமாறு பிரதிப் பிரதம செயலாளர் அறிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட நியமனதாரிகளின் பெயர் விபரம் வருமாறு;

**யாழ்ப்பாண மாவட்டம்**

திருமதி.மா.குமுதினி (ஊரெழு கிழக்கு), திருமதி.கா.கிறிஸ்ரி நிலானி (ஆனைக்கோட்டை), வே.இமயவல்லி (மிருசுவில்), அ.சுஜந்தன் (யாழ்ப்பாணம்), தி.விதுஷா (உடுவில் கிழக்கு), க.சிவரஞ்சினி(புலோலி தெற்கு), செ.மாலதி (இளவாலை), க.ரங்கநாதன் (மானிப்பாய்), சி.ஜனனி(அல்வாய் கிழக்கு), அ.தாரங்கன் (நல்லூர்), இ.ரஜீந்தினி (சண்டிலிப்பாய்), இ.செந்தில் (இளவாலை), சு.சுபாஸ்கரன் (கொக்குவில் கிழக்கு), கே.நித்தியா (புலோலி தெற்கு), மு.ஜதீஸ்வரன் (அச்செழு),ந.பாமினி (இமையாணன் கிழக்கு), இ.ஜனார்த்தன் (திருநெல்வேலி),வி.கிஷோ (மானிப்பாய்), க.அமர்நாத் (நீர்வேலி வடக்கு), ச.திவ்ஜன் (சுதுமலை வடக்கு),க.சிறீதரன் (யாழ்ப்பாணம்),சு.சுதாஹரன் (கொக்குவில் மேற்கு),திருமதி.சி.கஜந்தினி(மிருசுவில்),க.கிரிஜா (உடுவில் கிழக்கு), ந.நித்ஜா (கோண்டாவில்), பே.நிவேதிகா(யாழ்ப்பாணம்),திருமதி.தி.சுபோதினி (சுழிபுரம்),ம.சுதாகர்(பருத்தித்துறை), வி.துவாரகன்(அல்வாய் தெற்கு),இ.சியாமினி (அச்சுவேலி தெற்கு),செ.அகல்யா (கந்தர் மடம்), பொ.பிரதீபா(கைதடி), திருமதி. அ.கார்த்திகா(பொலிகண்டி கிழக்கு), ம.நர்மதா (கரணவாய்), து.தாரணி (சுழிபுரம்), வி.ஜெலானி (அல்வாய் கிழக்கு),கி.அர்ஜனா (வதிரி), சி.ஜெயதர்சன் (கரவெட்டி மேற்கு), சி.அனுசா (அல்வாய் வட மத்தி),திருமதி.ந.மதுராம்பிகை (யாழ்ப்பாணம்), இ.ஹம்சத்தனி (யாழ்ப்பாணம்),சோ.ரூபன்(சாவகச்சேரி), இ.றமணி (அல்வாய் மேற்கு),ம.ஜெயதமிதுன் (மல்லாகம்),மு.சொரூபினி(யாழ்ப்பாணம்), இ.ராதிகா(நீர்வேலி),இ.வஜீனா(ஊரெழு மேற்கு),சி.நதிபரன்(நல்லூர் வடக்கு), ம.புவனதீபன்(கொடிகாமம்),ப.தர்சிகா(மீசாலை மேற்கு), பா.பிரசாந்தி(பொலிகண்டி மேற்கு), மோ.தெய்வேந்திரா(பருத்தித்துறை), மா. செல்வதாஸ்(இமையாணன் கிழக்கு), சி.பிரசாத்(கரவெட்டி கிழக்கு), க.அனுஜன் (கோப்பாய் வடக்கு),வே. தவராசா (காரைநகர்),ந. கோபிகா(சாவகச்சேரி),க.வைகுந்தன் (புலோலி வடகிழக்கு),திருமதி. சா.தாரணி (புலோலி மேற்கு), ம.இந்துஜா(தாவடி தெற்கு), ந.செந்தூரன்(மானிப்பாய்),நே.மயூரி (உரும்பிராய் கிழக்கு),திருமதி.ச.சிவநயனி (அளவெட்டி வடக்கு),சி.றஜீவி(உடுவில்), சு. சுவாதிகா(வட்டுக்கோட்டை),தி.பிரணவன் (திருகோணமலை),வி.ரோகினி(கோப்பாய் வடக்கு),பி.கனிஸ்ரா மேரி (பருத்தித்துறை), பே.நிஷாந்தினி(அல்வாய் வட மத்தி), இ. நிரூபன்(புலோலி தெற்கு), சி.சுதர்ஜன் (கரவெட்டி கிழக்கு),ச.அனுசா (ஊர்காவற்றுறை), கி.பிரசாந்தன்(கோண்டாவில்),வே.சுதன்(வடமராட்சி கிழக்கு),ந.சஞ்ஜிற் (கொடிகாமம்), ப.சங்கநாதன் (பருத்தித்துறை),த.சியாமளா (பருத்தித்துறை),கோ.குகன்(கந்தர்மடம்),திருமதி. ஜெ.பௌத்திரா(மாதகல்),ந.கஜமுகன் (இளவாலை), செ.தேவகி(யாழ்ப்பாணம்), சி.வேலழகன்(சுதுமலை தெற்கு), சி.ஹாயத்திரி(நவாலி வடக்கு), வி.மிதுர்ஷியா (யாழ்ப்பாணம்), கு.நதிக்கா(சாவகச்சேரி வடக்கு), நா. சங்கமி(கரணவாய் கிழக்கு), திருமதி.பி. அனுராதா (பருத்தித்துறை), பா.துளர்சிகா(ஆவரங்கால்), கு.துளஷி (நல்லூர்), மா.குகரூபன் (வண்ணார் பண்ணை),ப.கணநாத் (கொக்குவில் கிழக்கு), சி.கிருத்திகா(இணுவில் தெற்கு),சி.லாவணியா (அளவெட்டி வடக்கு), தே.லுஷாந்தி (வட்டுக்கோட்டை), வ.ஜெனார்த்தனன் (குப்பிளான்), ஜெ.மிதுலா(மட்டுவில் தெற்கு), மா.சிவசோதி (கரவெட்டி மேற்கு),

இ.ரமேஸ் (ஊரணி), ச.நவகார்த்திகா (புலோலி வடக்கு), க.துஷிதா (நல்லூர்) க.புஸ்பவதனி (யாழ்ப்பாணம்), கு.குணஜா (கோப்பாய் வடக்கு), நா.சிவரூபன் (நீர்வேலி வடக்கு), ப.கலாரஞ்சினி (நீர்வேலி), ச.அபர்ணா (கொழும்பு 06) செ.கண்ணதாஸ் (சுதுமலை தெற்கு), அ.பிரதீபன் (சாவகச்சேரி வடக்கு), ம.சரிதாஸ் (மட்டுவில் தெற்கு), ஆ.ஷர்மினி (யாழ்ப்பாணம்), நா.சுபாசினி (யாழ்ப்பாணம்).

திருமதி.நி.ஜேன் ஜெசிக்கா (யாழ்ப்பாணம்), ப.சுரேகா (தொண்டைமானாறு), ப.யாழினி (வட்டுக்கோட்டை), திருமதி.பி.சிவகௌரி (யாழ்ப்பாணம்), இ.சிவகாமி (ஆவரங்கால்), இ.தர்ஷிகா (கோண்டாவில்), செ.ஜனனி (நல்லூர்), சி.ஷோபிகா (கோண்டாவில் கிழக்கு), து.மதுரா (புத்தூர் கிழக்கு) உ.சுகிர்தா (சுழிபுரம்), வெ.சிவாஜினி (வட்டுக்கோட்டை).

செ.சுபாஜினி (நெல்லியடி கிழக்கு), அ.நித்தியநர்மதன் (தெல்லிப்பழை), திருமதி.க.அபிராமி (யாழ்ப்பாணம்) கு.ராஜ்குமார் (அச்சுவேலி வடக்கு), ந.பர்மிளா (மல்லாகம்) இ.ஜெயசுதர்ஜினி (அச்சுவேலி), இ.கௌசிகா (அரியாலை), சி.இலாவண்யா (அளவெட்டி தெற்கு), ச.சுனந்தன் (ஊரெழு கிழக்கு), ம.மாலதி (கொடிகாமம்), ஆ.கிருபாகரன் (பொலிகண்டி கிழக்கு), அ.அகிந்தன் (அல்வாய் வடக்கு).

யோ.யோதிகா (சுண்டுக்குளி), திருமதி.க. ஜனார்த்தனி (கந்தர்மடம்), க.ஜெயபுஷ்பா (தெல்லிப்பழை கிழக்கு), கி.மதுராஜ் (சுன்னாகம் கிழக்கு), கு.நிரஞ்சன் (வண்ணார்பண்ணை), லோ.மயூரன் (கோப்பாய்), ம.மதுரா (தெல்லிப்பழை), ம.லூஜின் வேணுகா (யாழ்ப்பாணம்), ச.அரிகரன் (சுண்டுக்குளி), செ.வசீகரன் (அச்சுவேலி) ச.விதுஜா (உடுவில் தெற்கு) சொ.குணவர்சன் (இணுவில்) சோ.பிரியாநந்தினி (வவுனியா)

திருமதி.இ.பிரசாந்தி (வவுனியா), ஜெ.ராஜமல்லிகை (சாவகச்சேரி), ம.சுபாஜினி (சாவகச்சேரி), ஈ.கௌரிஷா (நெல்லியடி), திருமதி.பா. தாட்சாயினி (கரணவாய் தெற்கு), செ.பிரார்த்தனாதேவி (கரவெட்டி), பா.வித்தியானந் (கல்வியங்காடு), கெ.அனிதா (சுழிபுரம்),

கு.ரஜீதன் (கொக்குவில் கிழக்கு), ம.ராஜி (இருபாலை), ந.சசிரேகா (யாழ்ப்பாணம்), சா.ஜங்கரி (உரும்பிராய் கிழக்கு), சி.சிவதீபன் (புன்னாலைக்கட்டுவன் தெற்கு), சி.ஹம்ஷிதா (கோண்டாவில் மேற்கு), சி.ராஜீவ் (நீர்வேலி), த.துஷி (ஆவரங்கால் மேற்கு), து.முகுந்தன் (உரும்பிராய்), உ.பிரிஜந்தினி (தொல்புரம்), தி.திவாகரன், (பருத்தித்துறை), கி.யோகேந்திரன் (இமையாணன் வடக்கு), மு.மேகலா (நெல்லியடி கிழக்கு), இ.கமலதாசன் (கரவெட்டி மேற்கு), சி.கவிதாம்பிகை (கரணவாய் மேற்கு).

*(நாளை தொடரும்)*


# மரண அறிவித்தல்



## செல்லையா இராமேஸ்வரன்

**(உரிமையாளர்: கௌரி அழகுமாடம்)**

மட்டக்களப்பு வலையிறவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், நாவலர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா இராமேஸ்வரன் அவர்கள் (உரிமையாளர், கௌரி அழகுமாடம், யாழ்ப்பாணம்) 28.03.2011 நேற்று முன்தினம் திங்கட்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் அமரர் செல்லையா மற்றும் பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், நிதர்சனா (யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி), திருமகள் (யா/இந்து ஆரம்ப பாடசாலை மாணவி), பவித்திரன் (யா/மத்திய கல்லூரி மாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 30.03.2011 இன்று காலை 10.00 மணிவரை 317, நாவலர் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, ஈமைக்கிரியைகள் 31.03.2011 நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் 142/1, கிராமோதய வீதி, பாலமீன்மடு முகத்துவாரம், மட்டக்களப்பிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டக்களப்பு மட்டக்குளி பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(4248)

கமல் பன்சி
ஸ்ரீதகன் பன்சி
கொழும்பு சென்றர் (CC)

தகவல்:-
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் நோக்கங்களை விட சிறுமையான நோக்கங்களை உன் எதிரிகளுக்கு கற்பிக்காமல் உன் வாழ்க்கையை நடத்து.
*- ஜேம்ஸ் பெர்ரி*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# சகல பாடசாலைகளிலும் வாரத்தில் மூன்று நாட்கள் கட்டாய உடற்பயிற்சி

## கல்வியமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

சகல பாடசாலைகளும் எதிர்வரும் மே மாதத்திலிருந்து தேகப் பயிற்சியை முறையாக நடைமுறைப்படுத்தும் திட்டத்தை ஆரம்பிக்க கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

அதனை மூன்று மாதத்திற்கொரு முறை மதிப்பீடு செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஆரம்ப வகுப்புகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற உடற்பயிற்சி திட்டத்தை இடைநிலை வகுப்புகளிலும் மேற்கொண்டு சகல மாணவர்களும் ஏதாவதொரு உடற்பயிற்சியில் பங்குபற்றக் கூடிய திட்டத்தை ஒழுங்கு செய்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் சகல பாடசாலைகளிலும் வாரத்தில் மூன்று நாட்கள் உடற்பயிற்சியைக் கட்டாயமாகச் செய்வதற்கு காலையில் 15 நிமிடங்கள் ஒதுக்கி சகல பாடசாலைகளிலும் செயற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# நல்லிணக்க ஆணைக்குழு முன் கூட்டமைப்பு சாட்சியமளிக்கலாமா?

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சாட்சியங்களைப் பதிவு செய்து வருகிறது.

வன்னிப் பெருநிலப்பரப்பில் இடம்பெற்ற யுத்தத்தின்போது, நடந்த போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என மனித உரிமை அமைப்புகள் விடுத்த கோரிக்கைகளை அடுத்து ஐ.நா.சபை இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்களை விசாரணை செய்ய முடிவு செய்தது.

ஐ.நா.சபையின் இந்த முடிபை அடுத்து இலங்கை அரசு அவசரஅவசரமாக நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்து விசாரணைகளை மேற்கொள்கின்றது.

விசாரணை போர்க்குற்றம் தொடர்பாக மட்டும் இடம்பெறவில்லை.மாறாக தேவையற்ற விடயங்களைக் கூட நல்லிணக்க ஆணைக்குழு விசாரித்து வருகின்றது.

என்ன செய்வது இழப்புகளின் தாக்கம் யாருக்கேனும் அந்தக் கொடும் துயரை தெரிவிப்பதன் மூலமாக காணாமல் போனவர்களை மீட்டு எடுக்கலாம் - முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிக்கலாம் என்ற நம்பிக்கையில் நல்லிணக்க ஆணைக்குழு முன் அழுது புலம்பி தங்கள் பெருந்துயரை மக்கள் சொல்கின்றனர்.

இதில் ஆணைக்குழுவின் இயலாமை காரணமாக எல்லோருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படவும் இல்லை.

இலங்கையில் ஆணைக்குழு என்றாலே இப்படித்தானே!

அழைப்பார்கள். காத்திருக்க வைப்பார்கள். காலதாமதமாகி வருவார்கள். ஒரு சிலருடன் அவசரஅவசரமாக கதைப்பார்கள். கதையின் இடையிடையேதமக்குள் ஏதோ உரையாடுவார்கள்.

பின்னர் உங்கள் பிரச்சினை எல்லாம் எங்களுக்கு விளக்கமாக இருக்கிறது. நீங்கள் உங்கள் பிரச்சினையை எழுத்து மூலமாக தாருங்கள் என்று அறிவிப்பார்கள்.

இந்த அறிவித்தலை சிரமேற் கொண்டு ஐந்நூறு ஆயிரம் செலவிட்டு ரைப்பிங் செய்து கொடுப்பார்கள். அப்பட்டோடு எல்லாம் முடிந்துவிடும்.

இலங்கையின் ஆணைக்குழுக்களுக்கு இருக்கக்கூடிய இந்த கலாசாரம் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கும் இல்லாமலா போய் விடும்? ஆக, காவேரியும் சிங்காரியும் ஒன்றென்ற நிலையில் எல்லாம் அப்படித்தான்.

பரவாயில்லை.பொது மக்களின் சாட்சியம், நல்லிணக்க ஆணைக்குழுவின் நம்பகத்தன்மையை -அங்கீகரிப்பை ஒரு போதும் உறுதி செய்யாது.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சியம் அளித்தால், அது ஐ.நாவின் முயற்சியை முறியடிக்கும்.

எனவே சாட்சியமளிப்பு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிதானமாக ஆராய்வது எல்லாம் இழந்த தமிழ் மக்களுக்கு உதவுவதாக இருக்கும்.

# இலங்கை சுற்றுலா பயணிகளின் விஸா இறுக்கம் தளர்த்தப்படும்

## தென் கொரியா முடிபெடுத்தது

(சியோல்)

தென்கொரிய நீதியமைச்சு தெற்காசிய நாட்டவர்களுக்கான விஸா ஒழுங்கு விதிகளை தளர்த்தவுள்ளதாக அதிகாரிகளை மேற்கோள்காட்டி கொரியன் ஹெரால்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அமைச்சின் தகவலின்படி, இத்திட்டத்தின் மூலம் நன்மையடையவுள்ள நாடுகளில் இந்தியா, பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ், வியட்நாம், பாகிஸ்தான், நேபாளம், லாவோஸ், இந்தோனேஷியா, இலங்கை, கம்போடியா, மியன்மார் ஆகியனவும் அடங்கும்.

இதுவரை சட்டவிரோத குடியேற்றம் அதிகரிக்கலாம் என்ற அச்சம் காரணமாக இந்நாடுகளுக்கான விஸா ஒழுங்கு விதி சலுகைகள் இந்நாடுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

பெரும் எண்ணிக்கையான தெற்காசிய சுற்றுலா பயணிகளை ஈர்ப்பதற்காக புதிய விஸா ஒழுங்கு விதிகளை எதிர்பார்க்கிறோம் என அமைச்சின் அதிகாரியொருவர் கூறியுள்ளார். கடந்த சில வருடங்களில் தெற்காசிய சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், தெற்காசியா உலகின் மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கை கொண்டுள்ளது. அது ஒரு சுற்றுலா மூலமாகும் எனவும் அவர் கூறினார்.

இத்திட்டத்தின் மூலம் விஸா பெறுவதற்கு நிதிநிலைமை, தொழில், அந்தஸ்து என்பவற்றை நிரூபிப்பதற்காக குறைந்த ஆவணங்களே கோரப்படும் என அவ்வதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



இந்த நுண்ணுடலின் ஒரு பகுதி மனம்,ஒரு பகுதி புத்தி, ஒரு பகுதி நான் உணர்வு. ஆனாலும் இவற்றில் எந்த ஒன்றும் 'அறிபவன்' ஆக முடியாது. இவற்றுள் எதுவும் பார்ப்பவனாக, சாட்சியாக, யாருக்காக அறிவுச் செயல் நடக்கிறதோ அவனாக, நடக்கும் செயலைப் பார்ப்பவனாக ஆக முடியாது. மனத்திலும் புத்தியிலும் நான்-உணர்விலும் ஏற்படும் இயக்கங்கள் எல்லாம் இவை அல்லாத வேறு யாருக்காகவோதான் இருக்க வேண்டும். இவை நுட்பமான சடப்பொருள் அணுக்களால் ஆனவை. ஆதலால் தன்னொளி உடையவையாக இருக்க முடியாது. இவற்றின் ஒளி இவற்றிற்குச் சொந்தமானதாக இருக்க முடியாது. எடுத்துக் காட்டாக இந்த மேசையை எந்த சடப்பொருளும் உருவாக்கியிருக்க முடியாது. எனவே,இவற்றிற்கெல்லாம் பின்னால் யாரோ ஒருவர் இருக்க வேண்டும், இவரே எல்லா தோற்றங்களுக்கும் உண்மைக் காரணமானவர். உண்மையாகவே எல்லாவற்றையும் அனுபவிப்பவர். இவரையே வடமொழியில் ஆத்மன் என்கிறார்கள். இவரே மனிதனின் உண்மை ஆன்மா.

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## கொலையைச் சட்டம்போட்டு தடுப்பதை விட, கோபத்தை அகற்றுவோம் (மத் 5:17-19)

திருச்சட்டம் என்பது யூத மக்களுக்கு மோசே வழியாக வழங்கப்பட்டது. இறைவாக்கு என்பது கடவுளின் திட்டத்தை மக்களுக்கு கடவுளின் பெயரால் எடுத்துரைத்த இறைவாக்கினரின் போதனையைக் குறிக்கும். யூத மக்களின் சமய நூலில் காணப்படுகின்ற போதனைகள் முழுவதையும் "திருச்சட்டம்" இறைவாக்கு என்னும் சொல் வழக்கினுள் உள்ளடங்கும். இயேசு யூத சமயப் போதனைகளைத் தாம் அழிக்க வரவில்லை என்றும், அவற்றை "நிறைவேற்றவே" வந்ததாகவும் கூறுகிறார்.

இயேசு வழங்கியபுதியநெறிஅன்புக் கட்டளை. பழைய ஏற்பாட்டில் காணப்படுகின்ற இக்கட்டளைக்கு இயேசு புதிய அர்த்தம் அளித்தார். கடவுளின் அன்பை மக்களுக்கு எடுத்துக்காட்டி அதை அவர்களோடு பகிர்வதே தம் பணி என இயேசு போதித்தார். சரியானவனுக்கு சாவுமணியடிக்கும் போது மௌனம் சாதித்து சமுதாயம் இன்று சரித்திரமாகிறது.நீதி தேவதை கண்ணை கட்டிக்கொள்கிறாள். நீதி வழங்க வேண்டியவர்கள் நின்ற இடம் தெரியாது தொலைந்து விடுகின்றார்கள். சட்டம் தன் பாதையில் சறுக்காமல் செல்லும் என்று நறுக்கென சொல்லி நாசுக்காக நழுவிவிடுவர். சட்டம் ஒரு இருட்டறை என்று இலக்கணம் பேசி தனக்கு மட்டும் விடியல் தேடிக்கொள்பவர்கள் இன்று பலர்.

இப்படிப்பட்ட மனிதர்களையெல்லாம் கடைந்து வடித்தெடுத்து உருக்கொடுத்தவைதான் இயேசுவின் போதனைகள். அவை சட்டங்களைக் கடந்தவை. வெளிவேடங்களை விட உள்ளத்து உணர்வுகளை வழிப்படுத்துபவை. மனிதனின் உடலை அல்ல உள்ளத்தை உருவாக்குபவை. ஆகவேதான், கொலையைச் சட்டம்போட்டு குறைப்பதைவிட, கோபத்தைக் அகற்றச் சொல்லுகிறார். (மத் 5:22) சட்டம் போட்டு விபச்சாரத்தை தடுப்பதை விட, மனதைக் கட்டுப்படுத்தி மாண்புடன் வாழச் சொல்லுகிறார். (மத் 5:28) மதத்தைக் காப்பாற்ற மனிதனைக் கொல்லும்சட்டத்தை மறுபரிசீலனை செய்யும் இயேசுவின்வீரமனப்பாங்கு, அவனுள் இருக்கும் தெய்வீகத்தை நிறைவு

ம. பிரான்சிஸ்,
கத்தோலிக்க சுதந்திர,
பத்திரிகையாளர்.

பெறச் செய்வதற்காகவே அமைந்துள்ளது.

இயேசுவின் இப்புனித பணி இன்று எம்மத்தியில் தொடர்ந்தால் மட்டுமே சிறியவர்கள், சார்ந்து வாழ்பவர்கள், சக்தியற்றவர்கள், சரியானவர்கள் பாதுகாக்கப்படுவர்,சட்டத்தால் பயன் பெறுவர். அப்போது சட்டம் நிறைவேறும். சட்டத்தால் நிறைவு பெறுவர். இயேசுவோடு குரல் கொடுப்போம். சரித்திரம் படைப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் திருவிழா 2011

பெப்ரவரி 19 - ஏப்ரல் 02

ICC Cricket World Cup 2011

## துளித்துளியாய்...

**வருகிறார் அக்தர்**

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான காலிறுதி ஆட்டத்தில் நீக்கப்பட்ட அக்தர் இந்தியாவுக்கு எதிராக இன்று களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்திய அணிக்கு எதிரான ஆட்டங்களில் அவர் எப்போதுமே ஓரளவு சிறப்பாக செயல்பட்டு வந்துள்ளார். இளம் வீரரான வகாப் ரியாஸ் பந்துவீச்சு மிரட்டும்படி இல்லாததால் அக்தருக்கு இன்று வாய்ப்பு வழங்கப்படலாம்.

**முனாப் அல்லது நெகரா**

இன்றைய அரையிறுதி ஆட்டத்தில் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சில் ஒரு சில மாற்றங்கள் இருக்கும் என தெரிகிறது. முனாப் பட்டேலுக்கு பதிலாக நெகரா அல்லது ஸ்ரீசாந்த் சேர்க்கப்படலாம் என தெரிகிறது. பாகிஸ்தான் அணியில் சுழல்பந்து வீச்சாளர்கள் அதிகம் என்பதால் யூசுப்பிற்கு வாய்ப்பு கிடைக்கக் கூடும். அவர் ஆடும் பட்சத்தில் ரெய்னா நீக்கப்படுவார்.

**5 மணிநேரம் காத்திருந்த அப்ரிடி சகோதரர்**

கிரிக்கெட்தான் என்றாலும் எல்லையைத் தாண்டி வருவது யாருக்கும் எளிதாக இல்லை. பாகிஸ்தான் அணித்தலைவர் அப்ரிடி சகோதரர் என்றாலும் அப்படித்தான். அட்டாரி எல்லை வழியாக மொகாலி வர முயன்ற அப்ரிடி சகோதரர் முஷ்டாக் பாதுகாப்பு அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டார்.அவரிடம் ஆட்டத்தைப் பார்க்க ரிக்கெட் இல்லை. 5 மணி நேரம் காத்திருந்தார். அதன் பின்னர் பஞ்ஜாப் கிரிக்கெட் சங்க நிர்வாகிகள் விரைந்து சென்று ரிக்கெட் கொடுத்து அவரை இந்திய எல்லைக்குள் அழைத்துவந்தனர்.

## அவுஸ்திரேலிய அணித்தலைவர் பதவியைத் துறந்தார் பொன்டிங்

(சிட்னி)

சர்வதேச ஒருநாள் போட்டி மற்றும் டெஸ்ட் போட்டி ஆகியவற்றில் அவுஸ்திரேலிய அணித் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக ரிக்கி பொன்டிங் அறிவித்துள்ளார்.

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் அவுஸ்திரேலிய அணி காலிறுதிச் சுற்றுடன் வெளியேறியது.

இந்த தோல்வியால் அணித் தலைவர் பொன்டிங்கிற்கு நெருக்கடி ஏற்பட்டது. அணித்தலைவர் பதவியிலிருந்து பொன்டிங்கை நீக்க வேண்டுமென அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர்கள் வலியுறுத்தினர்.

இதனால் இன்று நடைபெறவுள்ள அவுஸ்திரேலிய கிரிக்கெட்டின் தேர்வுக்குழுக் கூட்டத்தில் இது குறித்து முடிபு செய்யப்படவிருந்தது.

இந்நிலையில் அவுஸ்திரேலிய அணித்தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக நேற்று ரிக்கி பொன்டிங் அறிவித்தார்.

இது தொடர்பாக சிட்னியில் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட பொன்டிங்,

டெஸ்ட் மற்றும் சர்வதேச ஒருநாள் போட்டி அணித்தலைவர் பதவியிலிருந்து விலகுவது என்று முடிபு செய்துள்ளேன். அணித் தலைவர் பதவியிலிருந்து விலகுவதற்கு இது தான் சரியான நேரம். இன்னொருவருக்கு அணித்தலைவர் பதவி வாய்ப்பு வழங்க வேண்டும் என்று கருதி



இந்த முடிபை எடுத்தேன்.

அணித்தலைவர் பதவியிலிருந்து விலகினாலும் நான் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் தொடர்ந்து விளையாடுவேன். இவ்வாறு ரிக்கி பொன்டிங் தெரிவித்தார்.

இங்கிலாந்து அணிக்கு எதிரான ஆஷஸ் டெஸ்ட் தொடரை இழந்த போது அணித்தலைவர் பதவியில் பொன்டிங்கிற்கு நெருக்கடி ஏற்பட்டது.

உலகக் கிண்ண காலிறுதியில் தோல்வியடைந்ததால் மேலும் நெருக்கடி ஏற்பட்டது. இதன் காரணமாக அவர் பதவி விலகினார். பொன்டிங்கிற்குப் பதிலாக அவுஸ்திரேலிய அணித் தலைவராக மைக்கெல் கிளார்க் நியமிக்கப்படுகிறார்.

134ஆண்டு கால டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ரிக்கி பொன்டிங் சிறந்த அணித்தலைவராவார்.

2004ஆம் ஆண்டு டெஸ்ட் அணித்தலைவராக பொன்டிங் பொறுப்பேற்றார். அவரது தலைமையில் 77 டெஸ்டில் 48 போட்டிகளில் அவுஸ்திரேலிய அணிக்கு வெற்றி கிடைத்தது. 16 போட்டிகளில் தோல்வி கண்டது. 13 டெஸ்ட் போட்டிகள் சமனிலையானது.

2002ஆம் ஆண்டு ஒருநாள் போட்டி அணித்தலைவராகப் பொறுப்பேற்றார். 227 போட்டிகளில் 163 ஆட்டங்களில் வெற்றி கிடைத்தது.

5 போட்டிகளில் தோல்வி ஏற்பட்டது. 2 ஆட்டம் சமனிலையில் முடிபடைந்ததுடன் 12 போட்டிகளிற்கு முடிபில்லை.

## ஒருநாள் கிரிக்கெட் அரங்கிலிருந்து ஆஸி.வீரர் ஷோன் தைட் ஓய்வு



சர்வதேச ஒருநாள் போட்டியில் இருந்து அவுஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளர் ஷோன் தைட் ஓய்வை அறிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஷோன் தைட் (28 வயது) கடந்த 2005 இல் டெஸ்ட் போட்டியில் களமிறங்கிய இவர் 2007இல் முதன் முதலில் சர்வதேச ஒருநாள் மற்றும் இருபது-20 அரங்கில் காலடி வைத்தார். டெஸ்ட் போட்டியில் இருந்து சமீபத்தில் ஓய்வை அறிவித்த இவர் தற்போது ஒருநாள் போட்டிகளில் இருந்தும் ஓய்வை அறிவித்துள்ளார்.

இதுவரை இவர் 3 டெஸ்ட் (5 விக்கெட்), 35 ஒருநாள் (62 விக்கெட்), 19 சர்வதேச இருபது -20 போட்டிகளில் பங்கேற்றுள்ளார். இவர் இருபது -20 போட்டிகளில் தொடர்ந்து விளையாட இருப்பதாக தெரிவித்துள்ளார்.

தற்போது நடக்கும் உலகக் கிண்ண தொடரில், அவுஸ்திரேலிய அணி காலிறுதியோடு வெளியேறியது. இத் தொடரில் இவர் பெரிய அளவில் சாதிக்கவில்லை.

இது குறித்து தைட் கூறியதாவது,

ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வை அறிவித்தது எளிதான முடிபல்ல. ஆனால் எனக்கான நேரம் வந்துவிட்டது. தொடர்ந்து இருபது -20 போட்டிகளில் அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு பாடுபடுவேன். கடந்த 2007இல் உலகக் கிண்ணம் வென்ற அவுஸ்திரேலிய அணியில் இடம்பெற்றிருந்ததை எனது வாழ்நாளில் என்றும் மறக்க முடியாது. போட்டியில் சாதிக்க எனக்கு ஒத்துழைப்பு தந்த அவுஸ்திரேலிய கிரிக்கெட் (சி.ஏ) சக மற்றும் எதிரணி வீரர்கள், ரசிகர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு தைட் கூறினார்.

## மொகாலியில் பல அடுக்குப் பாதுகாப்பு தயார் நிலையில் விமான எதிர்ப்பு பீரங்கிகள்

(மொகாலி)

இந்தியா, பாகிஸ்தான் நாடுகளின் பிரதமர்கள் வருகையால், மொகாலியில் பல அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மைதானத்தின் அனுமதியில்லாமல் பறக்கும் விமானங்களை சுட்டு வீழ்த்த, தயார் நிலையில் பீரங்கிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இந்திய -பாகிஸ்தான் அணிகள் மோதும் உலகக்கிண்ண அரையிறுதிப் போட்டியை காண இந்திய பிரதமர் மன்மோகன் சிங், பாகிஸ்தான் பிரதமர் கிலானி ஆகியோர் மொகாலி வருகின்றனர். இதனால், பாதுகாப்பு பல மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாப்பின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் 2, 200 பொலிஸார் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். தவிர, சிறப்பு ஆயுதங்களை கையாள, இஸ்ரேலில் பயிற்சி பெற்ற அணி, கடந்த 2008இல் மும்பை தாக்குதலில் மீட்புப் பணியில் ஈடுபட்ட கமாண்டோ படையினர், தேசிய பாதுகாப்பு படை என பல்வேறு தரப்பினரும் பாதுகாப்பில் பங்கேற்றுள்ளனர்.

ஏ.கே-47, எம்.பி-9 மெசின் கன், சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியா, அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட பிஸ்டல்கள் மற்றும் நவீன ஆயுதங்களை கையாளும் பிரிவினரும்மைதானத்திலும், அதைச் சுற்றிலும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மைதானத்தின் மீது எவ்வித விமானங்களும் பறக்க தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதை மீறும் விமானங்களை சுட்டு வீழ்த்த, விமான எதிர்ப்பு பீரங்கிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

**முடிபான முடிபு**

பாகிஸ்தானுக்கு எதிரான உலகக் கிண்ண அரையிறுதியில், இந்தியா வெற்றி பெறும் என, அதிகம் பேர் பணம் கட்டியுள்ளனர். இதனால் இந்தியாவை தோல்வியடையச் செய்ய ஏற்பாடுகள் நடப்பதாக தெரிகிறது. ஏனெனில், இந்தியா தோற்கும் பட்சத்தில் சூதாட்டக்காரர்களுக்கு 5 ஆயிரம் கோடி ரூபாய் வரை பணம் கிடைக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இந்த செய்தியை வருமான வரித்துறை அதிகாரி குப்தா, என்பவர் உறுதி செய்துள்ளார்.



கொழும்பில் நேற்று நடைபெற்ற இலங்கை- நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான அரையிறுதிப் போட்டியில் தமது நாட்டு வீரர்களுக்கு உற்சாகமளிக்கும் ரசிகர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதித்தது சங்கக்கார படை

# இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது இலங்கை

# அரையிறுதியுடன் வெளியேறியது நியூசிலாந்து



சொந்த மண்ணில் விடைபெற்ற முரளிதரன்

(கொழும்பு)

உலகக்கிண்ண தொடரின் இறுதிப் போட்டிக்கு இலங்கை அணி மிகச் சுலபமாக முன்னேறியது.

கொழும்பில் நேற்று நடந்த அரையிறுதியில் சகல துறையிலும் ஜொலித்த இலங்கை அணி 5 விக்கெட்டுக்களால் நியூசிலாந்து அணியை வீழ்த்தியது.

பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெற்று வருகிறது.

இதில் கொழும்பு ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் இலங்கை-நியூசிலாந்து அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணித்தலைவர் டானியல் விக்டோரி முதலில் துடுப்பெடுத்தாடத்தீர் மானித்தார்.

இதனடிப்படையில் களமிறங்கிய நியூசிலாந்து அணிக்கு குப்தில்-பிரண்டன் மக்குலம் ஜோடி நிதானமான ஆரம்பத்தை வழங்கினர்.

இந்த ஜோடி 7.1 ஓவர்களில் 32 ஓட்டங்களைச் சேர்த்த போது பிரண்டன் மக்குலம் 13 ஓட்டங்களுடன் ஹேரத்தின் சுழலில் ஆட்டமிழந்தார்.

அடுத்து குப்திலுடன் இணைந்த ரைடர் பொறுப்பாக ஆடினார். எனினும் ஜெசி ரைடர் 19 ஓட்டங்களை எடுத்த போது முரளிதரன் சுழலில் ஆட்டமிழந்தார்.

அடுத்து ரெய்லர் களமிறங்க மறுமுனையில் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் குப்தில் 65 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 39 ஓட்டங்களை எடுத்து மலிங்கவின் வேகத்தில் ஆட்டமிழக்க நியூசிலாந்து அணி 21.3 ஓவர்களில் 84 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்களையிழந்து தடுமாறியது.

எனினும் 4ஆவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த ரெய்லர்-ஸ்ரைரிஸ் இணைந்து நம்பிக்கையளித்தனர்.

இந்த ஜோடி இலங்கை அணியின் சுழல் கூட்டணியின் அபார பந்து வீச்சிற்கு ஒன்று, இரண்டாக ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ரோஸ் ரெய்லர் 55 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட்பட) 36 ஓட்டங்களை எடுத்து மெண்டிஸின் சுழலில் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய வில்லியம்ஸன் அதிரடியாக ஆடி 16 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 22 ஓட்டங்களுடன் மலிங்கவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த நாதன் மக்குலம் அதிரடியாக ஆட முற்பட்டு 9 பந்துகளில் (ஒரு சிக்ஸர் உட்பட) 09 ஓட்டங்களை எடுத்து மலிங்கவின் வேகத்தில் வெளியேறினார்.

அடுத்து ஜேக்கப் ஓரம் களமிறங்க மறு முனையில் அரைச்சதம் கடந்த ஸ்கொட் ஸ்ரைரிஸ் 77 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 57 ஓட்டங்களுக்கு முரளிதரனின் சுழலில் ஆட்டமிழந்தார்.

பின்வரிசையில் ஜேக்கப் ஓரம் 07 ஓட்டங்களுடன் டில்சானிடமும், சௌத்தி, மைக்கே ஆகியோர் பூச்சியத்துடன் மெண்டிஸிடமும், சிக்க நியூசிலாந்து அணி 48.5 ஓவர்களில் 217 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

பந்துவீச்சில் லசித் மலிங்க, அஜந்த மெண்டிஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் முரளிதரன் 2 விக்கெட்டுக்களையும் ஹேரத், டில்சான் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

### அதிரடி ஆரம்பம்

பதிலுக்கு 50 ஓவர்களில் 218 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு தரங்க-டில்சான் ஜோடி அதிரடி ஆரம்பம் வழங்கினர்.



இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 7.2 ஓவர்களில் 40 ஓட்டங்களை பகிர்ந்த போது உபுல் தரங்க 31 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 30 ஓட்டங்களை எடுத்து சௌத்தியின் பந்தில் ஆட்டமிழந்தார்.

### டில்சான் அசத்தல்

அடுத்து களமிறங்கிய அணித் தலைவர் சங்கக்கார ஒத்துழைப்பு வழங்க, தனது அசத்தல் ஆட்டத்தைத் தொடர்ந்தார் டில்சான்.

இந்த ஜோடியின் பொறுப்பான ஆட்டம் கைகொடுக்க இலங்கை அணி 23.1 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது. இதில் திலகரட்ண டில்சான் 71 பந்துகளில் அரைச்சதம் கடந்தார்.

இந்த ஜோடி இரண்டாவது விக்கெட்டுக்காக 120 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்த போது திலகரட்ண டில்சான் 93 பந்துகளில் (10 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 73 ஓட்டங்களை எடுத்து சௌத்தியின் பந்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த மஹேல ஜெயவர்த்தனா ஒரு ஓட்டத்துடன் விக்டோரியின் சுழலில் வெளியேறினார்.

அடுத்து சமரவீர களமிறங்க மறுமுனையில் அணித்தலைவர் குமார் சங்கக்கார 72 பந்துகளில் அரைச்சதத்தை பூர்த்தி செய்தார்.

எனினும் குமார் சங்கக்கார 79 பந்துகளில் (7 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்கள் உட்பட) 54 ஓட்டங்களை எடுத்து மைக்கேளின் பந்து வீச்சில் ஆட்டமிழக்க இலங்கை அணி 36.2 ஓவர்களில் 169 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக்களையிழந்தது.

தொடர்ந்து சமரவீரவுடன் இணைந்த சாமர சில்வா நிதானமாக ஆடி விக்கெட் சரிவைத் தடுத்தார். ரைடர் வீசிய ஓவரில் அடுத்தடுத்து 2 பவுண்டரிகள் அடித்து சாமர சில்வா பதற்றத்தை போக்கினார்.

எனினும் சாமர சில்வா 25 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 13 ஓட்டங்களை எடுத்து சௌத்தியின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த மத்யூஸ் நிதானமாக ஆடினார். சௌத்தியின் ஓவரில் ஒரு சிக்ஸர், பவுண்டரி அடித்த மத்யூஸ் நம்பிக்கை அளித்தார்.

மறுமுனையில் மைக்கேயின் பந்தை சமரவீர பவுண்டரிக்கு விரட்ட, இலங்கை அணி 47.5 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 220 ஓட்டங்களைக் குவித்து 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இவ் வெற்றியின் மூலம் இலங்கை அணி உலக்கிண்ண தொடரின் இறுதிப்போட்டிக்கு தொடர்ச்சியாக இரண்டாவது முறை (2007,2011) முன்னேறியது.

இதில் திலான் சமரவீர 23 ஓட்டங்களையும் மத்யூஸ் 14 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் சௌத்தி 3 விக்கெட்டுக்களையும் விக்டோரி, மைக்கே ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இப் போட்டியில் இலங்கை அணித் தலைவர் குமார் சங்கக்கார ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

### தொடரும் சோகம்

நியூசிலாந்து அணியின் அரையிறுதிச் சோகம் தொடர்கிறது. நேற்று இலங்கை அணிக்கு எதிராக தோல்வியடைந்ததன் மூலம் உலகக் கிண்ண அரங்கில் 6ஆவது முறை (1975, 79, 92, 99, 2007, 2011) அரையிறுதியில் தோல்வியடைந்து வெளியேறியது.

### மூன்றாவது முறை

உலகக்கிண்ண அரங்கில் இலங்கை அணி மூன்றாவது முறையாக (1996, 2007, 2011) இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இதில் கடந்த 1996ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றிய இலங்கை அணி கடந்த 2007ஆம் ஆண்டில் துரதிர்ஷ்ட வசமாக அவுஸ்திரேலிய அணியிடம் தோல்வியடைந்து இரண்டாவது இடம் பிடித்தது.

### கடைசிப்போட்டி

இலங்கை அணியின் சுழல் மன்னன் முத்தையா முரளிதரன் உலகக்கிண்ண தொடருக்குப் பின் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறவுள்ளார்.

நேற்று கொழும்பில் நியூசிலாந்துக்குஎதிரான அரையிறுதியில்விளையாடிய முரளிதரன் சொந்த மண்ணில் தனது கடைசிப்போட்டியில் பங்கேற்றார்.

இப் போட்டியில் தனது 10ஆவது ஓவரின் கடைசிப் பந்தில் நியூசிலாந்து வீரர் ஸ்ரைரிஸை ஆட்டமிழப்புச் செய்தார். இதேபோல் காலியில் கடந்த ஆண்டு இந்திய அணிக்கு எதிராக தனது கடைசி டெஸ்ட்போட்டியில் விளையாடிய முரளிதரன் கடைசிப்பந்தில் பிரக்ஜன் ஓஜாவை வெளியேற்றினார்.

எதிர்வரும் 2ஆம் திகதி மும்பையில் நடைபெறவுள்ள இறுதிப் போட்டி முரளிதரனின் கடைசி ஒருநாள் போட்டியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர சபை, யாழ்ப்பாணம்



## யாழ்.பல்கலைக்கழகத் துணை...

துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கனின் பதவிக்காலம் கடந்த டிசம்பர் மாதம் முடிபடைந்த நிலையில் புதிய துணைவேந்தருக்கான மூவரின் பெயர்களை தேர்தல் மூலம் யாழ்.பல்கலைக்கழகப் பேரவை சிபார்சு செய்தது. இதில் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம், பேராசிரியர் என். சண்முகலிங்கன், பேராசிரியர் ரட்ணஜீவன் கூல் ஆகியோரின் பெயர்களே பேரவையினால் ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்யப்பட்டன. இந்நிலையில் யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார். இந்நியமனம் நேற்று முன்தினம் 28ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் வழங்கியுள்ளதாக பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு நேற்று அறிவித்துள்ளது.

துணைவேந்தர் நியமனம் பெற்றுள்ள பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் ஆரம்பக் கல்வியை சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும் பின் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் உயர்தரக் கல்வியைப்பயின்றார். தமிழ்நாடு அபினாசி லிங்கம் மனையியல் கல்லூரியில் உயிர்இரசாயனவியலைப் பயின்று சென்னைப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்றார். தொடர்ந்து கொழும்புப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக கடமையாற்றிய பேராசிரியர் பாலசுப்பிரமணியத்தின் வழிகாட்டலில் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு முதுவிஞ்ஞானமாணிப் பட்டம் பெற்றார்.

பின்னர் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றியதுடன் யாழ்.பல்கலைக்கழகத்துடனும் சுவீடன் லூண்ட் பல்கலைக்கழகத்துடனும் இணைந்த ஆய்வினை மேற்கொண்டு கலாநிதிப் பட்டம் பெற்றார். தொடர்ந்து 1996ஆம் ஆண்டு இணைப் பேராசிரியராக இருந்து 1998ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழத்தினால் பேராசிரியர் பட்டம் வழங்கப்பட்டது. பின் 2000ஆம் ஆண்டுமுதல் 03 வருடங்கள் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதியாக இருந்த பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் இன்றுவரை மருத்துவ பீடத்தின் சிரேஷ்ட பேராசிரிராகவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)

## நிபுணர்குழு...

செயலாளரிடம் இந்த அறிக்கையைக்கையளித்த பின்னர் தான் அது பற்றி என்ன செய்யலாம் என்று ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் தீர்மானம் எடுப்பார் என்றும் மார்ட்டின் நெஸ்ர்க்கி தெரிவித்தார்.

ஐ.நா. நிபுணர்கள் குழுவின் இறுதி அறிக்கை தயாரித்து முடிக்கப்பட்டுவிட்டதாகவும் அது இந்தமாத இறுதிக்குள் கையளிக்கப்படும் என்றும் முன்னதாக ஐ.நா. தகவல் வெளியிட்டிருந்தது.

இலங்கை அரசின் பிரதிநிதிகள் கடந்த மாதம் ஐ.நா. பொதுச் செயலாளர் மற்றும் ஐ.நா. நிபுணர்கள் குழுவை சந்தித்துப் பேசிய பின்னரே இந்த அறிக்கை கையளிக்கப்படுவது இழுபறியாகியுள்ளது. (ந-5)


April Intake 22. 04. 2011

Study in UK

* IELTS அவசியமற்ற UK பயணம்.
* Sponsor வசதிகள் மிகக் குறைந்த விலையில்- 130,000/= (நம்பத்தகுந்த வங்கி ஊடாக எடுக்கப்பட்ட ஆவணம்/ VFS-ல் Refurs ஆகாத ஆவணம்).
* 2 விதிமுறைகளில் அமைந்த திட்டம்
  I. வீசாக்கு முன் கட்டணம்.
  II. வீசாக்குப் பின் கட்டணம்.
* கல்லூரிக் கட்டணம்- 2500 £

UK இல் 20க்கு மேற்பட்ட கல்லூரிகளுடனான தொடர்பு/ வட மாகாண மக்களின் நம்பிக்கை மிக்க தெரிவு

தொடர்பு:- European College of higher Studies
315 1/2, Parameshwara Junction,
Palaly Road,Jaffna.
Tel: 0773537378, 0776327623,0213734747
(சி-2826)


## புலிகளை விடுதலை செய்ய...

துமிடத்து அவர்களை விடுக்க முடியும். ஏற்கெனவே ஆயிரக்கணக்கானவர்கள் இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்களது விடுதலையை விரைவுபடுத்துமாறு நான் ஆலோசனை வழங்கிய போதிலும் வேறு தரப்பிலிருந்து அப்படிச் செய்ய வேண்டாம் என அறிவுரை வழங்கப்பட்டது.

இதன்போது யார் அவ்வாறு அறிவுரை வழங்கினர் என பி.பி.சி. செய்தியாளர் கேள்வி எழுப்பிய போது, உங்களுடைய ஆட்கள் தான் என பதிலளித்ததுடன் யார் என்று திட்டவட்டமாக ஜனாதிபதி கூறவில்லை.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி,

அதிகாரப் பகிர்வு தொடர்பாக கால வரையறை ஏதும் கிடையாது. அறுபது ஆண்டுகளாக நீடிக்கும் பிரச்சினைக்கு ஓரிரு நாட்களில் தீர்வு வழங்கவேண்டும் என்று கருத முடியாது. அதிகாரப் பகிர்வு விடயத்தில் மாகாண சபைகளுக்குப் பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட மாட்டாது. 13ஆவது திருத்தச் சட்டத்தில் காணி அதிகாரம் ஏற்கெனவே உள்ளடக்கப்பட்டுள்ளது. தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி உரிய தீர்வு காணப்படும்.

வட மாகாணசபைத் தேர்தல் அங்குள்ள வாக்காளர்கள் பதிவு பூர்த்தியானதும் உடனடியாக நடத்தப்படும். இந்திய அரசாங்கத்தால் உறுதியளிக்கப்பட்ட 50ஆயிரம் வீடுகளில் ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கான நிலப்பரப்பு கிளிநொச்சியில் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கான பணிகள் எதிர்வரும் ஜூலை மாதத்தில் ஆரம்பமாகும். மீதமுள்ள 49ஆயிரம் வீடுகளின் நிர்மாணம் தொடர்பாக இந்திய அமைச்சரவையின் அனுமதி பெறவேண்டியுள்ளது. அது விரைவில் கிடைக்கும் என நம்புகிறேன்.

49 ஆயிரம் வீடுகள் என்பது பெருந்தொகையாக காணப்படுகின்றமையாலேயே இந்திய அமைச்சரவையின் அனுமதி பெற வேண்டியுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பதவிக் காலத்தை நீடிக்குமாறு என்னிடம் கோரிக்கை விடுக்கப்படவில்லை. தவணைக்காலத்தை நீக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டால் அதற்கு ஒப்புதல் வழங்கப்படும். நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்பாக சாட்சியமளிக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழுவிற்கும் ஏனையோருக்கும் விடுக்கப்பட்டதைப் போன்றே பகிரங்க அழைப்பு விடுக்கப்பட்டது.

தமிழ் இளைஞர்களை இராணுவத்தில் இணைத்துக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (ந-5)

## விருப்பு வாக்...

கையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் உரையாற்றிய அவர், விரைவில் உள்ளூராட்சி சபைகள் தொடர்பான புதிய சட்ட மூலத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என குறிப்பிட்டார். அதே வேளை எதிர்வரும் தேர்தல்களில் விருப்புவாக்கு மோதல்கள் இருக்காது எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சுட்டிக் காட்டினார். (ந-5)

## பகிடிவதையில்...

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு வந்திருந்தனர்.

இவர்கள் கொடுத்த தகவலினை அடுத்தே பொலிஸார் இந்த மாணவர்களை கைது செய்துள்ளனர்.

மேலும் நீதிபதியின் தீர்ப்பையடுத்து நீதிமன்ற வளாகத்தில் சம்பந்தப்பட்ட மாணவன் ஒருவர் மயக்கமடைந்தார். (ந-6)

## யாழ்.நகரில்...

பலலட்சம்ரூபாய்பெறுமதியானதுணி வகைகள் தீயால் அழிவடைந்தன. இத் தீவிபத்திற்கு விசமிகள் காரணமாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-6,5)

## மீனவர்கள் பிரச்...

தூதுக்குழுவின் தலைவர் நேற்று இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் நிருபமா ராவையும் சந்தித்துப் பேசினார்.

இக் கூட்டத்தின் பின்னர் இரு தரப்பினரும் விடுத்த கூட்டறிக்கை ஒன்றில் இக் கூட்டத்தை வரவேற்பதாக தெரிவித்துள்ளனர். (ந-5)


திருமறைக் கலாமன்றம்
கலைத்தூது அழகியல் கல்லூரி
Basic German Course for Beginners
ஜேர்மன் மொழி ஆரம்பநிலை வகுப்புகள்
ஆரம்பம் : 23. 04. 2011
தொடர்புகளுக்கு:
திருமறைக் கலாமன்றம்
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212222393
(C-2818)


## ஆன்மீக வினாவிடை போட்டி



### சுருக்கமான விடை தருக

1. கத்தோலிக்க மதத்தில் ஒரு குடும்பத்தில் ஒருவர் மதகுருவாகிறார். இது ஏன் சைவசமயத்தில் கடைப்பிடிக்கப்படுவதில்லை?
2. கொல்கத்தா ராமகிருஷ்ணர் மடம், மிஷனில் எவ்வளவு Trustees உண்டு? அவர்களது பெயர்களைத் தருக?
3. ராமகிருஷ்ணர் மடம், மிஷன் உலகளாவிய தலைவர்களின் பெயர்களைத் தருக? (இதுவரை)
4. ராமகிருஷ்ணர் மடம், மிஷனில் பொதுக் காரியதரிசியாக எவர் பல வருடங்கள் பதவி வகித்தார்? இவரைப்பற்றி ஒரு சுவாரஸ்சியமான நிகழ்வுண்டு அது என்ன?
5. சுவாமி விபுலாணந்தர் ராமகிருஷ்ண மிஷனை எந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஸ்தாபித்தார்? இவர் ஏன் யாழ்ப்பாணத்தை விட்டுச் சென்றார்? விபரமாகத் தருக?
6. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு ராமகிருஷ்ண மிஷன் துறவி தமிழ்நாட்டில் பணிபுரிந்து சமாதி எய்தினார். இவரது பெயரைத் தருக?
7. திருவாசகம் எத்தனை முறை பாடப்பெற்றது? இதனை எழுதியவர் யார்?
8. ஏன் யாழ்ப்பாணத்தில் ஒருவரும் துறவிகளாக வர விரும்புவதில்லை?
9. சுவாமி விவேகானந்தரின் சொற்பொழிவுகளை சுருக்கெழுத்தில் (Short hand) எடுத்தவர் யார்? இவர் எங்கு இறந்தார்? இவரது சமாதிக்கல் எங்குள்ளது?
10. தவத்திரு யோகர் சுவாமிகளின் சீடர்களின் பெயர்களைத் தருக? இவர்களைப் பற்றி தனித்தனி குறிப்புத் தருக?
11. தவத்திரு யோகர் சுவாமிகளின் உன்னத வாழ்வில் தங்களுக்கு தெரிந்த கருத்துக்களையும் அவரது அபிலாஷைகளையும் தெளிவாகத் தருக?

**இதற்குரிய விடைகளை தெளிவாக எழுதி அனுப்பவேண்டிய முகவரி:**

**செயலாளர்,**
**ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா**
**சேவாச்சிரமம், பருத்தித்துறை.**

**முடிவுத் திகதி: 31.05.2011**
**எவரும் பங்குபெறலாம்.**
(சி-2816)

## மரண அறிவித்தல்

## கனகரத்தினம் சரஸ்வதி



புலோலி வடகிழக்கு புலோலி சந்தா தோட்டத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம்-சரஸ்வதி நேற்று 29.03.2011 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 30.03.2011 இன்று புதன்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புலோலி வடகிழக்கு, புலோலி,**
**சந்தாதோட்டம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
(4250)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.03.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org